டிசம்பர் 23 - டிசம்பர் 29, 2007 December 23 - December 29, 2007 பக்கங்கள் - 28
யாழ். விலை 40.00
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்

PUBLIC LIBRARY
JAFFNA
SPECIAL COLLECTION



## சமஷ்டி: இந்தியா மிகக் கஷ்டப்பட்டு பெற்றுத்தந்த மாகாண சபையை விட மேம்பட்ட தீர்வு!

## முன்னறிவிப்பு இன்றியே செயலிழக்கப்போகும் அரசு - புலிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கை

# முன்னறிவிப்பு இன்றியே செயலிழக்கப்போகும் அரசு - புலிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கை

இன்னும் 50 நாள்களில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போர்நிறுத்த உடன்படிக்கை ஆறாண்டைக் கடக்கப் போகின்றது.

அதற்கு முன்பே நாலாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகிவிடுமோ என்ற எதிர்பார்ப்பே சகல மட்டங்களிலும் காணப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல் தொடர்ந்தால் வேறுவழியின்றி அந்த அமைப்பைத் தடைசெய்வேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.

போரை முன்னெடுக்கும் அரசின் - இராணுவத்தின் மமதைக்குத் தக்க பதிலடி கொடுப்போம் என விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் சூளுரைத்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ 2005 ஆம்



ஆண்டு நவம்பர் மாதம் பதவி யேற்ற பின்னர், சமாதான சூழல் ஒரு சில மாதங்கள் நிலவிய போதும், அவர் பதவியேற்ற காலத்தில் இருந்து மோதல்கள் மெல்ல மெல்ல ஆரம்பித்து இன்று நிழல் யுத்தம் ஒன்று நடந்து கொண்டிருக்கின்றது.

வடக்கு- கிழக்கில் ஏன் கொழும்பில் கூட தமிழ் மக்களுக்கு எதிரான இனச் சுத்திகரிப்புத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

என்றுமில்லாதவாறு ஆள் கடத்தல், கொலைகள், கப்பம் கோரல், கைதுகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. நாள் ஒன்றுக்கு ஆறு தமிழர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆறுக்கு மேற்பட்டவர்கள் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். உயிர் அச்சுறுத்தல் என 3, 4 பேர் நீதிமன்றங்களில் சரண் அடைந்து கொண்டிருக்கின்றனர்.

மறுபுறம் தினமும் நடக்கும் மோதல்களில் 20 புலிகள் பலி, 30 புலிகள் பலி என அரசுத் தரப்பில் இருந்து செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்த விவரங்களை உற்று நோக்கும் போது தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புப் போர் ஒன்று கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது என்றே கருதவேண்டியுள்ளது.

83 ஆம் ஆண்டில் தொடங்கி 60ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டுவிட்டனர் என சர்வதேச ஏஜென்ஸிகளின் செய்தியில் அடிக்குறிப்பு வெளியிடுவது வழமையாகி விட்டது.

இந்த இன அழிப்புப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து நிரந்தர சமாதான சூழல் இந்த நாட்டில் நிலவவேண்டும் என்பதற்காகவே சர்வதேசத்தின் பிரசன்னத்தில் ஒப்பந்தம் ஒன்று 2002 ஆம் ஆண்டு கைச்சாத்தானது.

அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் துப்பாக்கிகளுக்கு, ஷெல்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது. தெற்கு - வடக்கு - கிழக்கு என்ற பேதம் இன்றி நாட்டில் வாழும் சகல இன, மொழி மக்களுக்கும் இடையில் சௌஜன்ன நிலை தோற்றுவிக்கப்பட்டது.

பயங்கரவாத அமைப்பாக பிரகடனம் செய்யப்பட்டிருந்த விடுதலைப்புலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டு, அவர்களுடன் படைவலுச் சமநிலையில் அரசாங்கம் பேச்சு நடத்தியது.

நாடுமாறி நாடு என ஆறு கட்டப்பேச்சுக்கள் இடம்பெற்று இணக்கப்பாடுகள் காணப்பட்ட போதும், இன்று மீண்டும் 2002ஆம் ஆண்டு யுத்த நிலைக்குள் நாடு வந்து நிற்கிறது.

இன மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் பேச்சுக்களில் ஒருதரப்பான- தமிழ் மக்களுக்கான தரப்பான- விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் தடை செய்ய எடுக்கப்பட்டிருக்கும் முடிவு மீண்டும் முழு அளவிலான யுத்தம் ஒன்றுக்குள் நாடு தள்ளப்படும் என்பதற்குக் கட்டியம் கூறி நிற்கின்றது.

1998 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி தலாதாமாளிகையில் நடந்த தாக்குதலுடன் விடுதலைப்புலிகளைத் தொடர்புபடுத்தி சந்திரிகா 1998 ஜனவரி 26 ஆம் திகதி விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்திருந்தார்.

2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திட்டபோது ரணில் அரசு அந்த அமைப்பு மீதான தடையை நீக்கியிருந்தது.

கொழும்பில் நுகேகொடையில் நடந்த தாக்குதல், அனுராதபுரம் விமானத்தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஆகியவற்றின் போது, புலிகளை தடைசெய்யப் போவதாக அரசுத் தரப்பில் இருந்து - அமைச்சர்கள் மட்டத்தில் இருந்து - தகவல்கள் வெளிவந்தன.

இப்போது அரசு உயர் மட்டத்தில் இருந்து - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து அத் தகவல் வெளிவந்துள்ளது.

''போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் செயற்பாட்டைச் சுருங்கச் செய்தும் அவர்களின் செயற்பாடுகளை தடுத்தும் அரசாங்கம் போரை முன்னெடுத்து வருகின்றது.

''ஸ்ரீலங்கா அரசாங்கம் போரின் மீது வெறிகொண்டுள்ளது. வன்னி மண்ணைக் கபளீகரம் செய்து தமிழின அழிப்பைப் பூர்த்தி செய்யலாம் எனக் கருதுகிறது.

''இராணுவத்தின் இந்த மமதைக்கு தக்க பதிலடி கொடுப்போம்''

இப்படி விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் கருத்து வெளியிட்டிருந்தார்.

அவர் கருத்து வெளியான அன்றே, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா முக்கிய கருத்து ஒன்றையும் முன்வைத்துள்ளார்.

''தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை கீழே வைக்கும்வரை அவர்கள் மீதான இராணுவத்தினரின் தாக்குதல்கள் தொடரும்; நிறுத்தப்படமாட்டாது.

''அது மட்டுமன்றி எதிர்காலத்தில் எமது தாக்குதல்கள் வேகம் அடையும். மும்முனைகளில் தாக்குதல் நடத்தி வடக்கை மீட்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.''

- இப்படி அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இருதரப்புத் தளபதிகளின் கருத்துக்களும் வெளியாகியுள்ள நிலையில் -

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நத்தார் விருந்து வைபவத்தில் வைத்து முக்கியமான - இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

''இன்னும் இரண்டு, மூன்று தாக்குதல்கள் நடந்தால், எமக்கு வேறு மாற்று மார்க்கம் ஏதும் இருக்காது - புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதைத்தவிர.

''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் ஒடுக்கினால் மட்டுமே சமாதானம் சாத்தியமாகும்'' என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

நடைமுறையில் உள்ள போர் நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரவேண்டும். புலிகள் மீதான தாக்குதல்களைத் தீவிரமாக்க வேண்டும் எனக்குரல் கொடுத்துவரும் ஜே.வி.பியினரின் கோரிக்கைகளுக்கு அரசின் தலைமை சம்மதம் தெரிவித்ததன் பின்னணியிலேயே, ஜே.வி.பி. யுத்த வரவு -செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் இருந்து பின்வாங்கியதாக செய்திகள் கசிந்துவரும் நிலையில் -

ஜனாதிபதியின் புலிகளின் தடை குறித்த தகவல் வெளியாகியுள்ளது என நோக்கர்கள் கருதுகின்றனர்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக தற்சமயம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் யுத்த நிகழ்ச்சி நிரலின் ஓர் அங்கமாகவே புலிகள் மீதான தடைவரப் போகின்றது என்று கூறுகின்றனர் அரசியல் நோக்கர்கள்.

எதுவாக இருந்தாலும் புலிகள் மீது தடைகொண்டு வரப்பட்டால், 14 நாள்களுக்கு முன்பாக நோர்வேக்கு முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும் என்ற யுத்தநிறுத்த உடன்படிக்கையின் சரத்துக்கு வேலை இருக்காது. தானாகவே உடன்பாடு செயலிழந்துவிடும்.

அனுசரணைப்பணியில் இருந்து நோர்வே வெளியேறிவிடும். கண்காணிப்புப் பணியில் இருந்து நோர்டிக் நாடுகள் வெளியேறிவிடும்.

தெற்குப் பேரினவாதிகளின் கனவும் நனவாகிவிடும். மீண்டும் சின்னஞ்சிறிய நாடு யுத்தத்தில் மூழ்கிவிடும்.

இந்த நிலையைத் தவிர்க்க முடியுமா?

இலங்கை விவகாரத்தில் தலையிட்டு, தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் போகின்றோம் என முன்வந்து நிற்கும் சர்வதேசத்தால்தான் இந்த நிலையை தடுக்கமுடியும்.

இலங்கை விவகாரத்தில் அக்கறை காட்டி நிற்கும் இணைத்தலைமை நாடுகளோ, இந்தியாவோ விரைந்து செயற்பட



முன்வரும் போதுதான் இந்த அபாய நிலை தவிர்க்கப்படும்.

வெறுமனே அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்காமல், இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம் அரங்கேறுவதை தடுக்க சர்வதேசத்தின் பங்கு முக்கியமாகஉள்ளது.

இந்தச் செய்தியை, கடந்த மாவீரர் தின உரையின் மூலம் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சர்வதேசத்திடம் விடுத்திருந்தார்.

''தமிழரின் தேசிய பிரச்சினையில் சர்வதேச நாடுகளின் நகர்வுகளும் நடவடிக்கைகளும் எம்மக்களுக்கு திருப்தி தருவனவாக அமையவில்லை. இந்த நாடுகள் மீது எமது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை இன்று தகர்ந்து போயிருக்கின்றது. இந் நாடுகளின் நடுநிலைச் செயற்பாட்டிலே இன்று பெரும் கேள்விக்குறி எழுந்திருக்கின்றது'' என்று அச்செய்தியில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என சர்வதேசம் காட்டிய கரிசனையின் பின்னணியில் உருவான யுத்த நிறுத்த உடன்பாடு செம்மையாக நடைமுறைப்படுத்தப் படுவதற்கு- சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதற்கு - சர்வதேசம் தனது பங்களிப்பை - அழுத்தத்தை - வழங்க வேண்டும்.

சர்வதேசத்திடம் இருந்து தெற்கின் அரசியல் தலைமைகளுக்கு அழுத்தங்கள் வந்தால் மட்டுமே, அவை நாட்டில் உருவாகப் போகும் அபாய நிலையை உணர்வார்கள். அதன் மூலம் நாட்டில் உருவாகப் போகும் அபாயநிலையை நிறுத்துவார்கள்.

சர்வதேசத்தில் இருந்து இலங்கைக்கு அபாய எச்சரிக்கை வருமா? அதன் மூலம் அமைதி நிலை திரும்புமா? அதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**யாழவன்**

# குடாநாட்டுச் சந்தைகள் தரகர்கள் வசம்! விவசாய சம்மேளனங்கள் நித்திரையா?

யாழ்.குடாநாட்டு விவசாயிகளைக் காப்பாற்ற-பாதுகாக்க எந்தவொரு ஆக்க பூர்வ மான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமை குறித்து விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விவசாய சம்மேளனங்கள் இருக்கின்ற போதிலும்அவைகளும் பாதிக்கப்படும் விவசாயிகளின் நலனில் அக்கறையெடுத்து செயற்படுவதில்லை என்று கூறத் தோன்றுகின்றது.

இத்தகைய விவசாய அமைப்புக்கள் பலவற்றின் தலைமையை அரச ஊழியர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்களும், ஆங்கிலம் பேசும் நாகரிகமானவர்களும் பெற்றுக் கொண்டமையால் விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் நடவடிக்கைகளே இடம் பெறுவதாகப் பாதிக்கப்படும் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

கள்ளச் சந்தையில் கூடிய விலை கொடுத்து விதைகள், உரங்கள் , மருந்து வகைகள் எனப் பெற்று தோட்டத்தில் பயிரிட்டு பொருள்களைச் சந்தைக்குக் கொண்டு சென்றால் அங்கு விவசாயியின் உற்பத்திப் பொருளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை.

விவசாயிக்கு உரிய விலை கிடைக்காத போதிலும் நுகர்வோருக்கும் பொருள்கள் மலிவாகக் கிடைப்பதில்லை. இடையில் நிற்கும் வியாபாரி கொள்விலையில் இருந்து நூறு வீதம் முதல் நூற்றி ஐம்பது வீதம் வரை இலாபம் வைத்து, விற்றுச் சுருட்டிக் கொண்டு செல்லும் நிலையே காணப்படுகின்றது.

சுன்னாகம், மருதனார்மடம், திருநெல்வேலி, சங்கானை, சாவகச்சேரி சந்தைகள் என அனைத்து சந்தைகளிலும் விவசாயிகளின் பொருள்களில் அதிக இலாபத்தை இடையில் நிற்கும் வியாபாரிகள் பெற்று வருகின்றமையைக் கண்ணால் காணக்கூடியதாக இருக்கின்றது.

விவசாயிகளின் பொருள்களுக்குக் கழிவு என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால் எந்தப் பொருளுக்குக் கழிவு வழங்குவது?, ஏன் வழங்குவது? என்ற எந்த வகையான கட்டுப்பாடுகளுமின்றி இந்தக் கழிவு மூலம் முதலாவது சுரண்டல் ஆரம்பமாகின்றது.

ஒரு காலகட்டத்தில் மரவள்ளி, கரணைக் கிழங்கு போன்ற கிழங்கு வகைகளுக்கு 15 கிலோவுக்கு ஒரு கிலோ கழிவாகக் கழிக்கப்பட்டு வந்தது. பின்னர் கால ஓட்டத்தில் இந்தக் கழிவு என்பது 10 கிலோவுக்கு ஒரு கிலோ கழிவு என்ற நிலைமைக்கு சென்றது. நிலத்தின் கீழ் இருந்து அகழ்ந்தெடுக்கும் பொருள் களுக்கென வழங்கப்பட்ட கழிவு அண்மைக்காலத்தில் அனைத்துப்

## — வில்லவன் —

பொருள்களுக்கும் எனத் தொற்றிக் கொண்டது.

பாவற்காய், கத்தரிக்காய், பயற்றங்காய், பச்சைமிளகாய் என எல்லாவற்றிற்கும் கழிவு என்ற நோய் தொற்றி இன்று சந்தைகளில் என்ன பொருளாக இருந்தாலும் கழிவு வியாபாரிகளினால் திட்டமிடப்பட்டுக் கழிக்கப்பட்டு வருகின்றது.

சந்தையில் தற்போது மரக்கறிகளின் விலை மிகவும் உயர்ந்து காணப்படுகின்றது. இந்நிலையில் குறிப்பிட்ட ஒரு பொருளின் கொள்விலை 150 ரூபா எனக் கொள்வோம். அந்தப் பொருளில் 20 கிலோவைச் சந்தைக்குக் கொண்டு வருபவர் 2 கிலோவை கண்டிப்பாகக் கழிவு கொடுக்க வேண்டும்.

இதன் மூலம் குறிப்பிட்ட வியாபாரி நேரடியாக 2 கிலோ பொருளிலும் 300 ரூபாவை இலாபமாக சுருட்டிக் கொள்கின்றார். இதன் பின்னர் அவர் 20 கிலோ பொருளையும் இலாபம் வைத்து விற்பாராக இருந்தால் அவ ருடைய வருமானம் எவ்வளவு வரும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

அடுத்தபடியாக பொருள்களை ஏலத்தில் விலை கேட்டுப் பெற்றுக் கொள்ளும் வியாபாரி பின்னர் கிலோவுக்கு 5 ரூபாவோ 10 ரூபாவோ கழித்துக் கொண்டே கொடுப்பனவை வழங்குகின்றார். இதன் பின்னர் சந்தைக் குத்தகைப் பணத்தையும் விவசாயி தானே செலுத்துகின்றார்.

மீன் சந்தைகளைப் பொறுத்தவரையில் ஏலம் கூறப்படும்போதே குறிப்பிட்ட தொகை கழிவு எனக் கூறி அது கொள்வனவாளரை சென்றடையும். அது தனிப்பட்டவராகவும் இருக்கலாம் வியாபாரியாகவும் இருக்கலாம். மிகுதிப் பணமும் ஏலங் கூறுபவரினால் பெறப்பட்டு உரியவரிடம் வழங்கப்படுகின்றது.



மரக்கறிச் சந்தைகளில் ஏலம் கூறுவோர் தமது தரகுப் பணத்தைப் பெற்றுக் கொள்வதுடன் பிரச்சினை முடிவடைந்து வருகின்றது. விவசாயிகளின் பணம் ஏலம் கூறிய விலையில் வழங்கப்படுகின்றதா? அல்லது

(23 ஆம் பக்கம் பார்க்க)


# அறிமுகமாகிறது...

# பண வெகுமதி உள்ளடங்கிய இலங்கையின் ஒரேயொரு நிலையான வைப்பு!

இதுதான் வழிமுறை. நீங்கள் அபான்ஸ் ஃபினான்ஸில் நிலையான வைப்புக் கணக்கை ஆரம்பித்த உடனேயே உங்கள் மொத்த முதலீட்டில் 0.5%* உங்களுக்கு முற்றிலும் வெகுமதியாக வழங்கப்படும். அதுமட்டுமல்ல, முதிர்ச்சியின்போது ஒன்றுசேரும் மொத்த வட்டியில் 10% தொகையையும் நாம் உங்களுக்கு உடனடியாக வழங்குவோம். ஆகவே, உங்கள் முதலீடு பாதுகாப்பாகப் பெருகுவதை உறுதிப்படுத்தும் அதேவேளையில், எதிர்பாராத பண வெகுமதிகளையும் இல்லத்திற்கு எடுத்துச்செல்லலாம். நிலையான வைப்பு* ஒன்றிலிருந்து உங்களுக்கு இதைவிட வேறென்ன வேண்டும்? இன்றே எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

| காலம் | முதிர்ச்சியில் | | மாதாந்தம் | |
|---|---|---|---|---|
| | எளிய வட்டி | வ.தே.வீ. | எளிய வட்டி | வ.தே.வீ. |
| 1 மாதம் | 20.25 % | 22.24% | - | - |
| 3 மாதங்கள் | 21.00% | 22.71% | 18.25% | 19.86% |
| 6 மாதங்கள் | 21.25% | 22.38% | 18.50% | 20.15% |
| 12 மாதங்கள் | 21.46% | 21.46% | 18.75% | 20.45% |
| 24 மாதங்கள் | 21.75% | 19.79% | 18.85% | 20.57% |
| 36 மாதங்கள் | 22.00% | 18.36% | 18.95% | 20.69% |
| 48 மாதங்கள் | 22.25% | 17.25% | 19.00% | 20.75% |
| 60 மாதங்கள் | 24.25% | 17.21% | 19.10% | 20.86% |

வ.தே.வீ = வருடாந்த தேறிய வீதம்

*நிபந்தனைகள் உண்டு

| நிதித் தகவல்கள் | | |
|---|---|---|
| | 31/03/07 | 30/09/07 |
| பங்கு மூலதனம் ரூ. | 370,000,000 | 370,000,000 |
| ஒதுக்கங்கள் | 26,111,226 | 47,669,930 |
| வரிக்கு முன் இலாபம் | 15,697,494 | 21,560,000 |
| மொத்த வைப்பு அடித்தளம் | - | 86,072,515 |

கூட்டிணைக்கப்பட்ட திகதி 08/04/2005
1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் பதிவுசெய்யப்பட்டது.

**பிரதான தொழிற் செயற்பாடுகள்**

- நிலையான மற்றும் சேமிப்புக் கணக்குகளில் பொதுமக்களின் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்
- வாடகைக் கொள்வனவு
- கால அடிப்படைக் கடன்கள்
- காணிச் சொத்து வியாபாரம்
- நிதிக் குத்தகை
- பாவனைச் சாதன கொள்வனவுக்கு நிதியிடல்

**பணிப்பாளர்கள் சபை**

தலைவி திருமதி அபான் பெஸ்டன்ஜி, பணிப்பாளர் திரு.பெஹ்மன் பெஸ்டன்ஜி
முகாமைப் பணிப்பாளர் திருமதி யனோ அலஸ், பணிப்பாளர் திருமதி சரோஷ் டுபாஷ், பணிப்பாளர் திரு. சோதிவடிவேல்

**அபான்ஸ் ஃபினான்ஷல் சேர்விசஸ் லிமிட்டட்**

தலைமை அலுவலகம், 400, காலி வீதி, கொழும்பு 3.
தொலைபேசி: 2375531-3 ஃபெக்ஸ்: 2375517

கிளைகள்:
அனுராதபுரம் (060 2856947), பதுளை (060 2557730), தம்புள்ளை (060 2669878),
காலி(060 2907720), கம்பஹா (060 2438602), கட்டுகஸ்தோட்டை (060 2827710), இரத்தினபுரி (0773 435709)

Abans FINANCE

Ambient

# பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக அத்வானி! வாஜ்பாய் விடைபெற்றார்!



இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் அடுத்த பிரதமர் வேட்பாளராக எல்.கே.அத்வானி அறிவிக்கப்பட்டுள்ளார். தற்போது லோக்சபாவில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கும் அத்வானி முறைப்படி அடுத்த பிரதமராவதற்கு தகுதியான ஒருவரே ஆவார்.

எனினும், மூத்த தலைவரும் முன்னாள் பிரதமருமான வாஜ்பாய் இருக்கும்வரை அத்வானியை பிரதமர் வேட்பாளராக அறிவிப்பதில் தயக்கம் நிலவிவந்தது. குறிப்பாக வயோதிபம் காரணமாக வாஜ்பாய் கட்சி நடவடிக்கைகளில் இரண்டொரு வருடங்களாக பங்குபற்றாத நிலையில் இந்த முடிவு வந்துள்ளது.

லோக்சபா தேர்தல் வர இன்னும் ஒன்றரை ஆண்டுகள் உள்ள நிலையில் பிரதமர் வேட்பாளரை இப்போதே அறிவிக்கவேண்டிய அவசிய அவசரம் என்ன என்ற கேள்வி எழுகின்றது. குஜராத்தில் முக்கியமான சட்டசபைத் தேர்தல்கள் நடைபெற்று வருவது இங்கு கவனிக்கப்படவேண்டும். அம்மாநில முதல்வர் நரேந்திரமோடி இந்து மதவாதத்தின் முதன்மையான தலைவராக தன்னைக் காட்டி வருகின்றார். மதவாதத்தை முன்வைத்து கடந்த தேர்தலிலும் அவர் வென்றது குறிப்பிடத்தக்கது. இதனால் இந்துக்கள் மத்தியில் அவதார புருஷராக அவர் காட்சியளிக்கின்றார்.

தற்போது நடந்துவரும் தேர்தலிலும் அவரே வெல்லும் அறிகுறிகள் தென்படுகின்றன. அவ்வாறு அவர் வென்றால் அவரது செல்வாக்கு மேலும் அதிகரிக்கும். இதனால் கட்சியின் அடுத்த பிரதமர் வேட்பாளராவதற்கு வாய்ப்புக்கள் அதிகரிக்கும். அதனை தவிர்க்கக் கட்சிக்குள் பலர் விரும்புகின்றனர். குறிப்பாக கட்சியின் இரண்டாம் மட்டத்தலைவர்களான முரளிமனோஹர் ஜோஷி, சுஷ்மா ஸ்வராஜ், ஜஸ்வர்த் சிங் போன்றோர் மோடியின் இமேஜ் உயர்வதை விரும்பவில்லை.

எனவே, குஜராத்தில் மோடி வென்றார் என்ற அறிவிப்பு வருவதற்கிடையில் அத்வானியை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க இவர்கள் முனைப்பாக செயற்பட்டனர். இதற்கு குறுக்கே இருந்தவர் வாஜ்பாய். அவர் உயிரோடு இருக்கும்போது அவரைக் கடந்து அத்வானியை உயர்த்துவது எப்படி என்ற சிக்கல் ஏற்பட்டது. இன்னும் ஒன்றரை வருடத்தில் லோக்சபா தேர்தல் வரும்போது வாஜ்பாயின் நிலை இன்னும் மோசமடைந்து இருக்கும். எனவே, அடுத்த பி.ஜே.பி. அரசுக்கு வாஜ்பாய் தலைமை தாங்க முடியாது என்பது தெளிவு.

எனவே, இதை வாஜ்பாயிடம் எடுத்து விளக்கப்பட்டது. வாஜ்பாயிக்கும் நரேந்திரமோடியின் தீவிர இந்து வாதம் பிடிக்கவில்லை. 2004இல் வாஜ்பாய் அரசு தேர்தலில் தோற்று பதவியிழந்தபோது தனது தோல்விக்கு காரணம் மோடியின் குஜராத் கலவரங்களே என்று வாஜ்பாய் பகிரங்கமாகக் குறிப்பிட்டார். தற்போது கூட ஹிமாசல பிரதேசத்தில் நடக்கும் தேர்தலில் பி.ஜே.பிக்கு வாக்களிக்குமாறு கோரியிருக்கும் வாஜ்பாய் குஜராத் தேர்தல் பற்றி வாயே திறக்கவில்லை. அதாவது, குஜராத்தில் மோடி வெல்வது வாஜ்பாய்க்கு உவப்பான செய்தி அல்ல. எனவே, மோடி முன்னணிக்கு வருவதற்கு தடைபோட அத்வானியை பிரதமராக அபிஷேகம் செய்வதைத் தவிர வேறுவழியே இல்லை. இதுதான் அத்வானி பிரதமராக அறிவிக்கப்பட்டதன் பின்னணி.

அத்வானியை பிரதமராக்குவதற்கு சங்க பரிவாரம் பல நிபந்தனைகள் விதித்ததன் பிறகே ஒப்புக்கொண்டது. ஜின்னா ஒரு மதவாதி அல்லர் என அத்வானி கூறியதால் சங்கபரிவாரம் ஆத்திரம் கொண்டிருந்தது. அதேநேரம் மோடி மீதும் சங்க பரிவாரத்துக்கு கோபம் உள்ளது. வெற்றி மமதையில் மோடி எவரையும் மதியாத ஒருவராகவே உள்ளார். இந்நிலையில் அவரை அடக்க இதைவிட்டால் வேறு சந்தர்ப்பம் கிடையாது.

மோடியைப் பொறுத்தவரை அவர் குஜராத்தில் தோல்வியடைந்தால் அவரது அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடும். அதாவது, அவரது தீவிர இந்துவர்தத்திற்கு விழுந்த ஓர் அடியாகவே அத்தோல்வியானது அமையும். மறுபுறம் அவர் வென்றால் அவர் உச்சத்துக்கு செல்ல வாய்ப்பாகும். அனேகமாக அவர் வெல்லும் வாய்ப்பே அதிகமுள்ளது. ஆனால், கடந்த முறை படுதோல்வி கண்ட காங்கிரஸ் இந்தமுறை தேர்தலில் ஓரளவு முன்னேறி உள்ளது.

எனவே, மோடி இந்தமுறை வென்றாலும் கடந்த முறை வென்றது போல் பாரிய வெற்றி பெற முடியாது. குறிப்பாக பாரதிய ஜனதா கட்சியின் உள்கட்சிப்பூசலால் மோடியின் வாய்ப்புக்கள் பெருமளவு குறைந்துள்ளன. மோடியை எதிர்க்கும் பி.ஜே.பியினர் அவருக்கு முக்கிய சவாலாக முளைத்துள்ளனர்.

**என்.சுரேந்திரஜித்**

இதேவேளை, குஜராத்தில் பொலிஸால் சுட்டுக்கொல்லப்பட்ட ஒரு முஸ்லிமின் கொலை சரியானதே என மோடி தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் கூறியது பெரும் சிக்கலில் அவரை மாட்டியுள்ளது. இது குறித்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் நிலையில் மோடி இவ்வாறு கூறியது நீதிமன்ற அவமதிப்பாகும் என அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது. இதனையடுத்து அவருக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அவ்வாறு வழக்கில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் முதல்வராகப் பதவிவகிப்பதில் சிக்கல் ஏற்படும். இவ்வாறு பல்வேறு சிக்கல்களில் மாட்டியுள்ள நரேந்திரமோடி சளைக்காமல் போராடி வருகிறார். அவரது தலைமையில் கட்சி மாநிலத் தேர்தலில் வெற்றிபெற்றால் அவரது பிடி கட்சியில் மேலும் இறுகும். தீவிர இந்துவாத கொள்கையில் மேலும் தீவிரமாக பின்பற்ற பாரதிய ஜனதாக் கட்சி நிர்ப்பந்திக்கப்படும்.

# அகதி முகாம்களில் தவிக்கும் மூதூர் கிழக்கு மக்கள்!!

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் 42 கிராமசேவகர் பிரிவுகள் உள்ளன. இவற்றில் 11 கிராம சேவகர் பிரிவுகள் மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் இருக்கின்றன. அவை சேனையூர், கட்டை பறிச்சான் வடக்கு, கட்டைபறிச்சான் தெற்கு, சம்பூர் வடக்கு, சம்பூர் மேற்கு, கூனித்தீவு, நவரட்ணபுரம், நல்லூர், பாட்டாளிபுரம், பள்ளிக்குடியிருப்பு, கடற்கரைச்சேனை என்பவை ஆகும்.

இப்பிரதேசத்தில் 24இற்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. 4 ஆயிரத்து 600 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் இருபதாயிரம் தமிழ் மக்கள் இங்கு வாழ்ந்து வந்தனர்.

கடந்த ஆண்டு இப்பிரதேசத்தை அரச படையினர் கைப்பற்றினர். அதன் பின்னர் மூதூர் கிழக்குப் பிரதேசத்தை அரசாங்கம் அதிஉயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியது. அதனால் மூதூர் கிழக்கு மக்கள் இன்றுவரை அகதிகளாக மட்டக்களப்பில் உள்ள இடைத்தங்கல் முகாம்களிலும், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தற்காலிக முகாம்களிலும், கிழக்கில் உள்ள உறவினர் வீடுகளிலும் தங்கி வாழ்கின்றனர். இது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மாவீரர் தின உரையிலும் குறிப்பிடத் தவறவில்லை.

மூதூர் கிழக்கு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் அகதி முகாம்களில் எத்தனையோ துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். முகாமுக்கு வருவோரிடம் ''ஐயா பணம் இருந்தால் தந்துவிட்டுப் போங்கள்;



பிள்ளைக்குப் பால் வாங்கிக் கொடுக்கணும்'' எனக் கேட்கும் அளவுக்கு நிலைமை மோசமாகியிருக்கின்றது.

நாம் வளர்த்த கால்நடைகளுக்கு என்ன நடந்ததோ, வயல் நிலம் எப்படியிருக்குமோ, வீடு எப்படி இருக்குமோ என யோசித்து நித்தம் கண்ணீர் வடிக்கும் பலரை நான் நேரடியாக அகதிமுகாம்களில் காணமுடிந்தது. இவர்களுக்கு வேதனைகள் மாத்திரமே எஞ்சியிருக்கின்றன.

கிளிவெட்டியிலுள்ள இடைத்தங்கல் முகாமில் வாழும் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இம்மக்களில் சிலருடன் உரையாடியபோது அவர்கள் குறிப்பிட்ட விடயங்கள் எமது மனதைக் கரைய வைக்கின்றன.

''இந்த முகாமில் ஒருசில பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் சமையலுக்குத் தேவையான பல பொருட்களை நாம்தான் தேடிக்கொள்ள வேண்டும். எம்மால் மண்ணெண்ணெய் வாங்க முடியாது. சமையலுக்கு விறகு

**மூதூர் கிழக்கான்**

தேடுவதும் கடினம். இவ்வளவு நாளும் மரங்களை வெட்டிக் காயவைத்துப் பயன்படுத்தினோம். இப்போது அவையும் முடிந்துவிட்டன. இங்குள்ளவர்களுக்கு தொழில் இல்லாததால் எவ்வித வருமானமும் இல்லை. பிள்ளைகளுக்கு போதிய சத்துணவும் வழங்க முடியவில்லை. தகரக் கொட்டகைகளில் இருப்பது மிகவும் கடினம். மழை பெய்தால் ஒழுகுகிறது. தண்ணீர் தட்டுப்பாடு ஒருபுறம். குளிப்பதற்கு தண்ணீர் இல்லை. தூர இடங்களுக்குச் சென்றுதான் குளிக்கவேண்டும். அப்படி சென்று யாரிடமும் பிடிபட்டால் தாம் பொறுப்பல்ல என பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகின்றனர். இங்கு தங்கியிருக்க எமக்கு அச்சமாகவுள்ளது. எம்மை எமது சொந்த இடங்களில் குடியமர்த்தவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு'' -இப்படி இம்மக்கள் கூறுகின்றனர்.

PUBLIC LIBRARY JAFFNA SPECIAL COLLECTION



# மனிதன் மீது பூமி தொடங்கும் போர்!

அருண்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

1914 இல் இருந்து 1918 வரை நடந்த முதலாம் உலக மகாயுத்தத்தை அறிந்திருக்கின்றோம். 1939 முதல் 1945 வரை நடைபெற்று முடிந்த இரண்டாம் உலக மகா யுத்தம் பற்றியும் தெரிந்திருக்கின்றோம். வளைகுடா யுத்தத்தினால் ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களை அனுபவித்திருக்கிறோம். யுத்தம் என்றால் யுத்தத்தில் ஈடுபட்டு வரும் நாடுகளுக்கு மட்டும் பாதிப்பில்லை. உலகத்துக்கே பாதிப்பு. ஆனாலும், யுத்தத்தின் பாதிப்புக்களை விட ஒரு சில நிமிடங்களில் பல லட்சம் மக்களை காவுகொள்ளும் இயற்கை அனர்த்தங்களே இனிவரும் காலப்பகுதியில் உலகை ஆட்டிவைக்கப் போகின்றன. இதற்கு உதாரணமாக, 2004 டிசம்பர் 26ஆம் திகதி உலகையே அலற வைத்த சுனாமிப் பேரலை இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவுகளில் ஏற்பட்டு 2 லட்சத்துக்கும் அதிகமான உயிர்களைக் காவு கொண்டதை எவரும் மறந்திருக்க மாட்டார்கள். அதன் பாதிப்புகளை அதிகம் சந்தித்த



நாடுகளில் இலங்கையும் ஒன்று.

அது மட்டுமல்ல, உலகத்திலேயே மிகவும் பாதுகாப்பான நாடு என்று வர்ணிக்கப்படும் அமெரிக்கா கூட 2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் ஏற்பட்ட 'கத்தரினா' சூறாவளியை சமாளிக்க முடியாமல் திண்டாடியதை நாம் மறந்துவிட முடியாது.

வழக்கமாக மழை என்றால் ஆனந்தம் தான். ஆனால், இன்று மழை என்றால் பயம். வெள்ளப் பெருக்குகள் மூலம் பல்லாயிரக் கணக்கான உயிர்களை பலி வாங்கும் நிலைதான் யதார்த்தம்.

இவை எல்லாவற்றுக்கும் மனித செயற்பாடுகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ள காலநிலை மாறுதல்களுக்கு பூமி வழங்கும் பதில் தான் இது. நாம் பூமிக்கு எதிராகச் செயல்படுவதற்கு அது எம் மீது தொடுக்கும் யுத்தம் என்றே இதனைச் சொல்லலாம்.

மனித செயற்பாடுகளினால் வெளியாக்கப்படுகின்ற பசுங்கூட (பச்சை வீட்டு வாயுக்கள்) வாயுக்களான கரியமில வாயு, மெதேன் வாயு, நைட்ரஸ் ஒக்சைட் ஆகியவற்றின் அதி மிக வெளியேற்றத்தால் காலநிலையில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. இயற்கையில் இருக்க வேண்டிய அளவைவிட பசுங்கூட வாயுக்களின் வெளியேற்றம் அதிகமாகின்றபோது பூமி வெப்பமடைகின்றது. 1970 களில் இருந்து பூமியின் வெப்பநிலை சராசரியாக 4 டிகிரி செல்சியஸ் உயர்ந்துள்ளது. பசுங்கூட வாயுக்களின் அதிமிகு வெளியேற்றத்தால் எதிர்வரும் காலங்களில் வெப்பநிலை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்வு கூறப்படுகின்றது.

இந்த மாற்றத்துக்கு மனிதனின் செயற்பாடுகளே முக்கிய காரணமாக அமைகின்றன.

விவசாய நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் இரசாயன வகைகள், அதிகரித்த வாகனப் பாவனையால் அதிலிருந்து வெளியேறும் கழிவுகள் போன்றவற்றாலும் -

அணு ஆயுத உற்பத்தி, அதிகரித்த சனத்தொகை வளர்ச்சி வீதம் காரணமாக சாதாரணமாக இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டமை போன்றவற்றாலும் மழைவீழ்ச்சி குறைவடைந்து அதிக வெப்பம் ஏற்படுகின்றது.

உலகிலே ஐரோப்பாக் கண்டத்திலேயே கூடுதலான பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஏனெனில், முக்கிய தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றில் இருந்து வெளிவிடும் பசுங்கூட வாயுக்களின் ($CO_2$, $N_2O$, $CH_4$, ETC) அளவு அதிகரித்ததன் காரணமாக சென்ற வருடம் எதிர்கொள்ளப்பட்ட கடும் வெப்பநிலையுடன் சீரற்ற காலநிலை எதிர்காலத்திலும் தீவிரமடையும் என்றும் இதனால் அதிகளவு மரணங்கள் சம்பவிக்கும் என்றும், மக்கள் புகை பிடிக்காமலேயே சுவாசப்பை புற்றுநோய்க்கு ஆளாவர் என்றும் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகமும் மற்றும் வானிலை ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து நடத்திய ஆய்வுகளில் இருந்து தெரிகிறது.

கடந்த ஆண்டு கோடை காலத்தில் ஐரோப்பா முழுவதும் கடும் வெப்ப அலைத் தாக்கம் நிலவியதும், உதாரணமாக சுவிட்சர்லாந்தில் சூழல் வெப்பநிலை வழமையை விட 5 பாகை செல்சியஸ் அதிகரித்திருந்ததும், தொடர்ந்தும் பசுங்கூட வாயுக்கள் வெளியிடப்படுவதால் இது போன்ற தாக்கங்கள் அதிகரிக்கும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நூற்றாண்டில் அதிக வெப்பநிலை நிலவிய ஆண்டுகளைக் கணக்கெடுத்தால் அதில் முன்னணியில் இருப்பவை 1990 களுக்குப் பின் வந்த ஆண்டுகளே! ஒரு காலத்தில் இரு கரைதொட்டு புரண்டோடிய ஆறுகள் இன்று வெறும் மணல் பாதைகளாக வெறித்து நிற்கின்றன. குடிக்கக்கூட தண்ணீர் இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

ஆனாலும் மற்றொரு பக்கம் கட்டுப்படுத்த முடியாத வெள்ளம் திடீரென்று ஏற்பட்டு பேரிழப்புகளை ஏற்படுத்துகின்றது. ஒரு சில நாடுகளைக் குறிப்பிட்டுக் கூற முடியாத அளவுக்கு உலகம் முழுவதுமே காலநிலை தடம் மாறிவிட்டது. ஏன் இப்படி? இதற்கெல்லாம் காரணம் என்ன? புவி வெப்பமடைதலும் அதனுடன் பின்னிப் பிணைந்துள்ள காரணங்களும்தான். இதற்கெல்லாம் மனிதன்தான் விடை காண முற்பட வேண்டும்.

புவி வெப்பமடைதல் என்பது நாடுகளின் எல்லைகளைக் கடந்த உலகளாவிய பிரச்சினை. மக்களின் நுகர்வு மற்றும் உற்பத்தி நடவடிக்கைகள், பூமியின் வாழ்வு மற்றும் ஆதார அமைப்புகளை கடுமையாகத் தொந்தரவு செய்கின்றன. பசுங்கூட வாயுக்களின் அளவு அதிகரிப்பதை இப்பொழுது உலகம் உணரத் தொடங்கியுள்ளது. துருவப் பிரதேசத்தில் காணப்படும் பனிப்பாறைகள் எதிர்பார்ப்பதை விடவும் வேகமாகக் கரைந்து செல்கின்றன.



இன்னும் சில ஆண்டுகளில் வடதுருவத்தில் பனிப்பாறைகளைக் காண முடியாது என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளார்கள். இந்த மாற்றங்கள் காரணமாக பெருமளவு தீவுக்கூட்டங்கள் கடலில் மூழ்கும் அபாயமும் எதிர்பாராத மாற்றங்களும் நிகழுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்களின் விளைவாக பலவிதமான நோய்களுக்கு மனிதன் உள்ளாவதோடு பஞ்சம், வரட்சி ஏற்பட்டு நாடுகளுக்கிடையில் போட்டி ஏற்படும் என்றும் பெரும் அழிவுகளை மனித குலம் சந்திக்கும் என்றும் I.B.C.C என்ற சூழல் பாதுகாப்பு அமைப்பும் அச்சம் வெளியிட்டிருக்கிறது.

உலகத்தின் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையால் 'கியோட்டோ பிரகடனம்' 1992 இல் உருவாக்கப்பட்டது. உலகின் பெருமளவு பசுங்கூட வாயுக்களை வெளியேற்றும் அமெரிக்காவும், சீனாவும் அந்தப் பிரகடனத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நிலையில் அண்மையில் காலநிலை மாற்றம் தொடர்பாக இந்தோனேசியாவில் பாலித் தீவுகளில் நடைபெற்ற மாநாட்டில் பசுங்கூட வாயுக்களினால் சூழலுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன. இதற்கு ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் தலைமை தாங்கினார். இந்த மாநாடு நடைபெறுவதற்கு முன் வடதுருவத்தில் பனிப்பாறைகள் உருகும் நிலையை ஐ.நா. பொதுச் செயலாளர் நேரடியாகச் சென்று பார்வையிட்டிருந்தார்.

ஆனாலும், இந்த மாநாட்டில் கருத்து வெளியிட்டிருந்த காலநிலை மாற்றம் தொடர்பாக ஆராயும் சீனக் குழுவின் துணைத் தலைவர், காலநிலை மாற்றம் பற்றிய ஐ.நாவின் கியோட்டோ உடன்படிக்கையைச் செயற்படுத்துவதில் சீனாவின் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், பசுங்கூட வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பது தொடர்பிலான இலக்குகள் குறித்து சர்வதேச சமூகம் கருத்தொற்றுமை எட்டுவதை விரைவுபடுத்த வேண்டும் - என்றார். கியோட்டோ ஒப்பந்தம் 2012 ஆம் ஆண்டு காலாவதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. பாலித் தீவில் இடம்பெற்ற மாநாட்டில் 160 நாடுகளைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டின் போது சூழல் சம்பந்தமாக ஆய்வுகளை மேற்கொண்ட விஞ்ஞானிகளின் அறிக்கைகளும் கவனத்தில் எடுக்கப்பட்டன. இந்த மாநாட்டில் காலநிலை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்க உப ஜனாதிபதி அல்கோர், கியோட்டோ உடன்படிக்கையை அமுல் படுத்துவதன் அவசியத்தையும் புதிய ஒப்பந்தத்தை உருவாக்குவது தொடர்பாகவும் கருத்துகளை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் காலநிலை தொடர்பான கியோட்டா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த அமெரிக்காவே தடையாக உள்ளது எனவும் பகிரங்கமாக குற்றம் சாட்டினார்.

எனவே தற்போது உலகம் எதிர்நோக்கியிருக்கும் மிகப் பெரிய சவாலான காலநிலை மாற்றத்தால் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் பாரிய அழிவில் இருந்து மீளுவதற்கான வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமே மனித குலத்தைக் காப்பாற்றலாம் என்பது சமாதான விரும்பிகளினதும், விஞ்ஞானிகளினதும் எதிர்பார்ப்பாகும். இந்த எதிர்பார்ப்பினை பெருமளவு பசுங்கூட வாயுக்களை வெளியேற்றும் நாடுகள் கவனத்தில் கொண்டு அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்வதே மனித குலத்துக்கு அவர்கள் செய்யும் மிகப்பெரிய பரிகாரமாகும். *

சுடர் ஒளி

டிச.23 - டிச.29. 2007

85, ஜெயந்தமல்லிமாராச்சிமாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பாக்ஸ் 0114734404
E-mail: editorial@sudaroli.com

## சர்வதேசத்தை நம்பலாமா?

மனித உரிமை நிலைமை மேம்பட்டால்தான் இனி இலங்கைக்கு இராணுவ உதவி என்று அமெரிக்கா கூறி உள்ளது. இதற்காக இலங்கைக்கு மூன்று நிபந்தனைகளையும் அமெரிக்கா விதித்துள்ளது.

தமிழீழத்தை நோக்கிய அரசியல் வேட்கை சட்ட விரோதமானது என்று நான் கூறமாட்டேன். என்று இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதர் சில்கொட் பெரிய குண்டையே தூக்கிப்போட்டிருந்தார். அந்த பரபரப்பு இன்னும் அடங்கவில்லை.

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதான தீர்வு காணும்படி இந்தியாவும் அடிக்கடி நச்சரித்து வருகிறது.

முழு உலக நாடுகளும் சமாதானம் மூலம் தீர்வு காணும்படியே வலியுறுத்தி வருகின்றன. ஆனால், இந்த அழுத்தங்கள் எல்லாம் இலங்கை அரசைப் பணிய வைக்குமா என்பதே கேள்வி. இந்த அழுத்தங்கள் எல்லாம் வெறும் புஷ்வாணம் என்பதை சர்வதேச விவகாரங்களில் அமெரிக்க உட்பட வல்லரசுகள் நடந்து கொண்ட விதம் மூலம் இலங்கை அரசு படித்துக் கொண்டுவிட்டது போன்றே தெரிகிறது. எந்த ஒரு வல்லரசும் சர்வதேச விவகாரங்களில் தலையிடும்போது தனது நலனை முன்னிறுத்தியே செயற்படும் என்பது வரலாறு தந்த பாடம்.

ஈராக்கில் வாழும் குர்டிஷ் மக்களுக்கு ஏற்பட்ட கதியும் சேர்பியாவில் உள்ள கொசோவோ மாகாணத்தின் தனிநாடு பிரகடன அறிவிப்பும் இதற்கு நல்ல உதாரணங்கள்.

குர்டிஷ் மக்கள் ஈராக்கில் இருந்து பிரிந்து தனிநாடு அமைப்பதற்காக நீண்ட காலம் போராடி வருகின்றனர். சதாம் ஹுசேனின் ஆட்சி கவிழ்க்கப்பட்டபோது தமது கனவு நனவாகிறது என்று நம்பினார்கள். ஆனால் தனது நெருங்கிய நட்பு நாடான துருக்கிக்காக குர்டிஷ் மக்களை அமெரிக்கா கைவிட்டது. அகன்ற குர்டிஷ் உருவாகுமானால் தனது நாட்டின் ஒரு துண்டை தாரை வார்த்துக் கொடுக்க வேண்டி ஏற்படும் என்று துருக்கி அஞ்சியதே இதற்குக் காரணம். தற்பொழுது துருக்கி விமானங்கள் ஈராக்கிற்குள் சென்று குர்டிஷ் மக்கள் மீது குண்டு போடுகின்றன. அமெரிக்கா இதற்கு பச்சைக்கொடி காட்டி இருக்கின்றது. உலகிலேயே மோசமாக ஏமாற்றப்பட்ட இனமாக குர்டிஷ் மக்கள் இன்று அழிந்து கொண்டிருக்கிறார்கள்.

குர்டிஷ் பிரச்சினையில் தனிநாட்டுக்கு எதிராகச் செயற்படும் அமெரிக்க கொசோவோ பிரச்சினையில் மற்றொரு அணுகுமுறையைக் கையாளுகின்றது.

ரஷ்யாவின் மிக நெருங்கிய நட்பு நாடான சேர்பியாவின் ஒரு பகுதிதான் கொசோவோ மாகாணம். கடந்த ஒன்பது வருடங்களாக அது ஐ.நாவின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகிறது. தாம் விரைவில் தனிநாடு பிரகடனம் செய்யப் போவதாக கொசோவோ தலைவர்கள் அறிவித்துள்ளனர். அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் இதனை ஆதரிக்கின்றன. ரஷ்யாவுடன் மிகவும் நட்பாக இருந்த யூகோஸ்லாவியாவை துண்டு துண்டாக உடைப்பதில் வெற்றி கண்ட அமெரிக்கா, சேர்பியாவையும் துண்டு போட்டுவிட்டால் எதிர்காலத்தில் ரஷ்யா பலம்பெறுவதை தடுக்கலாம் என்று நம்புகிறது.

இவற்றைப் போன்று இந்தியாவின் அணுகுமுறையும் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டதே.

இந்தியா 1987 இல் இலங்கையின் ஆகாயப் பிராந்தியத்தை அத்துமீறி வந்து விமானத்தில் இருந்து உணவுப் பொட்டலங்களைப் போட்டது. உணவுப் பொட்டலம் போடும் அளவுக்கு அப்பொழுது உணவுத் தட்டுப்பாடு இருந்ததில்லை. ஆனால், கடந்த ஆண்டு ஏ-9 பாதை மூடப்பட்டவுடன் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்தியா திரும்பியும் பார்க்கவில்லை. தற்பொழுது இலங்கை அரசுக்கு ஆயுத உதவிகளையும் மறைமுகமாக வழங்கி வருகிறது.

மேற்கண்ட எல்லா நாடுகளுமே 2002 போர்நிறுத்த ஒப்பந்தத்தில் தமிழர் தரப்பாக விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொண்டிருந்தன. பின்பு புலிகள் பயங்கரவாதிகள் என்று கூறி தடைசெய்தன. ஆகவே, சர்வ தேச சமூகத்தின் அணுகுமுறைகள் அவற்றின் நலனின் அடிப்படையிலேயே உருவாக்கப்படுகின்றன என்பதை தமிழ் மக்கள் மறந்துவிடக்கூடாது.

# மலையகத்தில் ஆட்டம் கண்டுள்ள மலையகத் தலைமைகள்

**சராகோகுலன்**


மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் ஏக தலைவர்கள் நாங்களே. நாம் இல்லாவிட்டால் இன்று மலையகமே இல்லை. மலையக மக்களின் காவல் தெய்வம் நாமே என்று கூறிக்கொண்டு தொழிலாளர்களின் சந்தா பணத்தில்



குளிர்காய்ந்துகொண்டிருந்த மலையகத் தலைவர்களின் நிலை இன்று ஆட்டம் காண ஆரம்பித்து விட்டது.

அண்மைக் காலங்களாக இந்த மலையகத் தலைவர்களின் காய் நகர்த்தல்கள் மலையக மக்கள் மத்தியில் பெரும் வெறுப்பை ஏற்படுத்தி உள்ளன.

இந்த மலையக தலைவர்கள் எல்லாம் எம்முடைய சந்தாப் பணத்திற்காகவும், தேர்தல் காலங்களில் வாக்குகளுக்காகவும்



மட்டுமே எம்மை பகடைக் காய்களாக வைத்துக் கொண்டு சுகம் அனுபவிக்கின்றனர்.

ஆனால் இந்த தலைவர்கள் எம்மைப் பற்றியோ அல்லது எமது சமூகத்தின் சுய கௌரவம் தொடர்பாகவோ சிறிதும் சிந்திப்பதில்லை.

இவர்களுக்கு வேண்டியது எல்லாம் இவர்களின் அரசியல் சூதாட்டத்தில் எம்மை பணயமாக வைத்து காய் நகர்த்துதல் தான். அதன் மூலம் அமைச்சர் பதவிகளும், சொகுசு வாழ்க்கை, பாதுகாப்பு பந்தோபஸ்துகளுடன் கூடிய வாழ்க்கை அவ்வளவுதான்.

அண்மையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தின்போது ஜாதிக ஹெல உறுமய பிக்கு, காவி உடையை அணிந்துகொண்டு ஆற்றிய உரையைக் கேட்டவர்களின் காதுகளில் ஈயத்தை உருக்கி ஊற்றியது போல் இருந்தது.

அப்படி அவர் என்ன கூறிவிட்டார் என்று மண்டையைக் குழப்பவேண்டாம். அதற்கு முன் நானே கூறிவிடுகின்றேன்.

''இந்த நாட்டை ஆட்சி செய்த பறங்கித் துரைமார் இலங்கையை எம்மிடம் (சிங்களவர்களிடம்) ஒப்படைத்துவிட்டுப் போகும் போது எங்களுக்குத் தேவைப்படாத பொறுப்பேற்க வேண்டிய அவசியம் இல்லாத ஒரு கூட்டத்தினரையும் எம்மிடம் விட்டுப் போய்விட்டனர்.

இவர்கள் தோட்டங்களில் கூலி வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்து அடிமைகளாக இங்கு கொண்டுவரப்பட்டவர்கள்'' என்று மலையக மக்களுக்கு வரவிலக்கணம் கூறுகின்றார் அந்தப் பிக்குவானவர்.

அந்தத் தேரர் இப்படிக் கேவலமாகப் பேசுவதைக் கண்டிக்கவோ அல்லது கூற்றை ஆட்சேபித்து மறுத்துரைக்கவோ மலையகத் தலைவர்கள் எவருக்கும் துணிவு இல்லை.

நமது தலைவர்கள் நாடாளுமன்றிற்கு பேருக்காக வந்து போகின்றனரே தவிர சபையில் அமர்ந்து சபை நடவடிக்கைகளை அவதானிப்பதே இல்லை.

எவ்வளவுதான் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றாலும் கூட இந்தத் தலைவர்களின் ஆசனங்கள் காலியாகவே காணப்படும்.

சில நேரங்களில் எங்கோ ஒரு மூலையில் தூங்கி எழுந்தவர்களைப் போல் எதை எதையோ கூறிவிட்டு அதே சூட்டோடு போய் விடுவார்கள். இவர்கள் யாருக்கு பதில் சொன்னார்கள் என்பது இவர்களுக்கே தெரியாது. பேசியவர் போய் பல மணி நேரங்களின் பின் வெற்று நாற்காலிகளைப் பார்த்தே பேசுவார்கள்.

இதேவேளை மலையகத்தைச் சேர்ந்த யாராவது ஒரு உறுப்பினர் ''விஜயனும் அவரது கூடாத நண்பர்களும் இந்தியாவில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு படகுகளின் மூலம் இங்கு வந்து கரை ஒதுங்கியவர்கள். அவர்களின் வழித் தோன்றல்கள் தான் நீங்கள்'' என்று சபையில் உரையாற்றி இருந்தால் உரையாற்றியவரின் நிலைமை என்னவாகி இருக்கும். ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்றில் இருக்கும் அனைத்துப் பெரும்பான்மைக் கட்சிகளும் ஒட்டுமொத்தமாக பிய்த்துப் பிடுங்கி இருப்பார்கள்.

இதற்கு ஓர் உதாரணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் சபைக்குப் புதியவர். அவர் ஆரம்பத்தில் உரையாற்றும் போது ''சபாநாயகர் இந்த சபைக்குள் பிரவேசிக்கும் போது எல்லா உறுப்பினர்களும் எழுந்துநின்று கௌரவம் அளிக்கின்றோம். ஆனால் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்கள் மட்டும் நாற்காலிகளை விட்டு எழும்புவதில்லை. அவர்களும் எழுந்து கௌரவம் அளிக்க வேண்டும்'' என்று கூறினார்.

அப்பொழுது ஆளும்கட்சி, எதிர்க்கட்சிப் பெரும்பான்மை உறுப்பினர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக வரிந்து கட்டிக் கொண்டு கஜேந்திரனை அடித்து நொருக்க தலைப்பட்டனர்.

அப்போது எதிர்க்கட்சியில் இருந்த ஹேமகுமார நாணயக்கார தூஷணத்தில் மட்டும்தான் பேசவில்லை. ஆனால் அதற்கு சமமான எல்லா வார்த்தைகளையும் கொட்டித் தீர்த்துவிட்டார். நாடாளுமன்றில் ஒரு பிரளயமே ஏற்பட்டுவிட்டது.



ஆனால் நமது தலைவர்களுக்கு இந்த ஒற்றுமை உணர்வும் சமூகத் துடிப்பும் அறவே இல்லாமல் போய்விட்டது.

தேரர் இப்படி மட்டரகமாகப் பேசும்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களும் சபையில் இருக்கத்தான் செய்தனர். அவர்களும்கூட இதைப்பற்றி அலட்டிக்கொள்ளவில்லை என்பதும் வேதனைதான்.

அதேவேளை இந்த அவசரகாலச் சட்டத்தைக் கையில்வைத்துக் கொண்டே அரசாங்கம் தமிழ் மக்களை வகை தொகையின்றி கைது செய்து சிறையில் அடைக்கின்றது. கைது செய்யப்படும்போது மலையக தமிழர்களை ஒதுக்கிவிட்டு கைது



செய்வதில்லை.

இவ்வாறான நிலையில் நமது மலையகத் தலைவர்கள் இந்த அவசர காலச் சட்டத்திற்கு ஆதரவாக இரண்டு கைகளையும் தூக்கி ஆதரவளிக்கின்றனர்.

நமது கைகளைக் கொண்டே நமது கண்களைக் குத்துகின்றது இந்த அரசாங்கம். ஆனால் நம்மவர்களோ சூடு சொரணையின்றி முட்டுக் கொடுத்துக்கொண்டு குளிர்காய்கின்றனர். இப்படியான தலைவர்களால் மலையகத்திற்கு என்ன பயன் என்று மலையக சமுதாயம் சிந்திக்க ஆரம்பித்துவிட்டது.

JAFFNA SPECIAL COLLECTION

# வீரவன்ஸவின் குள்ள நரித்தனம்

**இரா. புத்திரசிகாமணி**

'தனக்கு இரண்டு கண்களும் போனாலும் பாதகம் இல்லை. எதிரிக்கு ஒரு கண்ணாவது பொட்டையாகவேண்டும்' என்ற உயர்ந்த சித்தாந்தத்துடன் வாழ்ந்து சாதனை படைத்திருப்பவர் ஜே.வி.பி.யின் பிரசார செயலாளர் விமல்



வீரவன்ஸ. அதேவேளை தனக்கு இரட்டை முகங்கள் உண்டு என்பதையும் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டார்.

ஆம் அண்மையில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது கட்சியின் கொள்கைக்கு மாறாக தன்னிச்சையாக அவர் எடுத்த முடிவு ஜே.வி.பி. உறுப்பினர்களையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது என அவர்களே கூறுகின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த நவம்பர் ஏழாம் திகதி தனது அரசின் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தபோது "இந்த வரவுசெலவுத் திட்டம் கண்டியன் சாரி (ஒசரி) உடுத்திய விபசாரியைப் போன்றது." - என்று அப்பட்டமாக விமர்சனம் செய்தார்.

அப்படியானால் விபசாரிகள் எதைப் பற்றியும் கவலைப்படாதவர்கள். வெட்கம், மானம், ரோசம் எதுவும் இல்லாதவர்கள். இளைஞர்கள் என்றால் என்ன? வயோதிபர் என்றால் என்ன? எவராக இருந்தாலும் பணம் கிடைத்தால் போதும். எல்லோருடனும் உறவுகொள்வார்கள்.

'மீன் விற்ற காசு நாறாது' என்பது போல்தான் விபசாரம் செய்து சேர்த்த பணமும்.

குஷ்டரோகியாக இருந்தால் என்ன எயிட்ஸ் நோயாளியாகத்தான் இருக்கட்டும். திரட்டவேண்டியது பணம். அதன் மூலம் தானும் தன் குடும்பமும் சகல வசதிகளுடனும் டாம்பிகமாகவும் வாழ்ந்தால் அதுவே போதும் என்பவள் விபசாரி.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வரவு செலவுத் திட்டத்தையும் இவ்வளவு மட்டமாக விமர்சித்தவர் தான் இந்த விமல் வீரவன்ஸ.

வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட நாள்முதல் முதலாவது வாசிப்பு, இரண்டாவது வாசிப்பு, மூன்றாவது வாசிப்பு என கட்டம் கட்டமாக விவாதிக்கப்பட்டபோது இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆணிவேர் அக்கு வேராக விளாசித் தீர்த்தவரும் இந்த விமல் வீரவன்ஸ தான்.

"சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் இந்த வரவு - செலவுத் திட்டத்தால் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. ராஜபக்ஷ சகோதர கம்பனியின் கஜானாவை நிரப்புவதற்காகவே தயாரிக்கப்பட்டது. ஊழல், மோசடி, சுரண்டல் பேர்வழிகளை வாழவைக்கும். நாட்டில் பஞ்சமும் பட்டினியும் தாண்டவமாடும். பசிபட்டினியால் மனிதனை மனிதனே சாப்பிடும் காலம் வரும். அதற்கு இடமளிக்கக்கூடாது. இந்த வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதன் மூலம் ராஜபக்ஷ சகோதரர் கம்பனியை வீட்டுக்கு அனுப்புவோம்" என்று நாடாளுமன்றிலேயே முழக்கமிட்டார்.

அத்தோடு நின்றுவிடவில்லை. ஊர் ஊராக மேடையமைத்து விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பாண், மா, பால்மா விலை அதிகரிப்பு, விவசாயிகளுக்கு உரம் இல்லை, ஏழைகளின் குடிசையில் விளக்கெரிக்க எண்ணெய் இல்லை. மலசல கூடத்திற்கும் வரி அறவிடப் போகின்றார்கள் என்று பிரகடனப் படுத்தியதோடு, கோடி கோடியாக போஸ்டர் களையும் அடித்து ராஜபக்ஷ சகோதரர் கம்பனிகளுக்கு எதிராக அணிதிரட்டினார்.

ஜே.வி.பியினர் என்றாலே கொலைகாரர்கள், கொள்ளையடிப்பவர்கள், தேர்தலில் வாக்களித்ததால் தலையை வெட்டியவர்கள், நாட்டை எரித்து நாசமாக்கியவர்கள் என்று முத்திரை குத்திய மக்கள், ஜே.வி.பியினர் அரசுக்கு எதிராக கிளம்பி உண்மை பேச ஆரம்பித்து விட்டார் களே என்று அரை குறை மனதுடனாவது இவர்களை மன்னிக்கவும் இவர்கள் நடத்திய அட்டகாசங்களை மறக்கவும் ஆரம்பித்தனர்.

கடந்த டிசம்பர் 14ஆம் திகதி மாலை விமல் வீரவன்ஸ நாடாளுமன்றில் ஆற்றிய உரை, நாடாளுமன்றத்தையே கிடு கிடுக்க வைத்து விட்டது.

வரவு - செலவுத் திட்டத் தின் மீதான வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் இவர் வீராவேசமாகப் பேசினார். வழமைக்கு மாறாக அன்று நாடாளுமன்றம் நிறைந்து வழிந்தது. பார்வையாளர் களரி, சபாநாயகர் களரி அனைத்தும் நிரம்பின. மேலதிகமாக போடப்பட்ட கதிரைகளும் நிறைந்து பெரும்பாலானோர் நின்றுகொண்டும் பார்த்துக்கொண் டிருந்தனர்.

வழமையாக வெற்று நாற்காலிகளைப் பார்த்துப் பேசிய விமல் வீரவன்ஸவுக்கு கூட்டத்தைக் கண்டதும் உற்சாகம் தலைக்கேறிவிட்டது.

இவர் பேசிக்கொண்டிருக் கும் போதே அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா எதிர்க்கட்சி வரிசையில் வந்து அமர்ந்தார். விமல் வீரவன்ஸவின் பேச்சை மூக்கின் மேல் விரல்வைத்துக் கேட்டுக்கொண்டிருந்த பார்வையாளர்களுக்கு அனுரா பண்டாரநாயக்காவின் எதிரணிப் பிரவேசம் முக்கியத்துவமாகி விட்டது.

விமலின் பேச்சு இரண்டாம் பட்சமாகிவிட்டது. என்றாலும் கூட விட்டேனா பார் என்று வீர முழக்கமிட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ முதல், கோமாளியாகிவிட்ட மேர்வின் சில்வா வரை விட்டுவைக்கவில்லை. பட்ஜெட் நேரத்தில் அரசுபக்கம் தாவியவர்கள் தலா ஐந்து பத்து கோடிகளை வாங்கிக்கொண்டே தாவினர். கொள்கை இல்லாதவர்கள் என்று சாடினார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து அணிமாறி அமைச்சர்களானவர்கள் கோடிகளை மட்டும் வாங்கிக்கொள்ளவில்லை. ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்திய விஜயதாஸ ராஜபக்ஷவின் 'கோப்' அறிக்கை குற்றவாளிகள் என அடையாளம் காட்டிய கரு ஜயசூரிய, ராஜித சேனாநாயக்க, மிலிந்த மொரகொட போன்றோர் தாம் சிறை செல்வதை தடுத்துக் கொள்வதற்காகவே ராஜபக்ஷவின் கால்களில் மண்டியிட்டு விட்டனர் என கிண்டல் அடித்தார்.

வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின்போது அரசுக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தனது அமைச்சர் பதவியையும் தூக்கி எறிந்துவிட்டு தனது சகாக்கள் நால்வருடன் எதிரணிப் பக்கம் வந்ததை வன்மையாகக் கண்டித்தார். கொள்கை இல்லாதவர்கள், நிலை கெட்டவர்கள் இரண்டாவது வாக்கெடுப்பின்போது ஆதரித்துவிட்டு மூன்றாவது வாசிப்பின்போது எதிர்த்து வாக்களிப்பது வெட்கம்கெட்ட செயல் என்றும் ஏளனம் செய்தார்.

அத்தோடு விட்டாரா என்றால் அதுவும் இல்லை. இந்த அரசாங்கம் ஊழல் மோசடிக்காரர்களைப் பாதுகாக்கவே முயல்கின்றது. தனது அதிகாரத்தைக் காப்பாற்றிக்கொள்ள திருடர்களுக்கு அடைக்கலம் அளிக்கின்றது என ஜனாதிபதியையும் திட்டித் தீர்த்தார்.

(23 ஆம் பக்கம் பார்க்க)


## மனோதத்துவ வைத்தியம்
### (GENERAL PSYCHOTHERAPHY)

இளம் வயதில் வாலிபத் தூண்டுதலால் புரியாமல் செய்யும் தவறுகளால் ஆளுமைக் குறைவு, சக்தி குறைவு, ஞாபகமறதி ஏற்படுதல் மற்றும் பயம், நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மை போன்ற நோய்களுக்கும்

- ஆரம்ப மன நோய்களை உடனே குணமாக்கலாம்.
- ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப்பேறு இன்மைக்கும் பெண்களுக்கும்; வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு.

பிரபல மனோ தத்துவ நிபுணர் **Dr.P.ஆறுமுகம்**

**SEXUAL DISORDERS** (ஆண்மைச் சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. இதற்காக வெட்கப்படவோ வேதனைப்படவோ தேவையில்லை. (பிறவியிலேயே ஆண்மையற்றவர்கள் தவிர) இதற்குப் பல காரணங்கள் உண்டு.

- அளவுக்கதிகமாக விந்தை விரயமாக்கியது.
- கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது.
- உடல் பலவீனம், நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்து விடுவது.
- உறவின்போது விந்து விரைந்து வெளியேறுதல்
- முதல் தடவையாக உறவுகொள்ளும் போது ஏற்படும் பயத்தினால் உறவில் திருப்தியின்மை.

இக்குறைகளாலும், தோல்வி அவமானத்தாலும் இனி நமக்கு வாழ்வே இல்லை என்ற தாழ்வு மனப்பான்மை வளர்ந்து முற்றாக ஆண்மை குன்றலாம். பயப்படாதீர்கள் எமது மனோதத்துவ வைத்திய முறையிலும், திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**டாக்டர் ஆறுமுகம்** அவர்களை சந்திக்கும் இடங்கள்

**வவுனியாவில்...**
2008 ஜனவரி 05, 06, 7 வரை
Vanni Inn,
2ஆம் குறுக்குத்தெரு,
வவுனியா,
Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**கொழும்பில்...**
2007 டிசம்பர் 16 முதல் 23 வரை
New Ahmed Tourist Inn,
BangBang Building
2-2/2, Bankshall Street,
Colombo - 11.
Tel No. 5368426, 5368427
Hot Line: 0777 569205

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்திய முறை செய்யப்படும்**

வெளிநாட்டில் உள்ளவர்கள் தபால் மூலம் (தயவு செய்து முத்திரை ஒட்டிய கடித உறையுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய முறையில் ஓடியோ கசட் பெற்று அத்துடன் திறமான மூலிகை மருந்தும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

கடிதத் தொடர்புகளுக்கும் ஏனைய நாட்களில் சந்திப்பதற்கும்

**Dr. P. Arumugam,**
51/5, Koolavady Road
Batticaloa, Srilanka.
Resident Tel No. 065 2224019;
Hot Line: 0777 569205

தயவு செய்து ரூபா.250/= செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.



## நிரூபித்துக் காட்டும் என் மலையாள மாந்திரீக சக்தி
### அதிசயம் ஆனால் உண்மை



46 வருட காலமாக என் புகைப்படத்தை பத்திரிகையில் அறிமுகப்படுத்துவது, எனது உண்மையான சேவை என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் மேலும் எனது மாந்திரிக ஜோதிடம் கலந்த நாளாந்த சேவையைக் கண்டறிய இதோ எனது வெப் தளம். www.drpksamy.com. குறிப்பாக மாந்திரிக துறையில் வாங்கும் பணத்திற்கு ரசீது கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே.

வெளிநாட்டவர்களுக்கு விசேட 24 மணித்தியால தொலைபேசி வசதி உண்டு. 0094 112470615

ஜேர்மன் அன்பரின் மடல்: [illegible]

லண்டன் அன்பரின் மடல்: எண்ணியவள் என்னிடம் வந்து சேர்ந்தாள்- [illegible]

கொழும்பு அன்பரின் மடல்: 39 வயதில் அதிசயத் திருமணம்- [illegible]

குருநாகல் அன்பரின் மடல்: நெடுநாளாகத் தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி- [illegible]

பண்டாரவளை அன்பரின் மடல்: தீராத தலைவலி தீர்ந்துவிட்டது- [illegible]

பிரான்ஸ் அன்பரின் மடல்: குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி- [illegible]

இத்தாலி அன்பரின் மடல்: சந்தேகத்தால் பிளவுபட்ட காதல் வெற்றி- [illegible]

பதுளை அன்பரின் மடல்: போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்- [illegible]

கனடா அன்பரின் மடல்: ஜாதகத்தில் கூறியது பலித்தது- [illegible]

யாழ்ப்பாண அன்பரின் மடல்: அதிசய அக்னி குண்டல பூசை- [illegible]

**Prof. P.K.SAMY (J.D.G.A.N.) JP ஐயா**
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO- 162, KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO- 13.
0112470615, 0112 342463, 0012342464 Fax: 0094 11 2344831
நுவரெலியாவில் என் நிறுவனம் - துர்க்காதேவி ஆலயம்- இல.33, கண்டி வீதி நுவரெலியா. Tel: 052 2222508

# சிறு விளம்பரங்கள்

## திருமண சேவை

Vani International Marriage Bureau (VIMB) Govt.Regd. (International) ✦உங்கள் பிள்ளைகளுக்காக பெருந்தொகையான பணத்தை செலவு செய்தும் நிரந்தர குடியுரிமை (PR) உடன் மேற்குலக நாடொன்றில் வாழ வழி செய்ய முடியவில்லையா? நீங்கள் அதை நிறைவேற்று முகமாக இலவச ஆலோசனைகளைப் பெறவும்.. ✦எல்லாச் சமூக மத குடியுரிமை (PR) உள்ள குடியுரிமை (PR) இல்லாத மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் விபரங்களைப் பெறவும். பல கிளைகளைக் கொண்ட ஒரே ஒரு சர்வதேச திருமண ஸ்தாபனமாகும். தலைமை அலுவலகம்: லண்டன், பிரதான அலுவலகம்: வங்களாவடி, வேலணை. கொழும்புக்கிளை: PSJ. சிந்துஜன் - ☎ : 0777 4047531 வவுனியா கிளை: S.சிந்து - ☎: 077 9776384 யாழ். கிளை: E. T. ராஜன் - ☎: 077 934 9988 இந்தியா(தமிழ்நாடு) S.K.ரூபன் -☎:0091-9941035512 மேலும் பல விபரங்களை அறிய எமது (VIMB) மணப்பந்தல் என்கின்ற வார வெளியீட்டை புத்தகக் கடையில் கேட்டு வாங்கிப்படியுங்கள். விலை ரூ.10

---

**வீடுகள் தோறும் திருமணங்கள்.** நீங்கள் விரும்பும் மணமக்களைத் தேடித் தேடி அலுத்து விட்டீர்களா? திருமண உலகில் 45 வருட சேவையில் இரண்டாந் தலை முறை கண்ட நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் எதிர்பார்ப்பின்படி, சாதி, சமய,தராதரத்திற்கு எற்றபடி, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மணமக்களைத் தேர்ந்தெடுத்து திருமணத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம். இந்திய வம்சாவழியினரின் திருமணத்திற்காக தனிப்பிரிவு தொடங்கியிருக்கிறது. வாருங்கள் திருமணத்தை நிறைவேற்றுங்கள்.இயக்குனர்: புலவர், 15A, 32 ஆவது லேன், வெள்ளவத்தை கொழும்பு - 06. ☎: 2500380 0713352215

---

SANNITHIYAN MARRIAGE SERVICE. எமது புதிய முகவரியில் இந்து, கிறிஸ்தவர்கள், Specially குருகுலம், வேளாளர், மற்றும் சகல சமூக பிரிவினர்க்குமான துரித விவாக சேவைக்கு (உள்நாட்டு, வெளிநாட்டு) தேவையான ஆவணங்களுடன் பதிவு செய்து சந்நிதியானோடு இணைந்து வெற்றி பெறுவர்கள். செல்வசந்நிதி வேலவன் சித்திரபெருந்தேர் வெள்ளோட்டம் (1984) திருவிழா காட்சிகள் (2003) D.V.D. இலவச பதிவு செய்ய காரியாலயம் வரவும். அலுவலக நேரம்: காலை 9-1 மணி 4-8 மணி மாலை.T.P: 0773573055. T.GUNARATNARAJAN, Sannithiyan Marriage Service, 285-1/1, Galle Road, Wellawatte. (பொலீஸ் நிலைய வாயில் எதிரே)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து உயர் கௌர குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் குடியுரிமை உள்ள வயது 26, கிரகபாவம் 46, புனர்பூசம், 8 இல் செவ்வாய், BA பட்டதாரி மணமகளுக்கு Doctor, Engineer, Accountant, BSc மணமகன் தேவை. வெளிபுநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். (மணமகளின் தந்தை லண்டனில் பிரபல தொழிலதிபர்) மணமகள் விரைவில் கொழும்பு வரவுள்ளார். யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் குடியரிமை உள்ள, வயது 37, கிரகபாவம் 35, B.Sc (M.Eng) சித்திரை மணமகனுக்கு அழகிய, சிவந்த, மெல்லிய மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: (கொழும்பு) PSaJ. சிந்துஜன் (VIMB) (வங்களாவடி வேலணை), Vani International Marriage Bureau Govt.Regd.(International) ☎: 077 6184434, 0774047531 தலைமை அலுவலகம் S.Ponnampalam. 211 #, Livorpool Road, London (UK), யாழ் கிளை. E.T. ராஜன். ☎: 077 9349988 வவுனியா கிளை: S.சிந்து. ☎:077 977 6384 இந்தியா (தமிழ்நாடு) S.K.ரூபன் ☎:0094-9941035512 பதிவுக் கட்டணம் செலுத்திய பின்னரே எமது சேவைக்கு உட்படுத்தப்படுவீர்கள்.

---

யாழ்.இந்து குடும்பம் (சமூகத்தின் விபரம் தொலைபேசி ஊடாக) கனடாவில் குடியுரிமையுடைய 78 ஆம் ஆண்டு பிறந்த, பரணி, கிரகபாவம் 28, Accountant க்கு மணமகன் தேவை. (குடும்பத்துடன் கனடாவில்) மிக விரைவில் கொழும்பு வரவுள்ளார். யாழ்.இந்து குடும்பம் (சமூகத்தின் விபரம் தொலைபேசி ஊடாக) லண்டனில் குடியுரிமையுடைய, 39 வயது, 8 இல் செவ்வாய், கிரகபாவம் 40, சித்திரை 2 ஆம் பாதம், மணமகள் தேவை. தொடர்புகளுக்கு:(கொழும்பு) PSJ.சிந்துஜன் (VIMB) (வங்களாவடி வேலணை) Vani International Marriage Bureau Govt.Regd.(International)☎ :077 6184434, 077 4047531 தலைமை அலுவலகம் S.Ponnampalam. 211 #, Livorpool Road, London(UK) யாழ் கிளை E.T. ராஜன். ☎:077 9349988 வவுனியா கிளை:S. சிந்து ☎:077 977 6348 இந்தியா (தமிழ்நாடு) S.K.ரூபன் ☎:0091-9941035512 நிர்வாகி (வேலணையூரான்) M.S.பொன்னம்பலம், M.S.சிற்றம்பம் (முருகா), சகோதரர்களின் சந்ததியினரின் ஒருவர் பதிவுக் கட்டணம் செலுத்திய பின்னரே எமது சேவைக்கு உட்படுத்தப்படுவீர்கள்.

---

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் குடியுரிமையுடைய, 77 ஆம் ஆண்டு, உத்தராட்டம், 8 இல் செவ்வாய், கிரகபாவம் 57, Computer Engineer மணமகளுக்கு பட்டதாரி/ஆங்கில அறிவுள்ள மணமகன் தேவை. யாழ்.இந்து, உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 39, உயரம் 5'9", விசாகம், 4 ஆம் பாதம், கிரகபாவம் 22-1/2, அரச சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: PSJ. சிந்துஜன் (VIMB) (வங்களாவடி வேலணை) Vani International Marriage Bureau Govt. Regd.(International) ☎:077 6184434, 077 4047531 தலைமை அலுவலகம் S.Ponnampalam. 211 #, Livorpool Road, London(UK) யாழ் கிளை E.T. ராஜன். ☎:077 9349988 வவுனியா கிளை:S. சிந்து ☎:077 977 6348 இந்தியா(தமிழ்நாடு) S.K.ரூபன் ☎:0091-9941035512 பதிவுக் கட்டணம் செலுத்திய பின்னரே எமது சேவைக்கு உட்படுத்தப்படுவீர்கள்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் குடியுரிமையுடைய, 1970 ஆம் ஆண்டில் பிறந்த, 8 இல் செவ்வாய், கிரகபாவம் 60, உத்தராடம் 2 ஆம் பாதம், உயரம் 5'8", கனடாவில் கணக்காளரான மணமகனுக்கு அழகிய, சிவந்த, மெல்லிய, படித்த, மணமகள் தேவை. மணமகன் தற்போது கொழும்பு வந்துள்ளார். இன்னும் 15 நாட்கள் மட்டுமே இங்கு தங்கியிருப்பார். தீவகத்தைச் சேர்ந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு:(கொழும்பு) PSJ.சிந்துஜன் (VIMB) (வங்களாவடி வேலணை) Vani International Marriage Bureau Govt.Regd.(International)☎ :077 6184434, 077 4047531 தலைமை அலுவலகம் S.Ponnampalam. 211 #, Livorpool Road, London(UK) யாழ் கிளை E.T. ராஜன். ☎:077 9349988 வவுனியா கிளை:S. சிந்து ☎:077 977 6348 இந்தியா(தமிழ்நாடு) S.K.ரூபன் ☎:0091-9941035512

## வாடகை

கொழும்பு - 05 Anderson flats (Apollo Hospital அருகில்) இரண்டாம் மாடியில் Fully Furnished. இரண்டு அறை வீடு ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்களுக்கு வாடகைக்குண்டு. விபரங்களுக்கு 0714115004

---

கிருலப்பனை பிரதான வீதிக்கு அருகாமையில் 1 அறை, சமையலறை ஹோல், பாத்ரூம் என்பவற்றுடன் சகல வசதிகளுடனான வீடு வாடகைக்குண்டு. அத்துடன் பெண்களுக்கு அறை வாடகைக்குண்டு. தொடர்பு: 071-5691490

---

கல்கிசையில் 3 அறை, 3 குளியல் அறை, வாகனத்தரிப்பிடம் கொண்ட மாடி வீடு வாடகைக்குண்டு. 336/2 காலி வீதி. மக்கள் வங்கிக்கு பின்பாக.

---

3 அறைகள் எல்லா வசதிகளுடனும் விடுதி வகுப்புக்கள் நடத்த வசதி. சந்திக்கு அருகாமையில் 25/3 விஜயசேகர றோட். தொலைபேசி: 2718303

---

76A மருதனை வீதி, ஹெந்தளை வத்தளையில் இரண்டு அறை, வரவேற்பறை, சமையலறை, குளியலறை சிறிய வளவுடன் கூடிய Annex வாடகைக்குண்டு. ரூ.8500/- நேரில் பார்வையிடலாம். தரகர் தேவையில்லை. தொடர்பு:2939644.

---

பொல்கென்கொடவில் ஒரு அறை, வீடு தளபாடங்களுடனும், குளிரூட்டியுடனும் வாடகைக்குண்டு. வாகனத் தரிப்பிடம் உண்டு. தொடர்கு: 2827885

---

நாரஹென்பிட்ட, கிருள்ள வீதியில் 3 மாடி வீட்டின் 2 மாடிகள் சகல வசதிகளுடனும் வாடகைக்குண்டு. ஒரு மாடி ரூ.20000/- (காரியாலயங்களுக்கும் உகந்தது) தொடர்பு: 0714062134

---

இரு படுக்கையறைகளுள்ள அப்பார்ட்மென்ட் (குறிப்பாக தம்பதிகளுக்குரியது) பாராளுமன்றத்திற்கு சமீபமாக வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு 1022, பன்னிபிட்டிய றோட், பத்தரமுல்ல.

---

3 படுக்கையறைகளுள்ள (ஒரு அறை A/C) மாடி வீடு இணைந்த குளியலறைகள் மற்றும் வேறு வசதிகளுடன் Charlement Road, வெள்ளவத்தையில் வாடகைக் குண்டு. தொடர்பு: 0777751777

---

கொழும்பு 5 பார்க் வீதியில் 5 அறைகளுள்ள இரண்டு மாடி tiles பதிக்கப்பட்ட வீடு (அப்பலோஅருகில்) வாடகைக்குண்டு. வெளிநாட்டவர் விரும்பத்தக்கது. T.P: 0773012592

## பெண்களுக்கு அதிர்ஷ்டம்

பெண்களே! நீங்களும் வாழ்க்கையில் வெற்றி பெற்று வாழ முடியும். பெண்களுக்கு கணவன்தான் நல்ல துணைவன். ஆனால் எல்லோருக்கும் நல்ல கணவன் அமைவதில்லை. வரதட்சணை, மாமியார், நாத்தானார் கொடுமை, குழந்தையில்லாமை, கணவனின் திடீர் மரணம், கைவிடப்படும் அவலம், விவாகரத்து இப்படி எத்தனை எத்தனை துன்பங்கள், துயரங்கள், அழகு, கல்வி, தொழில், காதல், திருமணத்தடை, மற்றும் வேறு எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் தொலைபேசி, நேரில், தபால் மூலமும் தொடர்பு கொள்ளலாம். இரகசியம் பேணப்படும். 49 வருட ஆராய்ச்சியும்,அனுபவமும் பெற்ற அதிநவீன மனோதத்துவ நியூமராலஜி நிபுணர் பேராசிரியர் டாக்டர். ரசூல்மன்சூர் **Prof.Dr.RAZUL MANZ URR (MOD MANZURR) No.198/2/A, Hill street, Dehiwala. ☎: 071- 4136254, 078 - 5118019, 071- 4182713, (060) 2172645. E-mail: razulman zurr@yahoo.com**

## தேவை

வீட்டுப்பணிப்பெண், காவலாளி, சாரதி, பராமரிப்பாளர், சமையற்காரர், வீட்டுப்பையன் கொழும்பு பங்களாக்களில் வேலைக்கு தேவை. சம்பளம் 7000/- தொடக்கம் 12000/- இடையில் அரச அனுமதி பெற்ற சமித் ஏஜென்சி, 53 F, கொஸ் இன்னவத்தை கட்டுவாவல,பொரலஸ்கமுவ. தொலைபேசி :2545838 2518109, புறக்கோட்டை-பிலியந்தலை 120, வீதி, கட்டுவாவல 10ஆம் கட்டை சந்தியில் இறங்கவும்.

---

Able active attendants available Borella, Avissawella, Dehiwela, Negombo - Nandani, 216/1 Kaduwela Road, Wellampitiya. T.P: 4401757.

---

லேடீஸ் சாரி பிளவுஸ், சல்வார், கவுன் தைக்கத் தெரிந்தவர்கள் கைவேலையாட்கள் எம்பிறய்டரிங் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை. தொடர்பு: 2395713.

---

Able house drivers and Company drivers Supershine Service Dehiwela. T.P:2726661,0723454302.

---

Lodgeஇல் வேலை செய்வதற்கு ஆங்கிலம், சிங்களம் நன்கு பேசத் தெரிந்த உதவியாளர்கள் தேவை. நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.Western Lodge, No.270, Sea St, Colombo -11.

---

Secretaries Senior, Junior, Trainees with good personality from different ages. T.P:2624375.

## பயிற்சி வகுப்பு

அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கள் மிககுறைந்த கட்டணத்தில் செயன்முறை விளக்கத்துடன் கற்பிக்கப்படும். வெளிநாடு செல்வோருக்கான குறுகிய கால பயிற்சி வகுப்புக்கள், பொருட்கள் இலவசம். சான்றிதழ் வழங்கப்படும். தனிப்பட்ட முறையிலான வகுப்புக்களும் நடைபெறுகின்றன. AKSHANA BEAUTY PARLOUR. 077 6043376, 0774421153

---

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 6 வகையான Saree Blouse, 6 வகையான SHALWAR.No 36, Station Road, Wellawatte. Rennshiy. 0779360781 (ஒவ்வொரு புதன் கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வகுப்புக்கள்)

## ஜோதிடம்

அதிர்ஷ்ட விஞ்ஞானம் அதிர்ஷ்டம் தரும் அதிநவீன அதிர்ஷ்ட நியூமராலஜி எண்கணிதத்தில் 49 வருட ஆராய்ச்சியும் அனுபவமுடையவர். இலங்கை, இந்தியா, அரசியல்வாதிகள், தொழில் அதிபர்கள், சினிமா நட்சத்திரங்கள், வியாபாரிகள், இன்னும் ஆயிரக்கணக்கானவர்களுக்கும் அதிர்ஷடக் குறிப்புகள் அமைத்தவர். எந்த வயதிலும் செல்வம், கல்வி, தொழில், காதல், திருமணப் பொருத்தம், திருமணமானவர்களின் வேறு பல பிரச்சினைகளுக்கும், முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
தபால் மூல சேவையும் உண்டு. இரகசியம் பேணப்படும். அதிநவீன மனோதத்துவ நியூமராலஜி நிபுணர். பேராசிரியர் டாக்டர். ரசூல்மன்சூர் **Prof.Dr.RAZUL MANZURR,** (MOD MANZURR) No.198/2/A, 1st Floor, Hill street Dehiwala. Sri Lanka. **☎: 071-4136254, 078 - 5118019, 071-4182713, (060) 2172645. E-mail: razulmanzurr@yahoo.com**

---

ஜெனன ஜாதகக் குறிப்புக்கள் ரேகை சாஸ்திரம் எண் சோதிடம் பார்க்கவும். உள்நாட்டு வெளிநாட்டு குறிப்புகள் கணிக்கவும். நேரில் சந்திக்கலாம். Prof.சத்தியதாஸன் 21/17-1/1, fernando Road, Wellawatte.

---

ஸ்ரீ விஷாலினி ஜோதிடம். நம்பிக்கையுடன் வாருங்கள். சந்தோஷமாக வாழுங்கள். இந்தியாவிலும் இலங்கையிலுமாக 25 வருட காலத்திற்கும் மேலான அனுபவமிக்க திருமதி டாக்டர் ராஜேஸ்வரன் கௌரி லட்சுமி (அம்மா) அவர்கள் நேரடியாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் உங்களது சகல பிரச்சினைகளுக்கும் தீர்வை பெற்றுத் தருகிறார். ஜாதகம் பார்த்தல் ஜாதகம் கணித்தல் மாணவர் கல்வி திருமணத் தடைகள் குழந்தைப் பேறு இல்லாமை தொழிற் பிரச்சினைகள் பெயர் மாற்றம் அதிஷ்டக் கற்கள் சகல தோஷங்களுக்குமான பரிகாரங்கள். தொடர்பு: Mrs. Dr. R. Gowri Luxmi, 78/1, New Chetty Street, Colombo 13. Tel: 011 2394899, Mobile:0774746344. E-mail:Srikalaivaani gowri@gmail.com

## இந்திய யாத்திரை

பிள்ளையார்பட்டி, திருச்சி, மதுரை, தஞ்சாவூர், காஞ்சீபுரம், திருப்பதி, ஸ்ரீவைகுண்டம், திருவையாறு, திருவாரூர், திருவெண்காடு, திருக்கழுக்குன்றம், சுருட்டப்பள்ளி, சென்னிமலை, குற்றாலநாதர், அகத்தீஸவரம், திருக்கடையூர், கொல்லிமலை, மேல்மலையனூர், ஆறுபடைவீடுகள், நவக்கிரக ஆலயங்கள், கைலாசலிங்கபர்வதவர்தனி, சிதம்பரம், பிரகதீஸவரர், பொற்கோயில், இராமேஸ்வரம், திருவெண்ணாமலை, உட்பட 40 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம். 12 நாட்கள் 10 பேர் இந்தப் 10 பேரில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் (ஒருவருக்கு மட்டும்) திருப்பதி வெங்கடேஸ்வரரின் (4 கிறாம்) தங்கடாலர் ஒன்று பரிசளிக்கப்படும். விபரங்கட்கு: J. ஸ்ரீரெங்கநாதன் T.P: 0777680102 0724 222989.

## சேவை

வீடு மாற்றமா? அலுவலக மாற்றமா? உங்கள் வீட்டு உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், பாவனைப் பொருட்கள் அதிவிரைவாகவும், கவனமாகவும், நம்பிக்கையாகவும், ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றிக் கொடுப்பதற்கும், மற்றும் திருமண வைபவங்களுக்கான கார்களுக்கு நாடுங்கள். நவரட்ணம் மூவர்ஸ், 18-5/2, Perera Lane, Colombo - 06. Tel: 0777356706.

---

VISA விண்ணப்பம் தொடர்பான சட்டங்களை அறிந்திருப்பதாக நினைத்துக் கொண்டு நீங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய விசாக்கள் நிராகரிக்கப்படுவதற்கோ கால தாமதமாகுவதற்கோ ஆன காரணங்களை அறிந்திருக்க மாட்டீர்கள். எனவே விசாக்களுக்கு விண்ணப்பிக்க முன்னர் எங்களுடைய ஆலோசனைகளைப் பெற்று விண்ணப்பியுங்கள். LOTUS, 10 RUDRA MAWATHA, WELLAWATTE. T.P: 2362096.

## கல்வி

London A/L (Edexcel, IBO, Cambridge) Mathmatics (C1-C4, M1-M5, FP1-FP3, S1-S2) tuition தனிப்பட்ட (Individual) அல்லது 2-4 மாணவ (சிறு) குழுக்களாக கற்பிக்கப்படும். விபரங்களுக்கு:2589018

---

London O/L (Edexcel, Cambridge) Maths tuition, தனிப்பட்ட (Individual) அல்லது 2-4 மாணவ (சிறு) குழுக்களாக கற்பிக்கப்படும். விபரங்களுக்கு:2589018

---

Elecution வகுப்புகள் AWS பயிற்சி பெற்ற திறமையான ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனித்தனியே கவனமெடுக்கப்படும். தொடர்பு: 2810425

---

Local English medium ஆண்டு 6 தொடக்கம் O/L வரை கணிதம், விஞ்ஞானம், தனி குழு வகுப்புகள் பாடசாலை ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். தொடர்பு: 0714933096 2410240

---

London A/L, A/S, O/L Maths, Physics, chemistry, Further Maths home visits experienced Teachers. Contact 0602161438 or 0716670367.

---

Edexcel Cambridge O/L Biology, Human Biology Local O/L Science. Home visits by trained graduate International School Teacher. T.P:2755037.

---

Accountancy London A/L by CIMA qualetied former reputed International School Teacher. Home visited. T.P:2732347

---

தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களுக்கு கணித பாட வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. வீடு வந்தும் கற்பிக்கப்படும். D 8 Marigold flats 93 Peterson lane, Colombo-06. (ஆசிரியர் எ.முருகமூர்த்தி B.Sc) Tel: 2365195

---

ஆண்டு 10, 11 பயிலும் மாணவர்களுக்கான கணித பாடம் வீடு வந்து கற்றுத் தரப்படும். உங்கள் வசதிக்கேற்ப நேரங்கள்அமைத்து தரப்படும். தொடர்புகளுக்கு: 0786288427.

---

திறமைமிக்க பல்கலைக்கழக மாணவர்களால் கொழும்பில் தரம் 10, 11 மாணவர்களுக்கு எதிர்பார்க்கை மாதிரி வினாக்களுடன் கணித வகுப்புக்கள் தனிப்பட்ட / குழு முறையில் "A" சித்திக்கு உத்தரவாதத்துடன் மேற்கொள்ளப்படும். தொடர்பு: 0776150337.

---

IELTS Spoken & Advanced English. British Council Teacher னால் (M.Ed) Univercsity of Colombo, வெள்ளவத்தையிலும் கொட்டாஞ்சேனையிலும் குழு / தனியாக கற்பிக்கப்படும். Guaranted 7 Points in IELTS. Tel:0785211351.

## வைத்தியம்

மூக்கடைப்பு தும்மல் நெஞ்சுச்சளி இருமல் சுவாசிக்கும் போது கீ கீ என்று சத்தம் ஆஸ்துமா இழுப்பு அதனால் நித்திரையில்லை ஆஸ்துமாவும் எக்சிமாவும் மாறி மாறி வரும் இதனால் உடலில் துர்நாற்றம் வேலை செய்யமுடியாது நடக்க முடியாது உடனே களைப்பு மூச்சிழுப்பு அலர்ஜி இவை அனைத்துக்கும் சிறப்பான மூலிகை மருந்து சிகிச்சை பக்க விளைவு எதுவும் இல்லை குறைந்த பத்தியம். சித்த வைத்தியர். Dr.R.Sivagurunathan. 0777301569. வெள்ளவத்தை. vaithiyar@hotmali.com

---

உடல் கொழுக்க மெலிய மார்பு பெரிதாக்க சிறிதாக்க ஆண் உடம்பு பெரிதாக்கல் பாலியல் குறைபாடு பெண் ஆண் முடி வளர்ச்சி முகப்பரு நீக்கம் கண் கருவளையம். ஜனனி Hello Dr. , Dr.N.L.Ratnajothy. 077 4421157, 071 4847629, 077 4421153, 011 4994042.

JAFFNA
SPECIAL COLLECTION

# சமஷ்டி: இந்தியா மிகக் கஷ்டப்பட்டு பெற்றுத்தந்த மாகாண சபையை விட மேம்பட்ட தீர்வு

அயல் வல்லாதிக்க நாடான இந்தியா, தமிழரின் விடுதலைப் போராட்டத்தைப் பகைத்துக்கொண்டிருப்பது பாலசிங்கத்தின் நெஞ்சை அரித்துக்கொண்டிருந்தது. விரும்பியோ, விரும்பாமலோ - தமது உடன்பாட்டுடனோ, உடன்பாடின்றியோ - புலிகளுக்கும் புதுடில்லிக்கும் இடையிலான விரிசல் விசாலமாகிப் போனதில் அன்டன் பாலசிங்கத்துக்கு அதிக மனவருத்தம்.

தன்னுடைய புவியியல், கேந்திர நலன்களுக்காக தான் அதுவரை தூண்டி வளர்த்த ஈழத் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் தீவிர உணர்வையும் தானே பலியிடுவதற்கும் அழிப்பதற்கும் இந்தியா கங்கணம் கட்டி நின்றபோது அதனால் தலைவர் பிரபாகரனைப் போல அன்டன் பாலசிங்கத்துக்கும் கடுஞ்சீற்றமும், எரிச்சலும், விசனமும் ஏற்பட்டன என்பது உண்மைதான். ஆனாலும் அயல் வல்லாதிக்க நாட்டை வீணே பகைத்துக் கொள்வது விடுதலைப் போராட்டத்துக்கு விபரீத விளைவுகளை - நெருக்கடிகளை - உருவாக்கும் என்ற யதார்த்தத்தையும் மதியுரைஞர் உணர்ந்திருந்தார். விடுதலைப் போராட்டத்தைக் கைவிடாது இந்தியாவையும் பகைத்துக்கொள்ளாமல் இவ்விவகாரத்தை முன்னெடுக்க தம்மால் இயன்றவரை கஷ்டப்பட்டார் பாலா.



இந்தியத் துருப்புக்கள் அமைதி காக்கும் படைகள் என்ற பெயரில் ஈழத் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, சன்னதம் ஆடி, பேயுருக் கொண்டு பெரும் நாசம் விளைவித்தபோது, வேறு வழியின்றி அதற்கு எதிராக பாலசிங்கம் வகுத்த அரசியல் சாணக்கியம் நிறைந்த தந்திரோபாய வியூகம் நன்கு வேலை செய்தது.

எதிரியான இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் கை குலுக்கி, இந்தியாவைப் பொது எதிரியாக்கி, படைத் துருப்புக்களை ஈழ மண்ணில் இருந்து வந்த வழியே மூடை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு அவமானத்தைச் சுமந்தபடி வெளியேற வைத்ததில் பாலசிங்கத்தின் 'நரித்தந்திரம்' அளப்பரிய பங்கு வகிக்கின்றது என்பது தெரிந்த இரகசியம். ஆனால் அது புதுடில்லி - புலிகள் உறவில் விரிசலை மேலும் விசாலப்படுத்தவே வழிசெய்தது.

அதற்குப் பின்னர் பாலசிங்கம்

## ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுத் தொடர் - XIII

பார்வையாளராகப் பார்த்திருக்க அரங்கேறிய பல சம்பவங்கள் புலிகள் - புதுடில்லி இடையே நிரந்தர விரிசலை ஏற்படுத்தின. அந்தகைய சம்பவங்களில் ராஜீவ் காந்தி கொலை, கேணல் கிட்டு உயிரிழக்கக் காரணமான கப்பல் வழி மறிப்புப் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது இந்தியா தடை விதித்து, உறவு நிரந்தரமாக உடைந்து போன பின்னணியில் அதை மீளக் கட்டி நேர்சீராக்குவதற்கு ஒரு வாய்ப்புக் கிட்டாதா என்று பேராவலுடனும் பெரும் எதிர்பார்ப்புடனும் சாகும்வரை காத்திருந்தார் - பார்த்திருந்தார் - பாலசிங்கம்.

ரணில் அரசுடன் 2002 முற்பகுதியில் அமைதிப் பேச்சு நடந்த காலத்தில் அந்தப் பேச்சுக்களோடு இந்தியாவைச் சம்பந்தப் படுத்துவதன் மூலமாவது புதுடில்லி - புலிகள் உறவைச் சீர் செய்து விடமுடியுமா என்ற ஆதங்கம் அவரிடம் இருந்தது.

அமைதிப் பேச்சுக்களை இந்தியாவில் நடத்துவதன் மூலம் -

குறைந்தபட்சம் அமைதிப் பேச்சு முயற்சிக்காக லண்டனில் இருந்து வன்னிக்குத் தாம் மேற்கொள்ளும் பயணங்களை இந்தியா ஊடாக செய்வதன் மூலம் - புதுடில்லி - புலிகள் உறவு துளிர்க்க வாய்ப்புக்கிட்டாதா என்ற ஏக்க எத்தனம் அவரிடம் இருந்ததை நான் அறிவேன்.

இது தொடர்பாக பாலசிங்கம் எனக்குத் தெரிவித்த ஒரு தகவலை செய்தியாக்கி 2001 ஜனவரி இருபதாம் திகதி 'உதயன்', 'சுடர் ஒளி' நாளிதழ்களில் தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்தோம்.

இலங்கை அரசுடனான அமைதிப் பேச்சுக்களை இந்தியாவில் நடத்தவும் தயார் என்ற புலிகளின் நிலைப்பாட்டை இந்தியா உட்பட சர்வதேச சமூகத்துக்கு தெரியப்படுத்தவும் -

அதன் மூலம் புதுடில்லியுடன் சமரசம் செய்யப் புலிகள் தயாராக இருக்கிறார்கள் என்ற தமது நிலைப்பாட்டைக் கோடி காட்டவும் - இந்தச் செய்தியை என் மூலம் பாலா அண்ணன் வெளிப்படுத்தினார் - நமது பத்திரிகைகளில் விதைத்தார் - என்றே நான் கருதுகிறேன்.

அந்தச் செய்தி 'பேச்சு நடத்த இந்தியா இடமளிக்க முன்வரும்; புலிகள் தொடர்ந்து நம்பிக்கை' - என்ற தலைப்பில் புலிகளின் உயர் வட்டாரங்கள் தெரிவித்தன என்று குறிப்பிட்டுப் பிரசுரமாகியிருந்தது. எனக்கு அந்தத் தகவலைத் தந்த - அப்படி செய்தியொன்றைப் பிரசுரிக்க புதினம் தந்த - அந்த 'செய்தி மூலம்' பாலசிங்கம்தான்.

அந்தச் செய்தி வெளியாகி ஓரிண்டு நாட்களில் தலைவர் வே.பிரபாகரனையும், அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் தனித்துச் சந்தித்து சிலமணிநேரம் விரிவாக உரையாடவும், அவர்களுடன் விருந்துண்ணவும் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. அச்சமயம் ஓரிரு தினங்களுக்கு முன்னர் வெளியான 'உதயன்', 'சுடர் ஒளி' இதழ்களை தலைவர் பிரபாகரன் ஆர்வத்துடன் எடுத்துப் புரட்டிப் பார்த்தபோது அதை எனது கமராவில் 'கிளிக்' செய்யவும் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

'பேச்சுக்கு இந்தியா இடமளிக்க முன்வரும் என்ற புலிகளின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் தலைப்புச் செய்தி அடங்கிய 'உதயன்' நாளிதழை தலைவர் பிரபாகரன் வாசித்துக் கொண்டிருப்பதை இத்துடன் பிரசுரமாகியுள்ள அப் படத்தில் ஒன்றில் நீங்கள் காணலாம்.

* * * *

இப்படியெல்லாம் பாலசிங்கம் முயற்சி எடுத்தும் கூட - புதுடில்லியுடன் சமரசம் செய்யும் அவரது எதிர்பார்ப்பு இறுதிவரை நிறைவேறவேயில்லை.

அமைதிப் பேச்சின் அரசியல் நகர்வாக 2002 டிசம்பரில் நோர்வேயில் இடம்பெற்ற பேச்சுக்களில் சமஷ்டித் தீர்வு குறித்து ஆராய்வதற்கு இலங்கை அரசும், புலிகளும் இணங்கியமையை வரவேற்பதாக இந்தியா அச்சமயம் பெயரளவில் அறிவித்த போதிலும், அந்தக் கூட்டு முயற்சி இணக்கம் புதுடில்லி அதிகார வர்க்கத்தினிடையே எரிச்சலையும் கொதியையும் ஏற்படுத்தின என்பதுதான் உண்மை.

இந்தியாவைப் பொறுத்தவரை தான் இலங்கை மீது பெரும் அழுத்தத்தைப் பிரயோகித்து, இலங்கை வான் எல்லைக்குள் அத்துமீறி விமானங்களில் நுழைந்து, யாழ் குடாநாட்டின் மீது அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பொதிகளைப் போட்டு, இலங்கையின் இறைமையையே கேள்விக்குள்ளாக்கி, பெரும் இராஜதந்திர அழுத்தத்தைப் போட்டு, கொழும்பைப் பணியவைத்து, ஈழத் தமிழர்களுக்கு எடுத்துக் கொடுத்தது உயர்ந்தபட்சம் வெறும் மாகாணசபைதான்.

அதன் பின்னர் பல்லாயிரம் துருப்புக்களை இலங்கையில் இரண்டரை வருடங்கள் நிலைகொள்ள வைத்து, நீண்ட பெரிய யுத்தம் ஒன்றை நடத்தியும் அந்த மாகாண சபைக்கு உருப்படியான அதிகாரங்களைக் கூட இந்தியாவால் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.



உதயன்

நாட்டின் யுத்தமோ, சமாதானமோ எதுவானாலும் கூட முடிவெடுக்கும் உரிமை தனதே என்கிறார் சந்திரிகா

பேச்சு நடத்த இந்தியா இடமளிக்க முன்வரும்!

புலிகள் தொடர்ந்து நம்பிக்கை

பேச்சை இந்தியாவில் நடத்த அனுமதிப்பதா? பல கட்சிகளுடனும் மத்திய அரசு ஆலோசனை

அப்படியிருக்க, அந்த மாகாணசபைத் திட்டத்தை, உப்புச் சப்பற்ற வெறும் உளுத்துப் போன அதிகார மாயை என ஒதுக்கித் தள்ளி நிராகரித்த புலிகள், இப்போது தாங்களே போராடி, இலங்கை அரசை உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டிக் கட்டமைப்புத் தீர்வு குறித்து ஆராய்வதற்கு இணங்கும் அளவுக்கு இறங்கியிருக்கின்றார்கள் என்றால் அந்த இணக்கம் குறித்துப் புதுடில்லிக்கு எரிச்சல் வராதா பின்னே...!

சமஷ்டித் தீர்வு பற்றிய ஒஸ்லோ இணக்கப்பாட்டு அறிக்கை, புதுடில்லியில் இலங்கை விவகாரத்தைக் கையாளும் மேசையில் விரிவாக ஆராயப்பட்டதும், அந்த 'சாதனையை' எட்டிய பாலசிங்கத்தை புதுடில்லி உள்ளளவில் அழுக்காறுடனேயே நோக்கியது என்பதும் பாலா அண்ணனுக்கு நன்கு தெரிந்திருந்த விடயங்களே.

இந்தப் பின்புலத்தில்தான் - ராஜீவ் கொலை மற்றும் புலிகளின் இராணுவ, அரசியல் தந்திரோபாயக் காய்நகர்த்தல்கள் போன்றவற்றினால் புலிகள் மீது புதுடில்லி கடும் சீற்றம் கொண்டிருந்த நிலையில்தான் - ராஜீவின் மனைவி சோனியாவின் முழு ஆதிக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் கீழ் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும் பின்னர் சில வருடங்களுக்கு முன்னர் புதுடில்லி அரசதிகாரமும் வந்தன.

அதனால் புதுடில்லி - புலிகள் சமரசத்துக்கு இனி, இப்போதைக்கு வாய்ப்பேயில்லை என்ற கடும் நிலைமையும் உருவானது.

அவ்வேளையில்தான் - சில வருடங்களுக்கு முன்னர் - அந்த நியமனம் இடம்பெற்றது.

அந்த அதிகார நியமனமே ஒரு வாய்ப்பான, வசதியான சூழ்நிலை யைத் தமக்குத் தராதா என்று பாலா அண்ணன் கருதினார்; ஏங்கினார்.

அந்த நியமனத்தைப் பெற்றவர் வேறு யாருமல்லர்; இந்தியாவின் பிரதமரின் பிரதம


எம்.கே.நாராயணன்

பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன்தான்.

இந்த நாராயணன் முன்னரே அன்டன் பாலசிங்கத்துக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் மிகவும் பரிச்சயமானவர்.

அவர் இப்போது இருக்கும் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் என்ற பதவி மிக முக்கியமானது. இப்பதவி ஓர் அமைச்சரின் அந்தஸ்துக்குரியது. நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான முக்கிய தீர்மானங்களை இந்தியப் பிரதமரின் சார்பில் பல தரப்பினருடனும் தொடர்பு கொண்டு எடுக்கும் அதிகாரம் இப்பதவியில் உள்ளவருக்கே உண்டு. குறிப்பாகச் சொல்வதானால் போர், சமாதானம் போன்ற மிக முக்கிய - அவசர - தீர்மானங்களை சம்பந்தப்பட்ட கணத்தில் எடுக்கவேண்டிய நேரத்தில் அந்தப் பொறுப்பு பெரும்பாலும் இந்தப் பதவியில் இருப்பவரிடமே தங்கியிருக்கும். அத்துடன் பாதுகாப்புடன் தொடர்புபட்ட வெளியுறவுக் கொள்கையில் தீர்மானங்களை எடுப்பது முதல், நாட்டுக்கு வெளியிலும், நாட்டுக்கு உள்ளேயும் செயற்படும் உளவு அமைப்புக்கள், அரசின் இரகசியச் செயற்பாடுகள் எல்லாமே இந்தப் பொறுப்பில் உள்ளவரின் கீழேயே வரும்.

அந்த வகையில் இப்பதவிக்கு வந்துள்ள நாராயணனின் பங்களிப்பும் இன்றைய நிலையில் புலிகள் - புதுடில்லி உறவைத் தீர்மானிப்பதில் முக்கியமானது என்பது பாலசிங்கத்துக்கு நன்கு தெரியும்.

பாலாவுக்கும் நாராயணனுக்கும் இடையில் நீண்ட காலப் பழக்கமும் - நல்லுறவும் - தனிப்பட்ட முறையில் புரிந்துணர்வும் - இருந்தன.

எண்பதுகளின் நடுப்பகுதியில் புலிகள் இயக்கத்தின் தலைமை தமிழகத்தில் நிலைகொண்டு இயங்கிய காலத்தில் புலிகள் சார்பில் இந்தியாவின் பல்வேறு

(27ஆம் பக்கம் பார்க்க)

- வித்தி -

சுடர் ஒளி சிறுகதை

# மனித நேயம்



வெளிநாட்டிலிருந்து திரும்பிய எட்வேட் சிதிலமடைந்து போயிருந்த தனது ஊரைப் பார்த்ததும் நொடிந்து போயிருந்தான். நாச யுத்தத்தின் கொடுமையால் ஊரில் பல இழப்புக்கள் ஏற்பட்டிருந்ததை மனைவியின் கடிதம் மூலமும் தொலைபேசி உரையாடலின் மூலமும் ஏற்கனவே அறிந்திருந்தான். எனினும், நேரில் வந்து பார்த்தபோதுதான் அவற்றின் தாக்கத்தை - அதன் நிய பரிமாணங்களை - அவனால் உணரமுடிந்தது. தேவாலய சேதம் அவனை வாட்டியது.

அந்த ஊரில் முஸ்லிம்களும், இந்துக்களும் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். கிறிஸ்தவர்கள் மிகக் குறைந்தளவிலேயே வாழ்கிறார்கள். எனினும் அவர்கள் எல்லோரும் மொழியால் ஒன்றுபட்டவர்கள்.

எட்வேட் பிறந்தது, வளர்ந்தது, வாழ்ந்தது எல்லாம் இந்த ஊரில்தான். 1977ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் அவன் பெற்றோர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட பின் அநாதைச் சிறுவனாகிவிட்ட அவனை வளர்த்து உருவாக்கியதெல்லாம் அருட்தந்தை சகாயம் அடிகளார்தான். தாயாகவும் தந்தையாகவும் இருந்து அவனைப் படிப்பித்து உரிய வயதில் திருமணம் செய்து வைத்ததும் அவர்தான்.

சிலவருடங்கள் வெளிநாட்டில் அவன் வாழ்ந்தபோதுதான் அவனது ஊர் சுற்றிவளைக்கப்பட்டு சல்லடை போடப்பட்டது. இராணுவ நடவடிக்கைக்கு முகம் கொடுக்க முடியாது மக்கள் மசூதிகளிலும் கோயில்களிலும், தேவாலயங்களிலும் தங்கியிருந்தனர். அவர்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயத்தின் மீது குண்டு வீசப்பட்டது. அப்போதுதான் தேவாலய முகப்புக் கோபுரம் சேதமடைந்தது. தேவனின் அருளால் மக்கள் தப்பிவிட்டார்கள். அன்று சிதைவடைந்த தேவாலயம் இன்னமும் கட்டி எழுப்பப்படவில்லை.

எட்வேட் ஊர் திரும்பியதும் சகாயம் அடிகளாரைச் சந்திக்கப் போனபோது அவர் சிதைவுற்ற ஆலயம் பற்றியே பெரிதும் கவலைப்பட்டுக் கூறினார்.

''எட்வேட் நான், சாக முன் இந்த ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்யவேண்டும். அடுத்த கிறிஸ்மஸ் கொண்டாட்டத்துக்கு முன் தேவாலயம் புதுப்பொலிவு பெறவேண்டும். திருச்சபையின் உதவியுடன் முக்கால் பங்கு வேலையை நிறைவேற்றிவிட்டேன். நீ அனுப்பிய பணம் பெரிதும் பயன்பட்டது. மிகுதி வேலைகளையும் செய்திட வேண்டும். இன்னும் நான் அதிக காலம் வாழப்போவதில்லை. கர்த்தர் என்னை அழைப்பதற்கு முன்னர் நான் இந்தத் திருப்பணியை நிறைவேற்ற வேண்டும். எமது மக்களோ இந்த ஊரில் சிறுபான்மையினர். கொடிய யுத்தத்தால் இருந்தவற்றையும் இழந்துவிட்டார்கள். கடல் வலயத் தடை காரணமாக தொழில் வாய்ப்பையும் இழந்து போயிருக்கிறார்கள். அடுத்த நேர உணவுக்கே அவர்கள் தாளம் போடும்போது திருப்பணிக்கு இனியும் அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது...'' சகாயம் பாதரின் குரல் கரகரத்தது.

அவரது ஏக்கத்திலுள்ள நியாயம் எட்வேட்டுக்குப் புரிந்தது.

''பாதர்... என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கின்றது.... இன்னும் கொஞ்சம், ஊரில் வசதியாக இருப்பவர்களிடம் கேட்போம்...'' என்று சொல்ல ஆரம்பித்த எட்வேட்டை சகாயம் அடிகளார் இடைமறித்தார்.

''வேண்டாம் எட்வேட், நீ ஏற்கனவே நிறைய உதவி செய்துவிட்டாய். அது மட்டுமல்ல, உனக்கு ஒரு சொந்த வீடு இல்லாமல் வாடகை வீட்டில் இருக்கிறாய். உனது மனைவி ஜெனீபருக்கும் நிறைய எதிர்பார்ப்புக்கள் இருக்கும்''

''இல்லை பாதர்... இறைவனுக்கு ஒரு இல்லம் இருந்தால் அது எல்லோருக்கும் இருக்கிற மாதிரி.... இந்த யுத்த காலத்தில் எத்தனையோ பிரமாண்டமான வீடுகள் எல்லாம் வான் தாக்குதல்களினால் கற்குவியல்களாகிவிட்டன. இனியும் அப்படி நடக்காது என்பதற்கு என்ன நிச்சயம். அப்படியான வேளைகளில் எமக்கு தஞ்சமளிக்கப்போவது தேவாலயம்தானே?'' எட்வேட்டின் எடுத்துரைப்பில் சகாயம் அடிகளார் உற்சாகமடைந்தார்.

''சரி எட்வேட்.... உன் விருப்பப்படியே செய்...'' என்று ஆசீர்வதித்தார்.

சகாயம் அடிகளாரிடமிருந்து விடைபெற்றுச் சென்ற எட்வேட் அடுத்த நாளே செயலில் இறங்கினான். வேலை மதிப்பீட்டைக் கணக்கிட்டபோது அவனிடமுள்ள பணம் மிகச் சொற்ப வேலைக்கே போதுமானது என்று புரிந்தது. எனினும், சகாயம் அடிகளாரின் விருப்பப்படி கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னதாகவே கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற முனைப்புடன் முயன்றான். முதற்கட்டமாக கடைகள் வைத்திருக்கும் கிறிஸ்தவர்களை அணுகினான். அவர்கள் ஏற்கனவே உதவி செய்திருந்த போதும் மறுபடியும் தம்மால் இயன்றவரை உதவினார்கள். எனினும், பற்றாக்குறைதான். இருக்கும் பணத்துடன் ஒரு வித வைராக்கியத்துடன் வேலைகளை ஆரம்பித்தான் எட்வேட். முக்கால் பங்கு வேலைகள் நிறைவேறியபோது பணம் தீர்ந்துவிட்டது. என்ன செய்வதென்றே புரியாமல் எட்வேட் கலங்கினான். எங்காவது கடன்பட்டாவது வேலையை நிறைவேற்றவேண்டும் என்ற எண்ணத்துடன் சுறுசுறுப்பாக இயங்கிய எட்வேட்டுடன் பீற்றர், மத்தியாஸ், எட்மன் போன்ற இளைஞர்களும் இணைந்து கொண்டார்கள். ஊரிலே கடன்பெறுவது என்றாலும் மிகவும் சிரமம். வசதி படைத்தவர்கள் வெகு சிலரே இருந்தனர். அல்ஹாஜ் ஹாசிம் உமர், சண்முகம் முதலாளி முதலான பிற மதத்தவர்கள் இந்த ஊரில் வசதி படைத்தவர்கள்.

''உமரிடமும், சண்முகத்திடமும் கடன் கேட்டுப் பார்ப்போம்'' என்று எட்வேட் தனது அபிப்பிராயத்தை நண்பர்களிடம் கூறியபோது அவர்கள் ஆர்வம் குன்றியவர்கள் போல் பதிலளித்தார்கள். ''ஏற்கனவே நம்மில் பலரும் அவர்களிடம் கடன்பட்டிருக்கிறோம். இனியும் படமுடியாது. கேட்டாலும் தருவார்கள் என்று நாம் நம்பவில்லை.''

''முயற்சி திருவினையாகலாம். எதற்கும் ஒருமுறை கேட்டுப் பார்ப்போமே...'' என்ற எட்வேட்டின் கூற்றை அரைகுறை மனதுடன் ஏற்றுக் கொண்டு நண்பர்கள் உடன்பட்டார்கள்.

உமர் முதலாளியிடம் அவர்கள் சென்றபோது அவர்கள் தற்போது அவர் அன்போடு அவர்களை வரவேற்று உரையாடினார். ''தேவாலயம் கட்டுறீங்க போல...'' அவராகவே கேட்டபோது இவர்களது தயக்கம் விடைபெற்றது.

''ஆமாம் முதலாளி... நத்தார் பண்டிகைக்கு முன்னர் கட்டி முடிக்க யோசித்தோம். ஆனா நிதிப்பற்றாக்குறை..'' என்று இவர்கள் சொல்லி முடிப்பதற்கு முன்னதாகவே உமர் குறுக்கிட்டார்.

''எவ்வளவு பற்றாக்குறை? சொல்லுங்கள் நான் தருகிறேன்.''

''நன்றி முதலாளி. இரண்டு லட்சம் இருந்தால் வேலையைப் பூர்த்தி செய்திடலாம். இந்த உதவியை நீங்க செய்தா சீக்கிரமே திருப்பித்தர முயற்சிப்போம்...'' எட்வேட் தயங்கியபடி கூறினான்.

''என்ன தம்பி பேசுறீங்க? இறைபணிக்கு கடன் கொடுப்பதா? அது மகாபாவம். நான் அன்பளிப்பாக கொடுத்தால் வாங்க மாட்டிங்களா?'' என்று உமர் முதலாளி கூறியதும் எட்வேட்டுக்கு புல்லரித்தது.

அவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும்போதே உமர் முதலாளியைச் சந்திக்க சண்முகம் முதலாளியும் வந்தார். ''என்ன விசேஷம் எட்வேட் தம்பி...? எல்லோரும் ஒன்றாக வந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்ட சண்முகம் முதலாளியிடம் எல்லா விவரமும் கூறினான்.

''அடடே நல்ல விசயமாச்சே. ஊர் மக்களெல்லாம் அகதிகளாக தேவாலயத்தில் தஞ்சமடைந்தபோது சகாயம் பாதர் எவ்வளவு உதவி செய்தார். 'அவர் இனமத பேதமின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்த மனிதாபிமான உதவிகளை யாரும் மறக்க முடியாது. அதுமட்டுமல்லாமல் இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகி மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தபோது இராணுவப் பொறுப்பதிகாரியைச் சந்தித்து உரையாடி அவர் செய்த பணிகளால்தான் இப்ப இங்கே நாங்க நிம்மதியாக இருக்கிறோம். பாதர் ஒரு சொல்லு சொல்லியிருந்தால் எவ்வளவோ உதவி செய்திருப்போம். இப்போ உங்களுக்கு எவ்வளவு தேவை?'' சண்முகம் முதலாளி அவர்களை நோக்கினார்.

எட்வேட் பூரித்துப்போனான். ''முதலாளி நீங்க இனமத பேதமின்றிச் செய்யுற உதவிக்கு நாங்க என்ன கைமாறு செய்யப்போகிறோம்...? ''

''தம்பி மதம் எங்கிறது மனிதனை மனித நேயம் மிக்கவனாக வாழ வைக்கிறதுக்குத்தான். இடையில் வந்த மதவெறியர்கள் தான் மதம் பிடிச்சு மதங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்திவிட்டாங்க. இறைவன் ஒருவன்தான். இயேசு, ஈசன், அல்லா எப்படி அழைத்தாலும் அது இறைவனைத்தான் குறிக்கும்'' என்றார்.

எட்வேட்டும் நண்பர்களும் மகிழ்வோடு விடை பெற்றனர். இனி இந்த கிறிஸ்மஸ் அவர்களுக்கு இனிக்கும்.

**சந்திரகாந்தா முருகானந்தன்**

# ஆபிரிக்கா!



உலகின் இரண்டாவது பெரிய கண்டம் ஆபிரிக்கா.

உலகின் மிக நீளமான நதியான நைல் இந்தக் கண்டத்தில்தான் ஓடுகிறது. மேலும், சாய்ரே, நைஜர், சாம்போசி எனும் மூன்று பெரிய நதிகளும் ஓடுகின்றன.

உலகிலேயே பெரிய பாலைவனமாகிய சகாரா மற்றும் கலஹாரி ஆகிய இரண்டு பாலைவனங்களும் இந்தக் கண்டத்தில்தான் உள்ளன.

ஆபிரிக்காவில் 14,300 மொழிகள் பேசுகின்றனர்.

ஆபிரிக்காவில் மிகப் பெரிய சிகரம் கிளிமஞ்சாரோ. இதன் உயரம் 5,895 மீற்றர்.

ஆபிரிக்காவின் மிகப்பெரிய ஏரி விக்டோரியா. இதன் பரப்பு 68,800 சதுர கிலோ மீற்றர்கள்.

மக்கள் தொகை அடிப்படையில் மிகப்பெரிய நாடு நைஜீரியா. 11 கொடியே 50 லட்சம் மக்கள் இங்கு வாழ்கின்றனர்.

தென்ஆபிரிக்கா தங்கச் சுரங்கத்தில் இரண்டு தொன் மண்வெட்டி எடுத்தால் அதனுள்ளே 30 கிராம் தங்கம் கிடைக்கிறதாம்.

ஆபிரிக்க நாடுகளில் பெரும்பாலானவை பிரெஞ்சுக் காரர்கள் போட்ட ரயில் பாதைகளையே இன்றும் பயன்படுத்துகின்றன.

தென்னகத் தமிழ் திரையுலகத்தைப் பொறுத்தவரையில் கதாநாயகர்களாக திரையுலகுக்குள் நுழைபவர்கள் ஆரம்பத்தில் தங்களின் நடிப்பினால் ஏராளமான ரசிகர்களை சம்பாதித்துக் கொள்கிறார்கள். பின்பு தங்களின் இமேஜ் மாறிவிடாதளவுக்கு கடைசி வரை ஒரே பாணியில் நடித்துவிடுகின்றார்கள். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., ஜெமினி கணேசன், ரவிச்சந்திரன் போன்ற பழைய நடிகர்களிலிருந்து இன்றைய இளம் நடிகர்கள் விஜய் மற்றும் அஜித் வரை இதையே பின் பற்றுகிறார்கள்.



# தரமான திரைப்படங்களில் நடித்ததன் மூலமாக ரசிகர்களின் இதயத்தில் இடம் பிடித்த நடிகர் சத்யராஜ்

சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.ஆர், முத்துராமன், ஏவி.எம்.ராஜன், எம்.ஆர்.ராதா போன்ற அந்தக்கால நடிகர்களிலிருந்து விக்ரம், கமல்ஹாசன், ஜீவா போன்ற புதிய நடிகர்கள்தான் அவ்வப்போது தங்களின் பாணியை மாற்றி நடித்து ரசிகர்களின் அமோக பாராட்டினை பெற்றுக்கொள்கிறார்கள். இவர்களில் ரஜனிகாந்தும், சத்யராஜும் சற்ற வித்தியாசமானவர்கள். அதாவது வில்லனாக அறிமுகமாகி கதாநாயகர்களாக உயர்ந்தவர்கள். இவர்கள் இருவரிலும் சத்யராஜ முற்றிலும் மாறுபட்டவர்.

இவர் நடித்து வெளிவந்த 'பெரியார்' படம் அனைத்துத் தரப்பு மக்களாலும் பெரிதும் பாராட்டி வரவேற்கப்பட்ட அற்புதமானதொரு படமாகும். இவரின் திறமைக்கு பல திரைப்படங்கள் சாட்சியாக இருந்தாலும் கூட 'பெரியார்' இவரின் திரைப்பட வரலாற்றில் ஒரு மைல்கல்லாகவே இருக்கிறது. இந்த நிலையில் இவர் நடித்து வெளிவரவுள்ள இன்னொரு படம் சம்பந்தமான பரபரப்பான தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

'அழகி', 'சொல்ல மறந்த கதை', 'தென்றல்', 'பள்ளிக்கூடம்' போன்ற அருமையான படங்களை ஒளிப்பதிவு செய்து இயக்கி தமிழ்த் திரையுலகத்தை ஆரோக்கியமான பாதைக்கு இட்டுச் சென்று கொண்டிருக்கும் தங்கர் பச்சானின் 'ஒன்பது ரூபாய் நோட்டு' திரைப்பட அறிமுக விழா அண்மையில் நடைபெற்றது.

இந்தப் படத்தில் சத்யராஜ் நடித்தார் என்பதைவிட வாழ்ந்து காட்டினார் என்பதுதான் உண்மை. இந்தப் படம் சத்யராஜின் திரையுலக வாழ்க்கையில் இன்னுமொரு மைல்கல் என்பதுதான் உண்மை.

சுமார் முப்பது வருடங்களுக்குப் [illegible] வில்லன்களுக்கு அடியாளாக [illegible] சிகளில் வந்து இரண்டொரு கா[illegible] போன சத்யராஜுக்கு சரியான களம் அமைத்துக் கொடுத்தவர் மறைந்த இயக்குனர் ராஜசேகர். இவர் சத்யா மூவிஸுக்காக 'காக்கிச்சட்டை' என்ற படத்தை இயக்கிய போது இந்தப் படத்தில் கமல்ஹாசன் கதாநாயகனாகவும், ராஜீவ் வில்லனாகவும், சத்யராஜ் துணை வில்லனாகவும் ஒப்பந்தம் செய்யப்பட்டார்கள். ஆனால், சத்யராஜின் வித்தியாசமான நடிப்பு ராஜசேகருக்கு பிடித்து விட்டது.

கமல்ஹாசனும் சத்யராஜிடம் இருந்த திறமையைக் கண்டு கொண்டார்.

பாலா சங்குபிள்ளை

பின்பு சத்யராஜே அந்தப்படத்தில் பிரதான வில்லனாகி 'தகடு, தகடு' என்ற இரண்டு வரிகளால் எங்கேயோ போய்விட்டார்.

இவரின் 'லொள்ளு' வசனங்களுக்காகவே திரைப்படங்கள் பிய்த்துக் கொண்டு ஓடின. ஆனாலும் அவ்வப் போது நல்ல படங்களிலும் இவர் நடிக்கத் தவறவில்லை. அவற்றில் 'வேதம் புதிது', 'பாலைவன ரோஜாக்கள்', 'பூவிழி வாசலிலே', 'பொம்முக்குட்டி அம்மாவுக்கு', 'அமைதிப்படை' போன்ற நல்ல படங்களில் நடித்தமையினால் இவர் பேசப்பட்டார். இவரின் லொள்ளு வசனங்கள், நடிப்புக்காக இவரது படங்கள் ஓடினாலும் கூட, தன் மகன் சிபிராஜ் படத்துறைக்கு வந்தவுடன் நல்ல படங்களில் மட்டும் நடிப்பது என்ற முடிவுக்கு வந்தார். அல்லது வர்த்தக ரீதியாக சில திரைப்படங்களில் நடித்தாலும் கூட மன திருப்திக்காக அவ்வப்போது நல்ல படங்களிலும் அவர் நடிக்க ஆசைப்பட்டார். அப்படி அவர் நடித்து அனைவராலும் பாராட்டப்பட்ட படம்தான் 'பெரியார்'.

'கடவுள் இல்லை' என்ற புரட்சிகரமான கொள்கையுடைய 'பெரியாரின்' சிஷ்யர்களில் ஒருவரான சத்யராஜ் பெரியாராகவே நடித்ததில் உண்மையிலேயே பெருமைப்பட்டுக் கொண்டார். அதே போல தங்கர் பச்சானின் 'ஒன்பது ரூபாய் நோட்டு' படத்தில் நடித்ததையும் இவர்பெரும் பாக்கியமாக நினைத்தார்.

'ஒன்பது ரூபாய் நோட்டு' பட அறிமுக விழாவில் கலந்து கொண்டு பேசிய நடிகர் விஜய் கூட சொன்னார் "தங்கர் பச்சானின் படமொன்றில் நான் நடிக்க விரும்புகிறேன். ரசிகர்கள் என்னிடம் எதை எதிர்பார்க்கிறார்களோ அத்தோடு தங்கர் பச்சானின் கைவண்ணத்துடன் கூடிய நல்ல படமொன்றை அவர் இயக்கினால் நிச்சயமாக அந்தப்படத்தில் நான் நடிப்பேன்...."

தங்கர் பச்சான் ஒரு யதார்த்தமான இயக்குனர் என்பதற்கப்பால் நல்ல படங்களை தரவேண்டும் என்ற எண்ணமுள்ளவர். அவரின் 'ஒன்பது ரூபாய் நோட்டு' படத்தில் நடித்ததன் மூலம் சத்யராஜ் தன்னுடைய திரையுலக வாழ்வில் ஒரு வரலாற்றினை ஏற்படுத்திக் கொண்டார். ஏதோ வந்தார். நடித்தார். மறைந்தார் என்று சரித்திரம் சொல்லாமல் நல்ல திரைப்படங்களின் மூலம் இவர் வாழ்ந்தார் என்ற சொல்லும்படி சத்யராஜ் நடந்து கொண்டார்.

அன்று [illegible] காக்கிச் சட்டையில் 'தகடு, தகடு' என பேசி [illegible] ரசிகர்களின் கைதட்டலைப் பெற்றுக் கொண்ட சத்யராஜ் இன்று 'பெரியார்', 'ஒன்பது ரூபாய் நோட்டு' போன்ற தரமான படங்களில் நடித்ததன் மூலம் ரசிகர்களின் இதயத்தில் நீங்காத இடத்தினைப் பெற்றுக் கொண்டார் என்பது தான் சத்தியமான உண்மை.

## பேனா நண்பர்கள்

உங்கள் அபிமான சுடர்ஒளி வாரஇதழ் பத்திரிகையில் வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'பேனா நண்பர்கள்' பகுதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆர்வமுள்ளவர்கள் புகைப்படப் பிரதியுடன், தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.
கீழ்க்கண்ட விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். பெயர், முகவரி, வயது, பொழுதுபோக்கு.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி
'பேனா நண்பர்கள்'
இல.85, ஜெயந்தமல்லிமாரச்சி மாவத்தை,
கொழும்பு - 14.



# சுல்தான் நீ எங்கேயிருக்கிறாய்?

விஞ்ஞானச் சிறுகதை

அந்த நாள் என் சந்தோஷ நாள். எனக்கு வேலை கிடைத்து அப்பொய்ன்ட்மெண்ட் ஓடர் வந்திருந்தது. அதை மாலதியிடம் காண்பிக்கச் சென்றபோது அவள் ஊருக்குக் கிளம்பத் தயாராக, நான்கு ஸாரிகளைப் பெட்டிக்குள் அவசரமாக அடைத்துக் கொண்டிருந்தாள்.

"மாலதி! எனக்கு வேலை கிடைத்துவிட்டது!"

மாலதி மற்றொரு சாரியைக் கசக்கி அடைந்தாள். அவள் முகம் என்னவோ போல் இருந்தது.

"ஏன் மாலதி என்னவோ போல் இருக்கிறாய்?"

மாலதி என்னை வெறித்துப் பார்த்தாள். "நான் இனி இந்த வீட்டில் ஒரு கணமும் தாமதிக்கப் போவதில்லை. சொந்த அப்பாவாக இருந்தால் என்ன, திஸ் இஸ் தி லிமிட்! நான் போகிறேன்!"

"இரு, இரு எங்கே போகிறாய்?"

"எங்கேயாவது!" அவள் கண்களில் நீர் ததும்பியது.

"ஆ, கம் ஆன்! அவசரப்படாதே. என்ன நடந்து விட்டது.. அப்பா ஸ்டார் டஸ்ட்'டை நிறுத்திவிட்டாரா! மாலதி நீ போய்விட்டால் டாக்டர் அவர்களைப் பார்த்துக் கொள்வது யார்? ஒரே ஓர் அப்பா இல்லையா?"

"பார்த்துக் கொள்வதற்கு ஆள் கிடைத்து விட்டான். மாடிக்குப் போய்ப்பார்! உனக்குப் போட்டியாக மற்றொரு சிநேகிதன் வந்திருக்கிறான். சுல்தான்!"







"எனக்குத் திரைக்கதை, வசனம், டைரக்ஷன் புரியவில்லை. சுல்தான்.... இந்தப் பெயரை எங்கோ பார்த்திருக்கிறேனே? சே, அப்படி இருக்காது. எனக்குப் போட்டியாக ஒரு சுல்தானா?

மூன்று தாவலில் மாடி ஏறினேன். கதவு சாத்தி இருந்தது. டாக்டரின் குரல் கேட்டது. "அப் சுல்தான், அப்! அப்படி சுல்தான், அப்படி அப்!"

புரியவில்லை. கதவைத் தட்டினேன். "கம் இன். கதவு தாளிடப்படவில்லை. ஆ..பையா! எங்கே வந்தாய்...?"

அறையில் டாக்டர் மட்டும் தான் இருந்தார்.

"டாக்டர், முப்பத்தைந்து செக்கண்டுகளுக்கு முன் யாருடன் பேசிக்கொண்டிருந்தீர்கள்?"

"ஓ! சுல்தானை நீ இன்னும் சந்திக்கவில்லையல்லவா? அதோ பார்!"

டாக்டர் குறிப்பிட்ட திக்கில் அறையின் வடமேற்கு மூலையின் மேலே, வெண்டிலேட்டர் என்னும் காற்று ஜன்னலில் தொற்றிக்கொண்டிருந்த சுல்தானை முதல் தடவையாய்ப் பார்த்தேன்.

சுல்தான் சுமார் மூன்றடி உயரமுள்ள 'சிம்பன்ஸி' ரகக் குரங்கு. உடல் முழுவதும் கருகரு என்று கேசம். நீள நீள விரல்கள். முகத்தில் முக்கால் பாகத்தை அடைத்துக் கொண்டு பற்கள். மேற்படிப் பற்கள் [illegible] என்னைப் பார்த்துச் சாத்துக் கொண்டிருந்தன. அந்தச் சினிமாஸ்கோப் சிரிப்பைச் சிரிப்பு என்கிற ரகத்தில்தான் [illegible] சேர்க்கவேண்டும். பளீர் என்று வெண் பற்கள். ஒவ்வொன்றும் நாற்பது வோட்ஸ்.

"சுல்தான் கீழே வா!" என்றார் டாக்டர். அது உடனே ரப்பராய்த் தாவி, ஒரு கோட் ஸ்டாண்ட், ஒரு சோபாவின் விளிம்பு இவைகள் மூலமாக எங்கள் அருகில் வந்து நின்றது. பக்கத்தில் பார்க்க இன்னும் மொச மொசவென்று அசிங்கமாக இருந்தது.

"டாக்டர், நான் போய்விட்டு சாவகாசமாக வருகிறேன். உங்களுக்கு எவ்வளவோ வேலை இருக்கும்."

"பயப்படாதே. சுல்தான் ஒன்றும் செய்யமாட்டான். சுல்தான், இது என் பிரெண்ட்! பிரெண்ட்! மாமாவுக்கு ஷேக்ஹாண்ட் கொடு."

சொரசொர என்று ஒரு கரம் என் கரத்தைப் பற்றிக் குலுக்கிவிட்டு ஒரு சலாம் போட்டது. 'ஹலோ' என்றேன். சுல்தான் என் பையிலிருந்து பேனாவை எடுத்துக் கொண்டுவிட்டது.

"டாக்டர், என் பேனாவைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லுங்கள்."

"எப்படி! ஏறக்குறைய மனுஷன் மாதிரியே பண்ணுகிறது பார்!"

"டாக்டர், என்ன இது, குரங்கை வைத்துக்கொண்டு கூத்து! எங்கே பிடித்தீர்கள் இக்குரங்கை? எதற்காக? ஐயோ, என் பேனாவைக் கடிக்கிறதே! டேய் குடுத்துடடா."

"பையா, ஒரே ஒரு வோர்னிங். அதை டேய் கீய் என்று மரியாதை இல்லாமல் பேசாதே. சிலவேளை கோபம் வந்து விடும்!" டாக்டர் குரங்கின் தலையை வருடிக்கொண்டே தொடர்ந்தார். "சேர்க்கஸில் வாங்கினேன். நொடித்துப் போன சேர்க்கஸ் கம்பெனி. இதற்குப் பட்டாணி போடக்கூடக் காசில்லை. பையா, டாக்டர் க்யூலரின் ஆராய்ச்சிகளைப் பற்றிப் படித்திருக்கிறாயா?"

"டாக்டர், நான் கடைசியில் படித்தது 'நீச்சலடி சுந்தரி' என்கிற மர்ம நாவல். குமாரி ஜெயபுஷ்பா எழுதியது."

"டாக்டர் கியூலர், 'தி மெண்டாலிட்டி ஒஃப் எப்ஸ்' என்ற அருமையான புஸ்தகம் எழுதி இருக்கிறார்."

"டாக்டர்! மாலதி ரொம்ப கோபத்தில் இருக்கிறாள். என்ன நடந்தது?"

"நான் அவளிடம் சுல்தானை வாங்கி வந்ததைப் பற்றிச் சொல்லவில்லை. அவள் ட்ரெஸ் பண்ணிக்கொண்டிருந்த போது உள்ளே எட்டிப் பார்த்துவிட்டான். கொஞ்சம் குழப்பம். அதிருக்கட்டும்,

(18 ஆம் பக்கம் பார்க்க)




**அன்பு மாணவர்களே, பெற்றோர்களே, வழிகாட்டும் ஆசிரியர்களே!**

2008ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள (தற்போது தரம்-04 இல் கற்கும்) இளம் சிறார்களை பாடத்திட்ட ஒழுங்கில் இறுதிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில் எமது அயராத முயற்சியாலும் பிரபல இளம் தலைமுறை ஆசிரியர்களான து.திலீப்குமார் - கொழும்பு, சண்.சுதர்சன் -கண்டி, தி.சுரேஸ்குமார்-கம்பளை மற்றும் பிரபல ஆசிரியர்களின் கூட்டுமுயற்சியினாலும் உருவாக்கப்பட்ட படிமுறை மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளிவரும். இதனை மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி செய்தால் பரீட்சையில் வெற்றி அடைவதுடன் மாணவர்களின் முன்னேற்றம் இயல்பாகவே புரியும் என்பது எமது அசையாத நம்பிக்கை. அந்த வகையில் 16ஆவது வினாத்தாள் இன்று வெளிவருகின்றது.

**இப்படிமுறைப் பரீட்சையையொட்டி, எப்பத்திரிகையிலும் இல்லாத ஒரு விசேட சேவையை எமது கல்விச் சுடர் , முதல் தடவையாக ஆரம்பித்து தொடர்ந்துகொண்டிருக்கின்றது......**

அதாவது, இப்பகுதியில் பிரசுரமாகும் படிமுறைப்பரீட்சை வினாத்தாளுக்கு அன்றையதினமோ அல்லது அடுத்துவரும் நாட்களில் மாணவர்கள் சுயமாக விடையளித்து இவ்வினாத்தாளை எமக்கு தொடர்ந்துவரும் வியாழக்கிழமைக்கு முன் அல்லது வியாழக்கிழமை கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தால், அவை எமது கல்விச்சுடர் ஆசிரியர் குழுவினால் திருத்தி, புள்ளியிடப்பட்டு மறுநாளே தங்களுக்குத் தபாலிடப்படும். நீங்கள் இவ்வினாத்தாளை அனுப்பும் போது அதனுடன் தங்கள் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றையும் அனுப்புதல் அவசியமாகும். பாடசாலைகள், கல்வி நிலையங்கள் அதிக வினாத்தாள் களை அனுப்பவேண்டி இருப்பின், அதனை அனுப்பும் போது அதன் நிறைக்கேற்ப பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட பெரிய கடித உறை ஒன்றையும் வைத்து அனுப்புதல் அவசியமாகும்.

வினாத்தாளின் மேலே உள்ள சுயவிவரங்கள் யாவும் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**உங்கள் வினாத்தாள்களை அனுப்பவேண்டிய முறை:-**

கடித உறையின் வலதுபக்க மேல்மூலையில் படிமுறைப் பரீட்சை -16 (Steping Exam - 16) எனக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

| | |
|---|---|
| | யாழ் மாணவர்களுக்கு மட்டும்.. |
| ஆசிரியர், | ஆசிரியர், |
| கல்விச்சுடர், | கல்விச்சுடர், |
| சுடர் ஒளி பணிமனை, | உதயன் பணிமனை, |
| இல. 85, | இல. 361, |
| ஜயந்தமல்லிமராச்சிமாவத்த, | கஸ்தூரியார் வீதி, |
| கொழும்பு-14. | யாழ்ப்பாணம். |

## "எந்தமாதிரியும் இல்லாத முன்மாதிரியான கல்விச்சுடரின் புதிய படைப்பு"

மாணவர்களே! பெற்றோர்களே! வழிகாட்டும் ஆசிரியர்களே!

எம்முடன் இணைந்து இந்த அளப்பெரிய சேவையின் பயனை அனுபவிக்க உங்களுக்குக் கிடைத்துள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.

## பாராட்டப்படும் கல்விச்சுடர் மாணவச் செல்வங்கள்

படிமுறைப் பரீட்சை - 13 இல் சிறந்த புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் மாணவர்களை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


M.சர்ஜூன்
192 (மாவனெல்ல)


N.கிருஷாகரி
192 (கல்முனை-02)


R.டன்ஸ்டன்
172 (கல்முனை-01)


T.பிரதீப்
168 (மட்டக்களப்பு)

| | | | |
|---|---|---|---|
| K.ஜெம்சித் ஹசன் 192 (நிந்தவூர்) | J.K.வினுஷன் 188 (திருமலை) | பாத்திமா ரிஸ்வியா 188 (உடுகொட) | T.நிஃபத் இஜாஸ் 180 (ஓட்டமாவடி) |
| M.சந்தோஷ் 176 (திருமலை) | R.றைஹானா 176 (நிந்தவூர்) | M.அப்றாஸ் 172 (கம்பளை) | U.பாத்திமா ஹின்றத் இபாஷா 168 (நிந்தவூர்) |

## எமது படிமுறைப் பரீட்சை நடைபெறும் கல்விநிலையங்கள் :-

வவுனியா - எக்ஸ்பிரஸ் கல்வி நிலையம் (024 567190)

திருமலை - A.C.A கல்வி நிலையம் (060 2263511)

கண்டி - மதீனா பாடசாலை (071 3456020)

கம்பளை - கதிரொளி கல்வி நிலையம் (077 3407175)

சம்மாந்துறை - ஸ்றார் கல்வி நிலையம் (060 2676675)

நிந்தவூர் - இல்மா ஹொலிடே பாடசாலை (077 9597407)

-கல்விச்சுடர் ஆசிரியர்-

சுடர் சிந்தனை:- "முயற்சி செய்யாது பலனில்லை - எனவே முயற்சித்துக் கொண்டேயிரு.."

## படிமுறைப் பரீட்சை - 16 நேரம்: 1மணி

| | | |
|---|---|---|
| மாணவர் பெயர் | : | ........................................ |
| முகவரி | : | ........................................ |
| கற்கும் பாடசாலை/ கல்வி நிலையம் | : | ........................................ |
| தொலைபேசி இலக்கம் | : | ........................................ |

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.**

**01.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 1-5 வரையான வினாக்களுக்கு விடை தருக.

" பள்ளி செல்லும் பிள்ளையே
பாடம் ஒன்று கற்றுக் கொள்
நல்ல சாலை விதிகளை
நன்கு மனதில் வைத்துக் கொள்

நடக்கும் பாதை வழியிலே
நாளும் நீயும் நடக்கணும்
கடக்கும் இடத்தில் கவனமாய்
கடந்து போகத் தெரியணும்

வீதி விதிகள் பேணி - நிதம்
விரும்பும் இடமே போய்வரலாம்
ஏதினி வீதியில் விபத்துக்கள்
எல்லாம் தவிர்த்தே மகிழ்வோமே"

1) இங்கு பாதசாரி எவ்வாறு பாதையைக் கடக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது?

..............................................................................

2) ஏதினி எனும் சொல்லைப் பிரித்து எழுதுக.

..............................................................................

3) இங்கு நாம் மனதில் வைத்திருக்கவேண்டியவை எவை?

..............................................................................

4) வீதியில் எனும் சொல்லின் பன்மை வடிவத்தை எழுதுக.

..............................................................................

5) இப்பாடல் யாருக்கு அறிவுரை கூறுகின்றது?

..............................................................................

**02.** பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துப் பதங்களைத் தருக.

1) சாலை - ........................................
2) மனம் - ........................................
3) உச்சி - ........................................
4) கவனம் - ........................................
5) உடைமை - ........................................

**03.** பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்துப் பதங்களைத் தருக.

1) தரிசனம் - ........................................
2) அகிம்சை - ........................................
3) மகத்துவம் - ........................................
4) சாந்தம் - ........................................
5) கொள்வனவு - ........................................

**04.** பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்றொடருக்கு மிகப்பொருத்தமான உருவைத் தெரிவுசெய்து கோடிடுக.

1) வேறுபட்ட கட்டடம்.

A 
B 
C 

2) ஒருவித்திலைத் தாவரம் அல்லாதது.

A 
B 
C 

3) கழிவகற்றலுடன் தொடர்பற்ற அங்கம்.

A 
B 
C 

SPECIAL COLLECTION



# உங்கள் குழந்தையைப் புரிந்து கொள்ளுங்கள் அம்மாக்களே!



முதல் முறை பிரசவிக்கும் தாய்மார்கள், தங்கள் குழந்தை எதற்காக அழுகிறது, என்ன மனநிலையில் உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் தவிப்பதைப் பார்க்கிறோம். இதை தாய்மார்களின் குற்றம் என்று சொல்ல முடியாது. அதே நேரம் ஒவ்வொரு பெண்ணும் அம்மாவானவுடன் தன் குழந்தையின் ஒவ்வொரு செய்கைக்கும் என்ன அர்த்தம் என்பதைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

முதல் ஆறு மாதம் வரை குழந்தை எதற்காக அழுகிறது என்பதை பலர் புரிந்து கொள்வதில்லை. இது குறித்து ஒரு குழந்தை நல மருத்துவர் குறிப்பிடுவதாவது:

"குழந்தை பிறந்ததிலிருந்து 6 மாதம் வரை எப்போதும் கதகதப்பாக இருக்க வேண்டும். தாயின் தொடு உணர்ச்சி, ஒரு குழந்தைக்கு அளவிடமுடியாத தன்னம்பிக்கையைத் தருகிறது. இந்த நெருக்கம் சரியாக இருந்தாலே போதும், ஒரு அம்மாவால் குழந்தையை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

குழந்தை பிறந்த 3 அல்லது 4 தினங்களுக்குப் பிறகு, தாய் தன் குழந்தையுடன் உரையாடத் தொடங்க வேண்டும்.

ஆறு மாதங்கள் பூர்த்தியான குழந்தை, ரொம்ப சென்சிட்டிவாக இருக்கும். அம்மாவின் ஸ்பரிசம் மற்றும் குரலை அடையாளம் தெரிந்து கொள்ளும் திறன் அதற்கு வந்து விடுகிறது. குழந்தைய்யை எப்போதும் கைகளில் வைத்துக் கொண்டிருக்காமல் வெளியில் கூட்டிச் சென்று மரம், செடி, கொடிகளைக் காட்டிப் பேச வேண்டும். இந்தக் கட்டத்தில் ஒரு போதும் குழந்தையை கட்டில், நாற்காலி அல்லது தொட்டிலில் தனியாக விட்டுவிடக் கூடாது. ஒரு வயது பூர்த்தி யாகும்போது குழந்தையின் நினைவாற்றல் வளரத் தொடங்கும். வீட்டில் என்னென்ன வேலை நடக்கிறது- தான் சாப்பிடும் உணவென்ன? அதன் சுவை என்ன? போன்றவையெல்லாம் ஒரு வயதுக் குழந்தைக்கு நன்கு புரியத் தொடங்கும். இந்த நேரத்தில், குழந்தைக்கு நடை பயில ஏதுவான 'வோக்கர்' போன்ற கருவிகளை வாங்கிக் கொடுக்கலாம். இந்தக் கருவியில் குழந்தையை உட்கார வைத்த பிறகு தனியாக விட்டுவிடக் கூடாது. உங்கள் பார்வையிலேயே எப்போதும் இருக்க வேண்டும்.

குழந்தையின் அழுகை வெறும் சத்தம் அல்ல, அது ஒரு மொழி. தன் தேவை, வலி, பசி போன்ற அனைத்தையும் அம்மாவுக்கு சொல்ல குழந்தைக்கு தெரிந்த மொழி அழுகைதான்.

ஒரு வயதாகும் போது பெரும்பாலான குழந்தைகளுக்கு காது மற்றும் வயிற்று வலி தொல்லை ஏற்படும். இதை ஒவ்வொரு தாயும் கவனத்தில் வைத்துக் கொண்டு குழந்தையை எச்சரிக்கையாக பராமரிக்க வேண்டும்.

குழந்தைக்கு 2 வயது பூர்த்தியாகும்போது, மிகவும் துருதுருப்புடனும் சுட்டித்தனமாகவும் குழந்தை காணப்படும். கையில் கிடைக்கிற பொருட்களையெல்லாம் போட்டு உடைக்கும். எதற்கெடுத்தாலும் அடம் பிடிக்கும். இந்த நேரத்தில்தான் ஒவ்வொரு அம்மாவும், குழந்தைக்கு அன்பையும், ஒழுக்கத்தையும் முறையாக கற்றுக் கொடுக்க வேண்டும்.

இன்றைய சூழலில் பல தாய்மார்கள் வேலைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. குழந்தை பிறந்த 2ஆவது மாதமே வேலைக்கு ஓடுகிறார்கள். இதனால் குழந்தையுடன் அவர்கள் செலவிடுகிற நேரம் வெகுவாகக் குறைந்து போகிறது.

இப்படிப்பட்ட குழந்தைகள் இரண்டு வயதுக்குப் பிறகு பெற்றோரிடம் முழுமையாக ஒன்றாமல், தனித்தே இயங்கும். முரட்டுத்தனமாகவும், ஒழுங்கீனங்கள் நிறைந்தும் காணப்படும். இந்த நிலையை மாற்ற, குழந்தையின் ஐந்து வயதுவரை கட்டாயம் அதிக நேரம் அவர்களுடன் செலவிட வேண்டும்.

## பெண்

# இனிமையான 'பேர்சனாலிட்டி' இருக்கா?





"Do you have a pleasing personality?" இந்தக் கேள்வி இல்லாத வேலைக்கான விளம்பரங்கள் ரொம்பவும் குறைவு. இனிய தோற்றம், பார்த்த உடனே, 'இவரை நம்பலாம், இவரிடம் எல்லா விஷயங்களையும் தெரிவிக்கலாம்' என்ற நம்பிக்கை தரும் முகம். இந்தத் தகுதியே இன்று முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

பேர்சனாலிட்டி என்பது பழகும் திறன், உணர்வுகளைக் கையாளும் விதம் இவற்றையே பிரதானமாகக் கொண்டது. எப்படி? என்ன செய்தால் இந்தத் தகுதியை நாம் சொந்தமாக்க முடியும்? பார்ப்போமா!

■"என்னுடையது... எனக்கு மட்டும்..." இவற்றைக் கொஞ்சம் தள்ளிவிட்டு அடுத்தவர்களையும் உள்ளார்ந்த அன்போடு கவனியுங்கள். அவர்களின் நல்லது பொல்லாததுகளில் பங்கு கொள்ளுங்கள். அப்போது எல்லோரும் உங்களை விரும்புவார்கள்.

■மற்றவர்கள் உங்களிடம் எப்படிப் பழக வேண்டும் என எதிர்பார்க்கிறீர்களோ அப்படித்தான் மற்றவர்களிடமும் நீங்கள் பழக வேண்டும். உள்ளன்போடு பழகுங்கள். வேஷங்கள் வேண்டாம்.

■மற்றவர்களிடம் உங்களுக்குள்ள அக்கறை மிக முக்கியம். ஒருவரோடு பேசும்போது உங்களைப் பற்றி மட்டுமே அளந்து கொண்டிருக்க வேண்டாம்! மற்றவர்களைப் பற்றியும் அறிய முயற்சி செய்யுங்கள். அதுவும் நல்ல எண்ணத்தோடு இருப்பது அவசியம். மற்றவர்களின் அந்தரங்கங்களைத் தோண்டிப் பார்க்கும் முயற்சியாக ஒருபோதும் மாறக்கூடாது.

■அதுபோலத்தான் உங்களை நம்பி ஒரு விஷயம் சொன்னால் அதனை ஒருபோதும் மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படி நடக்கக்கூடாது.

'எனக்கு எல்லாம் தெரியும். எல்லோரும் என்னிடம் எல்லா விஷயங்களையும் சொல்வார்கள்' என்ற எண்ணத்தை வலுப்படுத்த வேண்டி மற்றவர்களின் அந்தரங்க விஷயங்களை - உங்களை நம்பி ஒப்படைத்த விஷயங்களை - அம்பலப்படுத்த வேண்டுமா? அது நல்லதா?

■'என் தகுதி என்ன பதவி என்ன?' என்ற எண்ணத்தில் எப்போதும் கௌரவ முகமூடி எதற்கு? கொஞ்சம் நகைச்சுவை உணர்வோடு விஷயங்களைக் கையாண்டால் எல்லோருக்கும் உங்களைப் பிடித்துப் போகும்.

உங்களைப் பற்றி விளையாட்டாய் வரும் சொல்லடிகளை மலர்ந்த முகத்தோடு ஏற்றுக் கொள்ளும் பக்குவமும் வேண்டும்.

■' ஐயையோ! இந்த வேலையா? பாவம் நீங்க. ச்ச் தொலைஞ்சீங்க. நானே பாடாய் பட்டிருக்கேன். நீங்க? உங்களாலே முடியாதுங்க' இப்படிப் பேசுவது மற்றவர் உங்களை வெறுக்கக் காரணமாகிவிடும்.

மாறாக, 'இது கொஞ்சம் கஷ்டமாகத் தோன்றினாலும் கொஞ்சம் முயன்றால் எளிதில் யார் வேண்டுமானாலும் செய்து விடலாம்.' இப்படிச் சொல்வது கேட்கவே இனிமை இல்லையா?

■'நான் இல்லாவிட்டால் எதுவுமே நடக்காது.' இந்த கர்வ சிந்தனையே வேண்டாம். யார் இருந்தாலும் இல்லா விட்டாலும் எல்லாமே நடக்கும்.

நல்லவைகளின் தொடக்கம் உங்களிடமிருந்தே ஆரம்பம் ஆகட்டுமே!

# முட்டை இல்லாத வாழைப்பழ பிரெட்



## தேவையான பொருட்கள்:

3 வாழைப்பழங்கள், கால் கப் எண்ணெய், சிறிய கரண்டி வனிலா எசன்ஸ், ஒரு கப் சீனி, 2 கப் கோதுமை மா, ஒரு சிறிய ஸ்பூன் உப்பு, பேக்கிங் பவுடர், அரை கப் பாதாம் (துண்டுகளாக நறுக்கியது)

## செய்முறை:

வாழைப்பழத்தை நன்றாக மசித்துக் கொள்ளவும். இதனுடன் எண்ணெய், வெனிலா எசன்ஸ் சேர்த்து நன்றாக அடித்து கலக்கவும். கோதுமை, உப்பு மற்றும் பேக்கிங் பவுடர் ஆகியவற்றை சலித்து வாழைப்பழக் கலவையுடன் சேர்த்து கலக்கவும். பிரெட்டினை வழுவழுப்பாக்கி இந்த கலவையினை நிரப்பவும். 180 டிகிரி செல்சியஸில் 25- 30 நிமிடம் அல்லது டூத் பிக் ஒட்டாமல், வெளியே வரும் வரை பேக் செய்யவும்.




அஜித் – நயன்தாரா

ஆயுதங்கள், போதை மருந்து கட
மன்னனான பில்லாவை(அஜி
தீவிரமாக தேடுகிறது. ஒவ்
பொலிஸ் அதிகாரியான பிரபு
வளைக்கும்போதும் தப்பிச் செல்
ஆயுதம் விற்க தனியாக வரும்
தாக்குதல் நடக்கிறது. இதில்
அஜித். அதை வெளியில் சொல்
மறைக்கிறார் பிரபு. பிக்பொக்
திருடனான மற்றொரு அஜித்
நடிக்க வைத்து கடத்தல் கூட்ட
திட்டமிடுகிறார் பிரபு.
இதற்கிடையில் பிரபு சுட்டுக்
கொல்லப்படுகிறார். அஜித்தை
கைது செய்கிறது. தான் பில்லா இ
என்பதை அஜித் நிரூபிப்பதும், க

# பில்லாவாகிற வில்லன்

கும்பலை அவர் ஒழிப்பதும்தான் க்ளைமாக்ஸ். ரஜனியின் 'பில்லா' தான் மீண்டும் அஜித் நடிப்பில் உருவ இருக்கிறது. பழைய காட்சிகளை அப்படியே கொப்பி அடிக்காமல் தற்போதைய காலத்துக்கேற்ப காட்சிகளையும், லொக்கேஷன்களையும் மாற்றி போட்டு பளபளப்பாக்கி இருக்கிறார் இயக்குநர் விஷ்ணுவர்தன். தொடக்கம் முதல் இறுதிவரை ஹொலிவுட் படத்தை பார்த்துக் கொண்டிருக்கும் உணர்வு. அஜித்தின் நடை, உடை, பேச்சு என எல்லாவற்றிலும் ஸ்டைல். முதுகுக்கு பின்னால் மறைத்து வைத்திருக்கும் துப்பாக்கியை எடுத்து எதிரிகளை வேட்டையாடி புலியாட்டம் ஆடுகிறார். தனது கூட்டத்தைவிட்டு தப்பிக்க முயல்பவரையும் அவரது காதலியையும் கொடூரமாக கொல்லும் பில்லா, கேரக்டரின் வலுவை காட்டுகிறார்.

'ரோஸாவை விட்டுடு இல்லாட்டி சுட்டுடுவேன்' என்று துப்பாக்கி முனையில் பிரபு மிரட்டும்போது, 'துப்பாக்கிய கையில வச்சிட்டு சும்மா மிரட்டுனா பில்லாவுக்கு பிடிக்காது' என பஞ்ச் கொடுப்பது 'தல' ஸ்டைல்.

அடுத்த நொடியில் காரில் எஸ்கேப் ஆவதும், அவரைப் பிடிக்க பொலிஸ் நடத்தும் கார் துரத்தலும் ஸ்பீடா மீட்டரை வெடிக்கச் செய்யும் வேகம். பிக்பொக்கட் திருடனாக வரும் அஜித் 'அந்த ஆறுமுகனுக்கு ஆறு தலை எனக்கு ஒரு தலை' என்ற வசனம்பேசி ரசிகர்களை குஷிப்படுத்துகிறார். எந்த இடத்திலும் ரஜினியின் ஸ்டைலை அஜித் கொப்பி அடிக்காதது புது பில்லாவுக்கு புத்துணர்ச்சி.

நயன்தாரா, நமீதா இருவருக்குமே கவர்ச்சியில் கடும் போட்டி. நீச்சல் உடையில் வந்து ரசிகர்களின் இதயத்துடிப்பை அதிகரிக்கிறார் நயன். ஆனால் நடிக்கத்தான் வாய்ப்பில்லை. பிரபுவின் நடிப்பு கேரக்டருடன் ஒட்டவில்லை. பட்த்தின் பெரிய பலம் நீரவ்ஷாவின் கமரா. ஹொலிவுட் பட தரத்தை ஒவ்வொரு காட்சியிலும் கொடுத்திருக்கிறார். குறிப்பாக அந்த பாலத்தில் நடக்கும் காட்சி. அஜித், நயன், நமீதாவை இன்னும் அழகாக காட்டும் அனுவர்தனின் கொஸ்டியூம் டிசைன் கச்சிதம். யுவன் சங்கர்ராஜாவின் இசையில் ரிப்பிட் பாடல்கள் 'மை நேம் இஸ் பில்லா', 'வெத்தலயப் போட்டேண்டி' உட்பட எல்லாப் பாடல்களுமே புதிய வார்ப்புக்கள். எல்லாம் இருந்தும் படம் முழுவதும் ஒரு நிதானம் தோய்ந்திருப்பது மைனஸ். ஆனால் அது ஒரு குறையாக தெரியாதபடி தொழில் நுட்பத்தில் மிரட்டிவிடுகிறார் விஷ்ணுவர்தன்.



கமல்ஹாசன்



ஒஸ்கார் பிலிம்ஸ் பிரைவேட் லிமிட்டெட் வி.ரவிச்சந்திரன் தயாரிப்பில் கே.எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் கமல் பத்து வேடங்களில் நடித்துள்ள 'தசாவதாரம்' படத்தின் மொத்த படப்பிடிப்பும் முடிவடைந்து தற்போது கம்பியூட்டர் கிராபிக்ஸ் பணிகள் வெகு மும்முரமாக நடந்து வருகின்றன. பிரசாத் ஸ்ரூடியோவில் உள்ள ஈ.எவ்.எக்ஸ், தி.நகரில் உள்ள எக்சல் ஆகிய இருபெரும் கம்பியூட்டர், கிராபிக்ஸ் நிறுவனங்களில் இரவு பகலாக மொத்தம் முன்னூறு ஊழியர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் அதில் ஈடுபட்டு வருகின்றனர்.

இங்கு பணிபுரிய வரும் தொழில் நுட்பக் கலைஞர்கள், ஊழியர்கள் கடும் சோதனைக்குப் பிறகே அனுமதிக்கப் படுகின்றனர். இதற்கு இரண்டு அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

அதே போல உள்ளே செல்போன், லப்டொப், பேக் என எந்தப் பொருளும் அனுமதிக்கப்படுவதில்லை. அப்படி கொண்டு போகும் பொருட்களை வெளியே உள்ள தனி லொக்கரில் பாதுகாப்புடன் வைக்க வழிவகை செய்துள்ளனர்.

# கமல் படத்துக்கு கடுமையான பாதுகாப்பு!

JAFFNA
COLLECTION

நந்து கடத்தல்
அஜீத் பொலிஸ்
ஒவ்வொரு முறையும்
சுற்றி
செல்கிறார்.
போது அதிரடி
க்கிறார்
சொல்லாமல்
பாக்கெட்
வில்லாவாக
த்தை பிடிக்க

த்தை பொலிஸ்
இல்லை
தும், கடத்தல்

ல் உருவாகி
ளையும்,



முகப்பில்- பிரியாமணி

# இந்திர லோகத்தில் நா அழகப்பன்



❋சீமானின் உதவியாளர் சூருளிபாண்டி இயக்கும் படத்தில் 'பருத்திவீரன்' சாவணன் ஹீரோவாக நடிக்கிறார். பக்கா வில்லேஜ் சப்ஜெக்டான இதில் சரவணனுக்கு சண்டியர் வேடம்.

❋'சூரி' படத்தை இயக்கிய செல்வன் 'எஸ் ஸ்ரூடியோஸ்' என்ற பெயரில் ரெக்கோடிங் ஸ்ரூடியோ ஆரம்பித்திருக்கிறார். இவர் தற்போது 'நேபாளி' படத்தில் அசோசியேட் இயக்குநராகப் பணியாற்றுகிறார்.

❋பாடலாசிரியர்கள் பா.விஜய், சிநேகன், நா.முத்துக்குமாரைத் தொடர்ந்து யுகபாரதியும் புதிதாக கார் வாங்கியிருக்கிறார்.

❋தன்னுடைய தம்பி கிருஷ்ணாவை வைத்து ஒரு படம் . இயக்குகிறார் விஷ்ணுவர்தன். இந்தப் படத்தை விஷ்ணுவர்தனின் தந்தை 'பட்டியல்' சேகர் தயாரிக்கிறார்.

❋செல்வா இயக்கும் 'தோட்டா ' படத்தில் 'குமரிப் பெண்ணின் உள்ளத்திலே..' பாடலை ரீமிக்ஸ் செய்திருக்கிறார் ஸ்ரீகாந்த் தேவா.

❋தமிழில் 'லீலை', 'எவனோ ஒருவன்', 'வாழ்த்துக்கள்' படங்களை கைவசம் வைத்திருக்கும் மாதவன் இந்தியில் 'சன் கிளாஸ்', 'மேரிஜான்' படங்களை கைவசம் வைத் திருக்கிறார்.




# கரகாட்டக்காரி

'கரகாட்டகாரனி'ல் கனகாவும், 'நாட்டுப்புறப் பாட்டு'ல் குஷ்புவும் கரகாட்டம் ஆடினார்கள். அந்த வரிசையில் கரகாட்டம் ஆடுகிறார் நமீதா. சக்தி சிதம்பரம் இயக்கும் படம் ' சண்ட'. இதில் ராகிணி, நதியா ஆகியோரும் நடிக்கின்றனர். கவர்ச்சிக்காக நமீதாவை தேர்வுசெய்து, கரகாட்டக்காரி கேரக்டர் கொடுக்கப்பட்டுள்ளது. பொள்ளாச்சியில் நடக்கும் ஷூட்டிங்கில் சுந்தர்.சி, நமீதா நடிக்கும் காட்சிகள் படமாகின்றன. தினா இசையில் கரகாட்டம் பாட்டு இடம்பெறுமா என்பது முடிவாகவில்லை.

# 2008 இன் பொதுப்பலன்கள்

## எண்கள் எதையும் செய்யும்!
## 2008ஜனவரி 2008 முதல் டிசம்பர் முடிய உள்ள எண்கணித ஆண்டு பலன்

கடந்த வாரத் தொடர்ச்சி...

### பேசியே வசியம் செய்வோர்
### 5ஆம் எண்

வசீகர பேச்சும், உயர்வான செயல்களில் நாட்டமும், நடை, உடை, பாவனைகளில் மிடுக்கும், புதிய செய்திகளை அறிந்து கொள்வதில் நாட்டமும், எதையும் கற்று தேர்வதில் தனி கவனமும், பிறருக்கு செய்திகளை தருவதற்காகவே பல நிகழ்வுகளை கவனத் துடன் கற்றுக் கொள்வதும், யாரையும் எதிர்பார்த்து வாழாத சுய முயற்சியும், சுறுசுறுப்பும் சுகாதாரத்தில் நாட்டமும், வயல்வெளி, மலை, அயல் தேசங்கள் இவற்றில் மனதை பறிகொடுத்தலும், மலைப்பாக இருக்கும் மகத்தான காரியங்களை மிக எளிதாக முடிக்கும் திறனும், முழுமையான மூளைத்திறனும் கொண்டவர்களாக இருப்பீர்கள். நிர்வாகத் திறமையால் பல தொழில் அதிபர்கள் அதிக ஊதியத்துடன் உங்களை மடக்கிப்போட்டு வெற்றி பெற்றுவிடுவர். எதையும் துணிவுடன் எதிர்கொள்வதால் எதிரிகள் அடங்கிப் போய்விடுவர். உங்களிடம் உள்ள சரியற்ற செயலை, நீங்கள் சொல்வது பிறருக்கு பிடிக்குதோ இல்லையோ கேட்டுத்தான் ஆக வேண்டும் என திடமாக நினைப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். 5, 14, 23 திகதிகளில் பிறந்திருந்தாலும் E, H, N, X ஐ உங்கள் பெயரில் முதல் எழுத்தாக பெற்றவர்களுக்கும் ஜனவரி 2008 முதல் டிசம்பர் 2008 வரை ஓராண்டுக்குரிய நிகழ்வுகளைப் பார்ப்போம்.

தைரியமான உங்கள் செயற்பாடுகளால் எந்தத் தடையையும் தகர்த்து முன்னேற்றத்துக்கான வழிகளை பெறலாம். மேலும் வீண் விவாதங்கள் யாரிடமும் வேண்டாம், சகோதரர்களால் பல இன்னல்களை அனுபவிக்க நேரிடலாம். பொருளாதார வரவுகள் போதுமானதாக இருந்தாலும் திடீர் தேவைகளுக்காக கடன்படவும் நேரிடலாம். வீட்டில் மங்கள நிகழ்வுகள் நடந்தேறும் வாய்ப்புக்கள் உண்டு. உடன்பிறப்புக்களால் தடைகளும் ஏற்படலாம். உடல்நிலையில் கவனத்துடன் செயல்படவேண்டும். குறிப்பாக கழுத்துப் பகுதி, கண், பல் வியாதிகள் தோன்றலாம். தொழில் அதிபர்கள் தங்கள் துறையை மாற்றி போதுமான வருவாய் இல்லாமல் தவிக்க நேரிடும். வியாபாரிகள் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கருதினால், வாங்கிய பொருட்களை விற்க வழியில்லாமல் போகலாம். பணியாளர்கள் மிகவும் உஷாருடன் தங்கள் வேலைகளை கவனிக்க வேண்டும். பதவி உயர்வு குறித்து பேசி எக்குத்தப் பாக அதிகாரிகளிடம் மாட்டிக்கொள்ள நேரிடலாம் கவனம். அரசியல்வாதிகள் கூடுதல் தைரியத்துடன் செயற்பட்டு புதிய திட்டங்களுக்கு வழிவகுப்பர். பயிர்வளமும் செழித்தோங்கும். பெண்கள் வீணாக கணவருடன் பகைத்துக் கொள்வர். புகுந்தவீட்டு உறவுகள் சச்சரவுகள் உண்டு. மாணவர்கள் திட்டம்போட்டு செயல்பட்டு படிக்க வேண்டும், சக மாணவர்களால் பிரச்சினைகள் ஏற்படலாம்.

### அலங்கார பிரியர்
### 6ஆம் எண்

ஆர்ப்பரிக்கும் அழகும், ஆனந்தமயமான முகமும் வசீகரமான நடையும், ஆயத்த ஆடைகள், அலங்கார பொருட்கள், அழகான பெண்கள், இயற்கை சூழ்ந்த இடங்கள் இவற்றில் நாட்டமும், கலைகள், கவிதை, கட்டுரை, திரைப்படம் போன்றவைகளில் ஈர்ப்பும், இயல்பான மென்மையும், ஆன்மீகமும், அடுத்தவரை மதிக்கும் நற்பண்பும் (C,G, L, S இல் பெயர் அமைந்தோர் இங்கு விதிவிலக்கு) மழலைத்தன்மையும், மனித நேயமும், தாயார் பேரில் தனிப்பிரியமும், காதல் வயப்படுவதும், காமத்தில் கூடுதல் நாட்டமும், மக்கள் நலனில் அக்கறையும், அலங்காரப் பொருட்கள், வாசனைத் திரவியம், பச்சையான வயல்வெளிகளில் பிரியமும், பிரதேசங்களில் நட்புறவும், பொருளாதார ஏற்றமும், புதுமைகளில் ஈர்ப்பும், தன் செயல்களை பெரிதுபடுத்துபவருக்கு உதவிகள் புரிவதும், அடங்கிப் போவதை எதிர்ப்பதும், எதைச் செய்தாலும் அதில் தன் நலன் இருப்பதும், படாடோபமான செயல்களுக்கு முன்னுரிமை அளிப்பதுமான இயல்புகொண்ட 6, 15, 24 திகதிகளில் பிறந்தவர்களுக்கும் U, V, W வை தன் பெயரின் முதல் எழுத்தாக பெற்றவர்களுக்கும் ஜனவரி 2008 முதல் டிசம்பர் 2008 வரை ஓராண்டுக்குரிய நிகழ்வுகளைப் பார்ப்போம்.

இதுநாள்வரை சென்ற ஆண்டில் திட்டம் மட்டுமே போட முடிந்தது. திறமையாக செயல்பட்டும் சிரமங்கள்தான் மிச்சம். ஆனால் இப்பொழுதோ சிறப்புடன் காரியங்கள் அனைத்திலும் வெற்றிதான். சிறிய முயற்சிகள் கூட பெரிய வெற்றிகளாக மாறிவிடும். பொருள் வரவுகள் ஒன்றன் பின் ஒன்றாக வர ஏற்பாடு நடக்கும். கொடுத்த இடத்தில் வராது என நினைத்த தொகைகள் வந்துவிடும். உங்கள் உடல் ரீதியாக சிறிய செலவுகள் ஏற்படுவதுடன் தாயாருக்கும் உடல்நலம் கவனிக்கவேண்டி வரலாம். தொழில் அதிபர்கள் புதிய இடங்கள், மெஷின்கள், வாகனம் போன்றவற்றை வாங்கலாம். கடன் தொல்லைகளும் ஏற்படலாம். வியாபாரிகள் ஏற்றம் பெற வாய்ப்புக்கள் பிரகாசமாக உள்ளது. புதிய வீடு, வாகனம் வாங்கலாம். பணியாற்றுபவர்கள் அதிகாரிகளிடம் அன்புடன் நடந்து காரியங்களை வெற்றியாக்கிக் கொள்ளலாம். சட்டம் பேசினால் போட்டுவைத்த திட்டங்கள் வீணாகிவிடும். அரசியல்வாதிகள் தலைமையின் போக்குக்கு வளைந்து செல்வதுதான் நல்லது. கேட்டால் மட்டுமே ஆலோசனைகளை சொல்ல வேண்டும். விவசாயிகள் உற்பத்தியாகும் தானியங்களை நல்ல விலைக்கு விற்பனை செய்தாலும், கூடுதல் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாமல் திண்டாடுவர். பெண்கள் தங்கள் வீட்டில் சுபகாரியங்களை நடத்தலாம். கணவருடன் இணக்கமான போக்கு இருக்காது. உடல்நலத்தில் அதிக அக்கறை வேண்டும். மாணவர்கள் விளையாட்டுத் துறையை நம்பி, படிப்பில் கவனம் செலுத்த இயலாமல் போகலாம், உஷார்.

### அமைதி காப்பவர்
### 7ஆம் எண்

நிதானத்துடனும், நியாயத்துடனும், நிறைவுகளை மட்டும் எடுத்துக் கொள்ளும் குணமும், அமைதியையும், சாத்வீகத்தையும் விரும்புவதும், ஆழ்மனதுடன் சிந்தனை செய்யும் திறனும், இறைவனின் காருண்யமும், காதல் மயமும், அதில் போராட்டமும், பஞ்ச பூதங்கள், ஆவி, கூடுதல் சக்தி, மாயம், மந்திரம் போன்றவற்றில் அதிக நாட்டமும், பின்பு நடப்பவற்றை முன்னே அறிந்திருக்கும் அபூர்வ சக்தியும், எவ்வளவு பணம் இருந்தாலும், எளிமைத் தோற்றமும், எதையும் செய்ய இயலாது எனக் கூறாமல் தன் வலிமையை பயன்படுத்தி இலகுவாக அதைப் முடிப்பதும், அடுத்தவர் சொல்வதை அனுசரித்து போகும் குணமும், மனதுக்குள் இவர்களாக ஏதாவது ஒரு எண்ணத்தை வைத்துக் கொண்டு ஏங்குவதும், கலைகளில் அதிக அறிவும், அழகை ரசிப்பதும், எந்தக் காரியங்களையும் மிக நேர்த்தியாக செய்து புகழ் பெறுவதும், வேண்டாத நிகழ்வுகளை விரும்பி அசை போடுவதும் இவர்களின் குணாதிசயம். 7, 16, 25 திகதிகளில் பிறந்து இருந்தாலும் O, Z ல் தன்பெயரை முன் எழுத்தாக பெற்றவர்களுக்கும் ஜனவரி 2008 முதல் டிசம்பர் 2008 வரை ஓராண்டுக்குரிய நிகழ்வுகளைப் பார்ப்போம்.

மனதில் அபரிமித தைரியம் ஏற்படும். எதையும் சாதிக்கும் வல்லமை இதனால் உண்டு. எதிரிகள் அரண்டு ஓடிவிடுவர். பொருள் வரவுகள் ஏற்ற இறக்கங்களாக தென்படுவதால் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்வது நல்லது. வீட்டில் சுப நிகழ்வுகளில் இதுநாள்வரை இருந்த தடைகள் விலகி நல்வாய்ப்புக்களை நலமோடு தந்து மகிழ்விக்கும். மனதில் தைரியம் கூடுவதால் வியாதிகள் ஓடி ஒழிந்துவிடும். எந்த வேலைகளையும் ஆர்வத்துடன் செய்து வெற்றிகள் காண்பீர்கள். தொழிலதிபர்கள் எதை எடுத்துக் கொண்டாலும் முனைப்புடன் ஒரு முடிவுடன் தைரியமாக செய்து வெற்றியை எளிதில் தக்க வைத்துக் கொள்ளும் காலம் இது. வியாபாரிகள் விற்பனை பெருக்கம், விரிவாக்கம், புதிய வாடிக்கையாளர் வருகை என பரபரப்பாக இயங்குவர். பணி புரிவோர் பதவி உயர்வு, வழக்கில் வெற்றி, பணியிடமாற்றம், விரும்பிய வீட்டு, வாகன கடன்கள், உல்லாச பயணம் இவைகளில் மகிழ்வோடு செயல்படுவர். அரசியல்வாதிகள் அளவற்ற வருமானம், மக்கள் செல்வாக்கு, புது பதவியில் பெருமை போன்றவைகள் கிடைத்து மக்கள் செல்வங்களைப் பெறுவர். விவசாயிகள் பயிர் விளைச்சல், கால்நடைகளால் அதிக லாபம், புதிய நிலம், வாகனம் வாங்குதல் மனநிறைவை தரும். பெண்கள் தங்கள் தேவைக்கு ஏற்ப ஆபரணம், வீடு, கார் இவைகளை வாங்குவதுடன் புகுந்த வீட்டில் புகழ்பெறும் காரியங்களை செய்வர். மாணவர்கள் விளையாட்டின் மூலம் தம் பெயரை தரணியெங்கும் பரப்புவதுடன் தடைப்பட்ட பாடங்களையும் வெற்றியாக்கிவிடுவர்.

### பிறர் நலம் பேணுபவர்
### 8ஆம் எண்

சாதனைகளை சரித்திரமாக்கி, அனைவரையும் சமத்துவமாக நினைக்கும் குணமும், ஏழ்மையில் இருப்போரிடம் யதார்த்தமாக பழகி அவர்களின் துயர் போக்குதலும், நற்காரியங்களில் நாட்டமும், அடுத்தவர் செய்வதைவிட வித்தியாசமாக ஏதாவது செய்துவிட வேண்டும் என்பதில் மும்முரமும், நீதி நேர்மையில் ஆர்வமும், எதைத் திட்டமிட்டு செய்தாலும் அதில் தடைகளை ஏற்படுத்திக் கொள்வதும் இடம்பெறும். அடுத்தவரிடம் மனம்விட்டு பேசாததால் உங்கள் துயரங்கள் வெளியில் தெரிவதில்லை. திருமணத்தில் பல பின்னடைவுகளை சந்திப்பதும், சில வேளைகளில் காதல் தோல்வியால் கலங்கிப் போவதும், பெரியோர்களிடம் நல்ல மரியாதையும், மிக அதிகமாக உழைத்தும் அதற்கேற்ற ஊதியம் கிடைத்திடாமல் மன உழைச்சல் அடைவதும் இடம்பெறும். மொத்தத்தில் பிறருக்காக உழைக்கும் நீங்கள் 8, 17, 26 திகதிகளில் பிறந்திருந்தாலும், F, Pஐ உங்கள் பெயரின் முன் எழுத்தாக பெற்றிருந்தாலும் 2008 ஜனவரி முதல் 2008 டிசம்பர் வரை ஓராண்டுக்குரிய நிகழ்வுகளைப் பார்ப்போம்.

மகத்துவமான காரியங்களை பிறருக்காக செய்துவிட்டு கடைசி நேரத்தில் கெட்ட பெயர் வாங்க நேரிடலாம் உஷார். தைரியத்துடன் செயல்படுவீர்கள். பொருளாதாரம் உயர்வான முயற்சிகள் உள்ளத்தை மகிழ்விக்கும். வீட்டில் சுபநிகழ்ச்சிகளுக்கு பேச்சுக்கள் நடைபெறும் போதெல்லாம் உடன் பிறந்தவர்களால் ஏதேனும் தடைகள் ஏற்படலாம். மனோபலம் கூடுவதால் உடல்நிலை மாற்றங்கள் ஏற்பட்டாலும் சிரமங்கள் தெரியாது. தொழில் புரிவோர் துடிப்புடன் செயல்படுவர். தொழிலாளர் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. வியாபாரிகள் மந்தமான நிலையை அடையலாம். வாடிக்கையாளர்களுடன் வம்புகள் வேண்டாம். பணியாற்றுவோர் சக ஊழியர்களால் பிரச்சினைக்கு ஆளாகலாம், அதிகாரிகளிடம் அடக்கத்துடன் நடந்து கொள்ளுங்கள். அரசியல்வாதிகள் தலைமையை விமர்சித்து வகையாக மாட்டிக் கொள்ளும் நேரமாக தெரிகிறது உஷார். விவசாயிகள் புதிய கருவிகள், நிலம் வாங்குதலுடன்,வழக்குகள் தேக்கம், வீண் செலவுகள் என தெரிகிறது கவனம். பெண்கள் பெருமை சேர்க்கும் விசயங்களில் ஈடுபடுவதுடன் கணவரின் உடலையும் பேணுதல் வேண்டும். மாணவர்கள் மனதில் எளிதில் பதியாது கல்வி, அதிகாலை நேரங்களில் படித்தல் நல்லது.

### அதிகாரத்தில் நம்பிக்கை கொண்டவர்
### 9ஆம் எண்

தன்னம்பிக்கையும், தணியாத நாட்டுப்பற்றும் சோம்பேறிகளைக் கண்டால் சுட்டெரிக்கும் சினமும், சிறந்த கொள்கைகளும், சுறுசுறுப்பும், சுகங்களில் நாட்டமும், காமத்தில் அதிக ஈடுபாடும், காதல் விவகாரங்களில் கூடுதல் நாட்டமும், செயல்பாடுகளில் குழந்தை போன்றும், பார்வையில் பயங்காட்டுவதும், அரசியல் சாணக்கியமும், அதிகாரத் தோரணையும், எதிலும் முதன்மைப் பதவியை அடைய முயல்வதும், உடல் உறுதியும், உள்ளத் தெளிவும், போர்க்குணமும், எவரிடமும் வம்பை, வழக்கை வலிய இழுப்பதும், தன் ஊரைவிட தங்கிய ஊரில் அம்பலம் செய்வதும், நீதிமன்றத் தீர்ப்புக்களால் திடீர் பிரபலமாவதும், அடுத்தவருக்கு உதவிடுவதுபோல் தன் வேலையை சிறப்பாக முடித்து விடுவதும், மனதில் அதிக தைரியமும், பிறர்பேசுவதை இவர்கள் கேட்பதை விட, தான் பேசுவதை அடுத்தவர்கள் கேட்டுக் கொள்ள பணிப்பதும், மிக நுண்ணிய அறிவாற்றல் இருந்தாலும் அடக்குமுறையில் அதிக நம்பிக்கையும், கொண்டிருப்பர். ராணுவம், காவல்துறை போன்றவற்றில் பணிபுரிவோர் எளிதில் உயர் பதவிகளை பிடித்து புகழ் பெறுவர். இவ்வாறான நீங்கள் 9, 18, 27 திகதிகளில் பிறந்து இருந்தாலும் இதே எண்களை பெயர் எண்ணாக கொண்டிருந்தாலும் ஜனவரி 2008 முதல் டிசம்பர் 2008 வரை நிகழ்வுகளைப் பார்ப்போம்.


மனதில் தைரியமும், மகிழ்வான நிகழ்வுகளும், மனதை மயக்கும் காரியங்களும், மக்கள் செல்வாக்கும் ஒரு தனி இடத்தை உங்களுக்கு தந்துவிடும். எதைதொட்டாலும் அதில் வருமான நோக்கமே உள்ளது. அதற்கேற்ப பொருளாதார உயர்வுகளும் உண்டு. வீட்டில் மங்கள நிகழ்ச்சிகள் நடந்தேறும். தடையாய் இருந்த ஓதோ ஒரு விசயம் தனியாய் விலகி ஓடிவிடும். உடல்நிலை மகத்துவமாகவே உள்ளது. பெரிய வியாதிகள் என்று தோன்றியவை எல்லாம் பெயர்ந்து ஓடிவிடும். தொழில் அதிபர்கள் விரும்பிய கடன் பெறலாம். புதிய இடம் வாங்குதல், வாகனம், வகை வகையாய் வீட்டு உபயோகப் பொருட்கள் பெற்று மகிழ்வர். வியாபாரிகள் விற்பனை பெருக்கம் காண்பர். புதுமைப்பொருட்கள் விற்று லாபம் குவிப்பர். பணியிலிருப்போர் வழக்கில் வெற்றியும், வாழ்வில் தனி அந்தஸ்தும்,பதவி உயர்வும், பணபலன்களும், குடும்ப மகிழ்வும் பெறுவர். அரசியலில் புதிய மாற்றங்கள் நிகழலாம். அதுவும் பெரிய நன்மைகளை பெற்றுத் தரும். விவசாயிகள் பயிர் செழித்து வளரும். புதிய கிணறு வெட்டுதல், கால்நடை வாங்குதல், வீடு, டிராக்டர் வாங்குதல் மனநிறைவை தரும். பெண்கள் புத்தாடைகள், நகைகள், தோட்டம், மற்றவர்களுக்கு பண உதவிகள் செய்தல் இவைகளால் மகிழ்வுடன் காணப்படுவர். மாணவர்கள் மட்டற்ற காரியங்களை இலகுவாக செய்து பெற்றோர் ஆசிரியர்களுக்கு புகழ் சேர்ப்பர்.

டாக்டர் ஜெ.என்.எஸ். செல்வன்,
எண்கணித நிபுணர்,
14, தேசிக வினாயகம் தெரு, சுப்பிரமணிய புரம்
முதல் வீதி வடக்கு விரிவு,
சங்கரமடம் பின்புறம், காரைக்குடி- 630 002.
செல்: 98424 90001, 94422 05564

JAFFNA
SPECIAL COLLECTION


05. கீழே தரப்பட்ட உருக்களை நன்கு அவதானித்து அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

1)




(01) (02) (03)

2)



(01) (02) (03)

3)



(01) (02) (03)

06. கீழே தரப்பட்டுள்ள விடயங்களைக் கொண்டு சரியாக விடையை இனங்கண்டு எழுதுக .

1) செய்திகளை அறிய உதவும் சாதனங்களில் ஒன்று ....................
   * கண்ணால் பார்க்கக் கூடியதா? - ஆம்
   * காதால் கேட்கக் கூடியதா? - இல்லை
   * எங்கும் கொண்டு செல்லக் கூடியதா? - ஆம்
   * வாசித்து அறியக் கூடியதா? - ஆம்
2) இங்கு கூறப்பட்டுள்ள உயிரினம் ....................
   * உயிருள்ளதா? - ஆம்
   * நீரில் வாழுமா? - இல்லை
   * நாலு கால் உள்ளதா? - ஆம்
   * குட்டி போடுமா? - ஆம்
   * வீட்டில் வளப்பவர்களா? - ஆம்
   * நன்றியுள்ளதா? - ஆம்

07. கீழே தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

| மேடான, கிராமமாகும், பள்ளமான, நகரமாகும், கடலில் |
|---|

1) நோயற்ற வாழ்விற்கு ஏற்ற இடம் ..........................
2) .......................... இடத்தில் வீடுகளைக் கட்டுதல் வேண்டும்.
3) தொடர் மாடிகள் உள்ள இடம் ..........................
4) .......................... இடத்தில் வீடுகளைக் கட்டக்கூடாது.
5) முத்துக்கள் காணப்படுவது .......................... ஆகும்.

08. பின்வருவனவற்றிற்கு மிகச்சரியான விடை தருக.

1) தனது வீட்டில் இருந்து புறப்பட்டு 5km தூரம் சென்று விமல் வீட்டை அடைந்த கமல்,அங்கிருந்து புறப்பட்டு 7km தூரம்வரை சென்று பாடசாலையை அடைந்து, பின்னர் வீட்டை அடைந்தான் எனின், அவன் பயணித்த மொத்தத்தூரத்தை மீற்றரில் காண்க. ....................
2) சசி நகரத்திலிருந்து (வடக்கு) வலதுகைப்பக்கமாகப் புறப்பட்டு முதலில் இடதுகைப்பக்கமாகவும் பின்னர் இருதடவைகள் வலதுகைப் பக்கமாகவும், மீண்டும் இடதுகைப்பக்கமாகவும் திரும்பிச்சென்று தனது கிராமத்தை அடைந்தாள் எனின், அவள் தற்போது நிற்கும் திசை யாது? ....................
3) மாம்பழ வியாபாரி ஒருவர் 4ரூபா வீதம் மாம்பழங்களைக் கொள்வனவு செய்து, 12ரூபா வீதம் விற்பனை செய்கின்றார். நாள் ஒன்றுக்கு 246 மாம்பழங்களை விற்பாராயின், அவருக்குக் கிடைக்கும் இலாபம் எவ்வளவு? ....................
4) 250g சீனி 21ரூபா வீதமும், 50g பருப்பு 8ரூபா வீதமும் விற்பனை செய்யப்படும் கடை ஒன்றில் ஜீவன் 2.5kg சீனியையும்,1.75kg பருப்பையும் பெற்றுக்கொண்டு ரூபா 500 ஐக் கொடுத்தானெனின், அவனுக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ....................
5) 8m நீளமும் 5m அகலமும் கொண்ட காணித்துண்டு ஒன்றைச் சுற்றி 7 நிரைகளில் முட்கம்பிவேலி அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேவையான முட்கம்பியின் நீளத்தைக் காண்க. ....................

10. தரப்பட்டுள்ள அட்டவணையில் கல்விச்சுற்றுலா ஒன்றில் கலந்துகொண்ட தரம்-05 மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் தரப்பட்டுள்ளது.

| வகுப்பு | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| 5 | 23 | 19 |
| 5 | 20 | 20 |
| 5 | 21 | 20 |
| 5 | 22 | 19 |

1) சுற்றுலா சென்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   ................................................
2) சுற்றுலா சென்ற மாணவர்களில் ஆண்களின் எண்ணிக்கைக்கும் பெண்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?
   ................................................
3) பேருந்து ஒன்றில் 60 மாணவர்கள் செல்ல முடியும் எனின், சுற்றுலா செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை யாது?
   ................................................

11. கீழே தரப்பட்டுள்ள உருக்களை நன்கு அவதானித்து அவற்றின் பெயர்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தருக.

1) 

த: ..............................
ஆ: ..............................

2) 

த: ..............................
ஆ: ..............................

3) 

த்: ..............................
ஆ: ..............................

4) 

த: ..............................
ஆ: ..............................

12. பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
1) நிர்வாகி - ..................................
2) நகரம் - ..................................

13. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
1) Market - ..................................
2) Language - ..................................

14. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
1) சமகிய - ..................................
2) ஆரக்ஸாவ - ..................................

15. மூன்று சிறுவர்கள் குளக்கரையிலுள்ள மரநிழலில் பந்தடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய நாயும் கூட விளையாடியது. ஒரு சிறுவன் பந்தை வேகமாக அடித்ததால் பந்து குளத்தில் வீழுந்துவிட்டது. சிறுவர்கள் திகைத்தனர். குளத்தில் இறங்கமுடியுமா? பந்தை எடுப்பது எப்படி எனக்கலங்கினர். அப்போது... நடைபெற்றிருக்கலாம் என நீர் ஊகிக்கும் சம்பவத்தை திருத்தமான எழுவாய், பயனிலைகளுடன் வசனப் பிழைகள் இன்றி ஆறு வாக்கியங்களில் எழுதுக.

1) ........................................................................................
2) ........................................................................................
3) ........................................................................................
4) ........................................................................................
5) ........................................................................................
6) ........................................................................................

முற்றும்

தரம்-04 மாணவர்களைப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவதற்காக நடாத்தப்படும்



படிமுறைப் பரீட்சை - 16, 2007
ஆசிரியர்:- திரு.யு.எல். எம்.சாஜித்
(இல்மா ஜெனரிடே பாடசாலை, நிந்தவூர். தொ.பே.இல:- 077-9597407)



# அறிவியல்

ரீ.கே.ஆர்

## விண்வெளியில் நாசாவின் புதிய ஓடம்




விண்வெளியில்
நாசாவின் புதிய ஓடம் செலுத்தப்பட்டது.

செவ்வாய்க்கிரகமும், வியாழன் கிரகமும் சுற்றிவரும் பாதைகளுக்கு இடையே இருக்கின்ற பகுதியில் உள்ள விண்கற்களின் தொகுதிக்கு முதற் தடவையாக விஜயம் செய்யும் என்று எதிர்பார்க்கப்படும் ஒரு விண் ஓடத்தை அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா ஏவியுள்ளது. அப்பகுதியில் காணப்படும் சிறிய கிரகங்களாக மீள் வகைப்படுத்தப்பட்டுள்ள இரு மிகப் பெரிய பொருட்களான வெஸ்டா மற்றும் செரஸ் ஆகிய இரண்டில், ஒன்றுக்கு அருகில் இந்த டாவ்ண் என்ற விண்கலம் செல்லும். அதற்காக இது 8 ஆண்டுகள் பயணிக்கும்.

இந்த விண்கற்கள் தமக்கு சூரியக் குடும்பத்தின் தோற்றம் குறித்த புதிய உட்தகவல்களைத் தரலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். ஒரு மரபுசார் ரொக்கட்டின் உதவியுடன் பூமியை விட்டுச் செல்லும் இந்த டாவ்ண் விண்கலம் அந்த விண்கற்களை அடைய 4 வருடங்கள் எடுக்கும்.

மின்சாரத்தால் சக்தியேற்றப்பட்ட நுண்பொருட்களின் மூலமும் ஐயோண் டிரைவ் இயந்திரத்தின் மூலமும் இந்த விண்கலத்துக்கான சக்தி வழங்கப்படுகின்றது.

## குட்டீஸ் போன்!



ஜப்பானைச் சேர்ந்த செல்போன் தயாரிப்பு நிறுவனம் என்.டி.டி.டோகோமோ. அது குழந்தைகளுக்கென 3ஜி தொழில்நுட்ப செல்போனை அறிமுகம் செய்துள்ளது. இருக்குமிட கண்காணிப்பு முறையில் (ஜி.பி.எஸ்) இயங்கும் இந்த செல்போனை வைத்திருக்கும் குழந்தைகள் தொலைந்துவிட்டாலோ, ஆபத்தில் சிக்கினாலோ கண்டுபிடித்துவிடலாம்.

ஏதாவது, பிரச்சினை என்றால் 'ஹெல்ப்' என்ற டிஸ்பிளேயுடன் பிளாஷ் லைட் எரிவதுடன் ஊரைக் கூட்டிவிடும் சத்தத்தில் அலாரமும் இதில் அடிக்கும்.

## தகவல்.கொம்

* ரெசின் என்பது சிலவகைத் தாவரங்களில் இருந்து கசியும் ஒருவகைப் பிசின் போன்ற பொருளாகும்.
* நேர் மற்றும் எதிர் மின்பொருட்களை ஒன்றுடன் ஒன்று சேராமல் பிரித்து வைப்பதுதான் பட்டரிகள், கம்பிகளால் மின்குமிளை இணைக்கும்போது பிரிந்தவை இணைந்து மின்சாரம் தருகின்றன.
* உலகில் மிக ஆழமான இடம் - பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு அருகாமையில் உள்ள மரியானா ஆழி.
* ஆனைக்கொய்யா (Avacado) விலேயே பழங்களில் அதிக கலோரிகள் உள்ளன. ஒவ்வொரு 100 கிராமிலும் 167 கலோரிகள் உள்ளன.
* உணவு உட்கொண்ட பின்னர் நீரருந்துவது, வாயிலுள்ள அமிலத்தின் செறிவை 61 வீதம் குறைக்க உதவுகின்றது.
* ஆமை 350 ஆண்டுகள் கூட வாழக்கூடியது. இதன் நாடித் துடிப்பு மிகமிக மெதுவாக இருக்கிறது.
* மரங்களில் அதிக ஆயுள் கொண்டது செக்கோயா என்ற பைன் மரம், எகிப்தில் (4 ஆயிரத்து 500 ஆண்டுகள்) பிரமிட் கட்டியபோது முளைத்த மரங்கள் இன்றும் வாழ்கின்றன.


## பறவைப் படகு

பார்ப்பதற்கு ஒரு பறவை போல இருக்கும் இந்த படகின் பெயர் யாத் ரேஸ்.

லேசுபட்டதல்ல இது. முற்றிலும் பயோடீசலில் இயங்கும் இந்த படகுதான் உலகிலேயே சுற்றுச் சூழலை மாசுபடுத்தாத படகுகளில் அதிவேகமானது. இப்போது இப்படகு அதிவேகத்தில் உலகம் முழுவதையும் சுற்றிவர உள்ளது. இதற்காக 100 சதவீதம் பயோடீசல் மட்டுமே பயன்படுத்தப்பட உள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது தான் இதன் நோக்கம். மார்ச் 1இல் இந்த உலகப் பயணம் ஸ்பெயினின் வாலன்சியாவில் இருந்து தொடங்குகின்றது.



## ஒன்பது கோள்கள்



ஒரு கோள் சூரியனை ஒருமுறை சுற்றிவர எடுக்கும் காலம் அந்தக் கோளின் ஒரு வருடம் எனப்படும். இதனை அக்கோளின் சுற்றுக்காலம் (Period of Revolution) என்பதுண்டு. பூமியின் சுற்றுக்காலம் (அதாவது, பூமியின் ஓர் ஆண்டு) 365 1/4 நாட்கள் என்பதை யாவரும் அறிவர். அதுபோல், புதனில் ஒரு வருடம் 88 பூமி நாட்களுக்கும், [illegible]கத்தில் 248.5 பூமி வருடங்களுக்கும் சமமானது.

சூரியனை ஒரு கோள் சுற்றிவரும் அதே வேளையில், தனது அச்சின் வழியாக (கோளின் வட துருவத்தையும் தென் துருவத்தையும் தொடுக்கும் கற்பனைக் கோடு) தன்னைத்தானேயும் சுற்றுகின்றது. ஒரு கோளின் சுழற்சிக்காலம் (Period of Revolution) எனப்படுவது அது தன்னைத் தானே ஒருமுறை சுற்ற எடுக்கும் காலமாகும். ஒருநாள் என்பது இதைத்தான். சுக்கிரனின் ஒருநாள் பூமியின் 243 நாட்களுக்குச் சமமானது! அதே வேளையில் வியாழனில் பூமிக் கணக்கின்படி 9 மணி 50 நிமிடங்களுக்கு ஒருதடவை ஒருநாள் வருகிறது! கோள்கள் சூரியனைச் சுற்றிவருவது போல், சந்திரன்கள் கோள்களைச் சுற்றிவருகின்றன. புதனுக்கும் சுக்கிரனுக்கும் ஒருசந்திரன் கூட கிடையாது. ஏனைய கோள்களுக்கு ஒன்று முதல் பதினெட்டு வரையிலான சந்திரன்கள் உள்ளன.

JAFFNA
SPECIAL COLLECTION

மெக்சிக்கோவின் டெபால்சிங்கே நகரம். அரசியல்வாதியான மெண்டோசாவும் திருமதி மெண்டோசாவும் அவர்களது மகளும் மியாமி ரெஸ்டோரண்டில் சேரிவாசிகளான சொசிமோ, பற்ரிஸ் இருவரினாலும், பொலிஸ் அதிகாரி மெக்டொனாலினால் பணம் கொடுக்கப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர். அச்சம்பவத்தில் ஏற்பட்ட ரயில் விபத்தில் பற்ரிஸ் காருடன் எரியுண்டு போகிறான். பின்னர் மெக்டொனால் சொசிமோவை கொல்ல முயல்கிறான். தப்பியோடிய சொசிமோ பற்ரிஸின் மனைவி டுமாச்சியுடன் மரங்களுக்கிடையே பரண் அமைத்து ஒளிந்திருக்கிறான். அவர்கள் இருவரையும் தேடி பத்திரிகையாளரான ரீட்டா காட்டுக்குள் செல்கிறாள். அவர்களை சந்திக்கின்றாள். தகவல்களை காதலன் ஜோன்சனுக்கு அனுப்புகிறாள். அவர்கள் மூவரையும் பிடிக்க பொலிஸார் வலைவிரிக்கின்றனர். ரீட்டாவை பத்திரமாக அழைத்துச் சென்று ஜோன்சனிடம் சேர்ப்பிக்கின்றான் சொசிமோ. திரும்பி வரும் வழியில் கைத்தொலைபேசி ஒலிக்கிறது. கைத்தொலைபேசியில் பேசியவரே சொசிமோ இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முயல்கிறான் மெக்டொனால். அதை உணர்ந்த சொசிமோ வேகமாக ஓடுகிறான். அதேநேரம் தேவாலயப் பக்கமாக ஒன்றுகூடிய ஜோன்சனும் ரீட்டாவும் தப்பிச் செல்ல நினைத்து மோட்டார் சைக்கிளில் ஏறி விரைகின்றனர்.

ஆனால், அம்புலன்ஸ் வாகனத்திலிருந்து பாய்ந்து சென்ற குண்டுகள் அவர்களை சல்லடை செய்கின்றன. ஜோன்சனின் உடல் சைவற்றுக் கிடக்கிறது.

இனி..

# மியாமி கரைதனில் சிதறிய உடலங்கள்





## தொடர் - 13

ஜோன்சன் விழுந்து கிடக்கும் இடத்தில் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்ட உளவாளி, கீழே இறங்கி ஜோன்சனை நெருங்கினான்.

மற்றவன்-

ரீட்டா கொஞ்சம் தொலைவில் கிடந்தாள். அவன் செலுத்திய வண்டி அவளை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

வீதியில்-

ஒரு ஈ காக்கைகூட இல்லை. வாகனப்போக்குவரத்து பாதை என்ற பெயர்தான் அதற்கு உண்டே தவிர அது ஒரு கிளைப்பாதை. கொஞ்சம் குறுகலானது. ஆனால், அகலமான பிரதான பாதையுடன் இணைக்கக்கூடியது. கொஞ்சம் தொலைவில் அந்த இணைவு காணப்படுகிறது.

ஜோன்சனை நோக்கி சென்று கொண்டிருந்த அந்த உளவாளியின் பெயர் கிறிஸ்தோபர். ஆஜானுபாகுவான ஆசாமி. பயில்வான் போலிருந்தான். பருப்பமான ஓவர் கோட் அணிந்திருந்தான். அதற்குள் துப்பாக்கிகள் வைத்திருக்கக்கூடும். அவனுடைய பெருத்த சரீரத்தை அவதானிக்கின்ற போது உள்ளே பாதுபபுக் கவசம் அணிந்திருப்பவன் போன்று தோன்றுகிறான். மிகவும் முன்னெச்சரிக்கையான அதிகாரி. நடந்து கொண்டிருந்த அவன்

எழுதுவது கே. வி.

பின்னால் வாகனம் ஒன்று வேகமாக வருவதைப் போன்ற சத்தத்தைக் கேட்டதும் நின்றான்.

சட்டென-

திரும்பிப் பார்த்தான்.

அம்புலன்ஸ் வேகமாக வந்து கொண்டிருக்கிறது. அது வருகின்ற வேகத்தை அனுமானித்தால் 'இருடா உன்னை, கால் கை மண்டை எல்லாதையும் பீஸ் பீஸாக சிதறடிக்கிறேன்' என்பதைப்போல உறுமிக் கொண்டு வருகிறது. ஒரு ரொக்கட்டைப்போல பறந்து வருகிறது.

ஆபத்து நெருங்கிவிட்டது என்பதை அவன் உணர்ந்தான், உஷாராகிவிட்டான். சரேலென சின்ன அளவிலான இயந்திர துப்பாக்கியை கையிலெடுத்துக் கொண்டு பள்ளத்துக்குப் பாய்ந்தான்.

வெடிச்சத்தங்கள் கேட்டன.

சட சடவென அவை தொடர்ந்தன. அம்புலன்ஸ் வண்டியிலிருந்து நீண்ட ஒரு கையிலிருந்த இயந்திரத் துப்பாக்கி குண்டுகளையும், நெருப்பையும் கக்குகின்றது. வாகனம் ஜோன்சன் கிடந்த இடத்தைக் கடந்து விட்டது.

பாவம் ஜோன்சன். அவன் உடல் மேலும் சல்லடையாகிவிட்டது போலும். ஏனென்றால் கிறிஸ்தோபரின் உடலில் எதுவித காயங்களும் ஏற்படவில்லை. இயந்திரத் துப்பாக்கிக் குண்டுகள் யாரைக் குறி வைத்தன என்பதை கிறிஸ்தோபரால் ஊகிக்க முடியவில்லை. அவன் வீதியோரமாக இருந்த பள்ளத்துக்குப் பாய்ந்தபோது அவனுக்குப் பின்னாலே வெடிச் சத்தங்கள் கேட்டன.

ஆனால்-

ஒன்றை சீக்கிரமாக ஊகித்துக் கொண்டான். மத்திய உளவுப் பிரிவைச் சேர்ந்த தனக்கும், அலெக்சாண்டருக்கும் உயிராபத்து ஏற்பட்டு விட்டது என்ற உண்மைதான் அது. இதனால் அவன் மிகவும் விழிப்புடன் செயற்படலானான்.

அம்புலன்ஸ் வண்டியில் இருப்பவர்களால்தான் ஆபத்து. அவர்கள் அந்த இளம் ஜோடியை சுட்டுவிட்டார்கள். ஏன் சுட்டார்கள் என்பது தெரியவில்லை. அடுத்த அவர்களின் குறி அலெக்சாண்டரும் நானும்தான். இளம் ஜோடியை சுட்டதோடு தம் தேவை முடிந்துவிட்டது என்று அவர்கள் திருப்தியடைந்திருப்பார்கள் என்றால், அந்த அம்புலன்ஸ் வண்டி திரும்பவும் அதே பாதைக்கு திரும்பியிருக்காது. இம்முறை அவர்கள் மத்திய உளவுப் பிரிவைச் சேர்ந்த எம்மைத்தான் குறிவைக்கிறார்கள் என்றவாறான எண்ணங்கள் அவன் மனத்தில் பெரும் நீரோட்டமாக ஓடின.

மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்திலிருந்து குண்டடிப்பட்ட அந்தப் பெண் கொஞ்சம் தொலைவில் விழுந்து விட்டாள். அவளை நோக்கி அலெக்சாண்டரின் வண்டி போய்க் கொண்டிருந்தது.

தன்னைக் கடந்து சென்றுவிட்ட அம்புலன்ஸ் வண்டி அலெக்சாண்டரை நோக்கிச் செல்லும் வண்டியிலுள்ள இயந்திரக் துப்பாக்கி மனிதன் அலெக்சாண்டரை அல்லது மறுபடியும் அந்தப் பெண்ணை குறிவைக்கலாம்.

கிறிஸ்தோபர் திடுமென விழித்துக் கொண்டான். துப்பாக்கியை நெஞ்சோடு இணைத்துக் கொண்டு இரு கைகளாலும் அணைத்தவாறே சரசரவென ஒரு பாம்பைப்போல ஊர்ந்து மிக வேகமாக மேட்டுத் திடலுக்கு ஏறினான்.

இந்த அம்புலன்ஸ்காரர்கள் மெக்டொனால் சொல்வது போல பயங்கரவாத குழுவை சேர்ந்தவர்களாகவே இருக்கக் கூடும். ஏதோ ஒரு தடயத்தை அழித்துவிட வேண்டும் என்ற ஆவேஷத்தில் இப்படி நடந்து கொள்கிறார்கள் போலும். எப்படியோ அவர்களுடன் மோதவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. நாம் தப்பிப்போக நினைத்தாலும், இல்லை முயற்சித்தாலும் அவர்கள் விடமாட்டார்கள். விரட்டி விரட்டி எப்படியாவது சப்ஜெக்டை குளோஸ் பண்ணிவிடுவார்கள் என்பதை கிறிஸ்தோபர் துலாம்பரமாக உணர்ந்தான்.

அவன் மேலே வந்துவிட்டான்.

கொஞ்சம் தொலைவில்-

அம்புலன்ஸ் வேகமாக போய்க் கொண்டிருக்கிறது.

அதற்கு முன்னால்-

அலெக்சாண்டர் வீதியில் நின்றிருந்தான். தன்னை நோக்கி பைசாசமாக பறந்து வந்து கொண்டிருக்கும் அம்புலன்ஸ் வண்டி பற்றிய எந்தவிதமான கவலையும் இல்லாமல் அவன் அங்குமிங்குமாக எதையோ தேடிக் கொண்டிருந்தான்.

'அடப்பாவி! பின்னால் விரட்டுகிற ஆபத்தை உணராமல் என்னடா தேடிக்கொண்டிருக்கிறாய்?'

என்று கிறிஸ்தோபர் மனம் கதறியது.

''அலேலே லேக்க்க்!''

அவன் வாய்விட்டலறினான். அவனால் எவ்வளவுக்கு எவ்வளவு உச்சஸ்தாயியில் அலற முடியுமோ அந்த அளவுக்கு குரலெடுத்து கதறினான்.

ஆனால்-

அம்புலன்ஸின் அதிவேகமான சத்தத்தில் கலந்து உறைந்து அது கரைசலாகி விட்டது.

கிறிஸ்தோபரின் துப்பாக்கி அம்புலன்ஸை குறி வைத்தது.

வாகனத்தின் சக்கரங்களை நோக்கி அவனுடைய துப்பாக்கி, குண்டுகளை கக்கியது.

சடசடவென சத்தமுடன் குண்டுகள் பறந்தன. ஒரு பிரயோசனமும் இல்லை. நீர்ச்சுழியென பின்னல் வேகத்தில் சுழன்று விரையும் அம்புலன்ஸ் வண்டியின் சக்கரங்களை அவை எந்தவிதத்திலும் காயப்படுத்தவில்லை.

ஆனால்-

பிரளயகால தாக்குதலாக நிகழ்ந்த ஒரு கோரச் சம்பவம் அவனை விறைத்துப் போகச் செய்துவிட்டது.

"அலேலேலேலேக்க்க்...!''என்ற அவனுடைய கதறல் ஒரு சூனியப் பிரதேசமாக திகழும் அந்த வெளி எங்கும் பறந்து, படர்ந்து அதற்கு அப்பாலுள்ள காடுகளெங்கும் விரைந்து மரங்களிலுள்ள பறவை களையும், காகங்களையும் 'காகாகா' என்றும் 'கீகீ' என்றும் பதறிக் கொண்டு சிறகடித்துப் பறக்கச் செய்கின்றது. பிரதேசம் எங்கும் பட்சிகளின் அலறல்.

அலெக்ஸாண்டர் நடுரோட்டில் நிற்கிறான். இடுப்பில் கைவைத்துக் கொண்டு, அங்குமிங்கும் எதையோ தேடுகிறான்.

மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்திலிருந்து குண்டடிபட்ட அந்தப் பெண் இங்கேதானே விழுந்தாள். எங்கே ஆளையே காணோம்-

அவனுக்கு அதிசயமாகவிருந்தது- சில நிமிடங்களுக்கு முன்பாகத்தான் துப்பாக்கிச் சூடு நடந்தது. அவள் விழுந்தாள். இதோ இந்த இடத்தில் தான் விழுந்தாள்.

'ஆனால், எங்கே? எங்கே?அவள் உடலையே காணவில்லையே! உயிரோடுதான் இருக்கிறாளா? இல்லை மண்டையைப் போட்டுவிட்டாளா? அட அது எப்படிப்போனாலும் ஆளையே காணவில்லையே!'

இந்த எண்ணங்கள் அவன் மனத்தில் குவிந்து விட்டன. அதனால் பின்னால் விரட்டி வந்து கொண்டிருக்கும் உயிராபத்தை அவனால் உணர முடியவில்லை. முகம் முழுவதையும் தலையுடன் சேர்ந்து ஹெல்மெட் மூடிக்கிடந்ததால் செவிகளுக்குள்ளும் எந்த சத்தமும் விழுந்ததாகத் தெரியவில்லை.

அம்புலன்ஸ் அவன் மீது படீலென மோதுகிறது. அவன் தூக்கி வீசியெறியப்பட்டு, நடுவீதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் மீது மோதி சைக்கிள் சரிய அதன் மீது விழுந்தான். அம்புலன்ஸ் அவன்மீது ஏறி துவம்சம் செய்து கொண்டு விரைகிறது.

சில கணங்கள் அவன் உடல் நெருப்பிலிட்ட புழுவாக துடிப்பதைக் காண முடிந்தது. அப்புறம் அடங்கி விட்டது.

அம்புலன்ஸ் வண்டி மீண்டும் திரும்பி வரக்கூடும் என்று கிறிஸ்தோபருக்கு தோன்றியது. அலெக்சாண்டர் மீது வண்டியை மோதியதன் மூலம், அம்புலன்ஸ் வண்டியிலுள்ள கொலைகாரன் தனது எண்ணத்தை வெளிப்படுத்திவிட்டான் என்பதை உணர்ந்த கிறிஸ்தோபர் சடுதியாக தன்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தான்.

பள்ளத்தை நோக்கி மறுபடியும் சரசரவென இறங்கிவிட்டான். அங்கிருந்த ஒரு மரத்தின் பின்னால் மறைந்து கொண்டு வீதியை எட்டிப் பார்க்க அவனால் முடிந்தது.

நாழிகைகள் கரைசலாகின்றன. கண்ணில் இருந்து மறைந்த வாகனம் வெகு தொலைவு வரை தெரியவில்லை. எழுந்து வீதிக்கு வந்தான். வீதியில் வெகு தொலைவுவரை பார்வையைச் செலுத்தினான். அப்போது அம்புலன்ஸின் முகம் தெரிந்தது.

(தொடரும்











ஸ்பெயின் நாட்டின் மாட்ரிட் நகரில் விலங்குகளைக் கூண்டில் அடைப்பதை எதிர்க்கும் வகையில், கூண்டுக்குள் தங்களை அடைத்துக் கொண்டுள்ள விலங்குநல ஆர்வலர்கள்...







மனைவி: இந்தப் புறாக்கள் இரண்டும் எவ்வளவு சந்தோசமாக இருக்கின்றன பார்த்தீர்களா?
கணவன்: இன்னும் கல்யாணம் ஆகியிருக்காது...!






இந்தோனேசியாவில் நடைபெறும் பூமி வெப்பமடைதல் குறித்த சர்வதேச மாநாட்டு அரங்குக்கு வெளியே பூமி உருண்டை போன்ற உடையணிந்து செடி போன்ற தோற்றத்தில் வலம் வருகிறார் நடன மங்கை.

## கற்புள்ள எருமை

காால்நடைச் சந்தையில் நிறைய பசுக்களும் எருமைகளும் விற்பனைக்கு வந்திருந்தன. நல்ல எருமை ஒன்றை வாங்க விரும்பிய ஒருவன், சிறந்த இரு எருமைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்த ஒரு விவசாயியை அணுகினான். அதில் எதை வாங்குவது என்பதை அவனால் தீர்மானிக்க முடியவில்லை. இரண்டும் பார்ப்பதற்கு அருமையாக இருந்தன. ஒன்றைத் தொட்டுக்காட்டி இது என்ன விலை என்று கேட்டான். ஐயாயிரம் ரூபாய் என்று விவசாயி பதிலளித்தான். இளம் வயது ஆண்டுதோறும் கன்று போடும். ஒவ்வொரு நாளும் 10 லீட்டர் பாலைக் கொடுக்கும். விலை சற்று அதிகமாகத் தோன்றியது. எனவே மற்றொரு எருமையைத் தொட்டுக் காட்டி இதன் விலை எவ்வளவு என்று கேட்டான்.
பத்தாயிரம். நடுத்தர வயது. கன்றே ஈன்றதில்லை. மனிதர்கள் கைபடாத மடி.
சரியான பைத்தியக்காரனாக இருக்கிறாயே, கன்று போடாத எருமைக்கு இரண்டு மடங்கு விலை கேட்கிறாயே, இது நியாயமா?அது கற்புள்ளது என்பதை மறந்து வீட்டீர்களே
என்றான் விவசாயி. யாருடைய கையும் படாதது என்று நான் சொல்லவில்லையா?



## தத்துவம்

வேசம் : காதலிக்கும் போது வியர்வை கூட வாசம்
கருத்து மோதல் வந்தால் நேசம் கூட வேசம்

நட்பு : பணம் இருக்கும் போது கூடிக் கொள்வதல்ல நட்பு
படுகுழியில் வீழ்ந்தபோதும் தோள்கொடுப்பதே நட்பு


அம்மா : மாடு கூட அம்மா என்கிறது
மழலையோ 'மம்மி' என்கிறது

பூமி : என்னதான் சூரியனை பூமி சுற்றிவந்தாலும்
பூமிக்குச் சூரியன் பிக்-அப் ஆகாது

காதல் : கரண்ட் போனால் வீடு இருட்டாகும்
காதல் போனால் வாழ்க்கை வெளிச்சமாகும்

## 'யார் இவர்' தெரிகிறதா? 21

### இந்த வாரம் பிரகாசமாக இருக்கும் உருவம் யாருடையது?



அண்மையில் வெளிவந்து சக்கை போடு போடும் இந்தி திரைப்படத்தின் கதாநாயகனும், இந்தி திரையுலகின் பிரபல நட்சத்திரமுமான இவர் யாரெனக் கண்டுபிடித்து இவர் பெயரை தபாலட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள், சரியான விடை எழுதிய அதிஷ்ட சாலிகள் ஐவரின் பெயர் விவரம் பிரசுரிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி

சுடர் ஒளி
"யார் இவர் தெரியுமா?"
85, ஜெயந்தமல்லிமாரச்சிமாவத்தை,
கொழும்பு-14.

★ "யார் இவர் தெரிகிறதா?" இல. 16 இற்கான சரியான விடை: பாக். கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான்கான். சரியான விடைகளை அனுப்பியோரில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு:
1. ரிப்ஹா நபியான் - சாய்ந்தமருது -14. 2. பி.சிவாஜினி - வவுனியா 3. யோ.லிசாந்தினி - வவுனியா 4. வசந்தி - யாழ்ப்பாணம். 5. ஏ.றுக்கையா - பொத்துவில்.



JAFFNA
SPECIAL COLLECTION





# பித்தன் பதில்கள்

ஜி.காமராஜன்,
மாளிகாவத்தை.

*கேள்வி:* 'செக்ஸ்' வைத்துக் கொள்வது தப்பானதா பித்தா?

***பதில்:*** மூளை சிறப்பாக செயற்பட வாலிப வயதில் தினமும் 'செக்ஸ்' நல்லது என்கிறார்கள் மருத்துவர்கள். பாதுகாப்பற்ற செக்ஸினாலேயே 'எயிட்ஸ்' ஏற்படுகிறது.





பி. தனுஜா,
ஹெம்மாதகம.

*கேள்வி:* பித்தா! பூவில் அதிர்ச்சி கொடுக்கும் பூ எதுவென்று கூற முடியுமா?

*பதில்:* பாம்பு.

ஆர்.கஜேந்தினி,
நுணாவில்.

*கேள்வி:* 'ஒசியில்' மூக்கு முட்ட பிடிப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் பித்தூ?

*பதில்:* குருவும் சீடனும் விருந்துக்கு சென்றார்கள். இரண்டு பேரும் வயிறு முட்ட சாப்பிட்டார்கள். வெளியே வந்ததும் செருப்பை குனிந்து தேட முடியாத குரு, சீடனிடம் தன் செருப்பைத் தேடி எடுத்து காலில் மாட்டச் சொல்லி கட்டளையிட்டார்.

அதே நிலைமையிலிருந்த சீடன் ''குருவே, நான் ஆகாயமெல்லாம் தேடிவிட்டேன். உங்கள் செருப்பை காணவில்லை'' என்று கூறி விட்டு நகர்ந்து சென்றான்.

கமாலுதீன்,
சாய்ந்தமருது.

*கேள்வி:* பித்தூ! உங்க வீட்டிலே மாமியார் மருமகள் சண்டை நடந்தா நீங்கள் எந்தப்பக்கம்?

*பதில்:* பயங்கர ஆயுதங்களோடு யார் இருக்கிறார்களோ அவங்க பக்கம்!



வி.அனு,
நீர்வேலி.

*கேள்வி:* காதலித்துவிட்டு கைவிடும் ஆண்கள், பெண்களைப் பற்றிய உமது கருத்து என்ன பித்தா?

*பதில்:*

காதல்: பருவகால கூதல்,
ஹோர்மோன்களின் மோதல்.

கால மாற்றத்துக்கு ஏற்ப தங்களை அவர்கள் மாற்றியமைத்துக் கொள்கிறார்கள் அவ்வளவுதான்.

எம்.லட்சுமி,
திருமுறிகண்டி.

*கேள்வி:* நல்ல ஜோக் ஒன்று சொல்லுங்கள் பித்தா?

*பதில்:* இதைக் கேளுங்கள்.

''உங்கள் கணவர் பூரண ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்



தூக்க மருந்துகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.''

''அவருக்கு காலையிலே இந்த மருந்துகளை கொடுக்க வேண்டுமா இல்லை இரவில் கொடுக்க வேண்டுமா டாக்டர்?''

''மாத்திரை அவருக்கில்லை. உங்களுக்குத்தான்''

எம்.நிஷாந்தினி,
கொட்டாஞ்சேனை.

*கேள்வி:* பெண்கள் காலையில் எழுந்தவுடன் கண்ணாடி முன் நின்று பார்ப்பதன் இரகசியம் என்ன பித்தா?

*பதில்:* முதல்நாள் இரவின் மகிழ்ச்சியை ரசிக்க!



மோகனதாஸ்,
திருமுறிகண்டி.

*கேள்வி:* அன்பின் பித்தா! நான் பல பெண்களுடன் பழகுகிறேன். சிரிப்பதுடன் நிறுத்தி விடுகிறார்கள். ஆனால் என் நண்பன் எப்படியோ கதைத்து நாளுக்கு ஒருத்தராக ஏற்றிச் செல்கிறான். இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

*பதில்:* உங்களிடம் 'லைசன்ஸ்' இல்லை என்று நினைக்கிறேன். முதலில் வீட்டில் அனுமதி பெற்று 'லைசன்ஸ்' ஒன்றை பெற்றுக் கொள்ளுங்கள். அப்புறம் வண்டி என்ன, எது வேண்டுமானாலும் ஓட்டலாம்.

எம்.பி.எம்.அன்ஸார்,
போத்தலாப்பிட்டிய.

*கேள்வி:* கனம் பித்தன் அவர்களே! எமது நாட்டில் உணவுப் பண்டங்கள் தொடக்கம் பால்மா வகை வரையான பொருட்களின் விலைவாசி ஏறிக்கொண்டே செல்கிறதே. இவ்வாறு சென்றால் எதிர்காலத்தில் இலங்கை திருடர்களின் உலகமாக மாறிவிடாதா?

*பதில்:* திட்டம் போட்டுத் திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது. அதை சட்டம் போட்டு தடுப்பவர் கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது....

யு.எல்.எம்.சித்தாரா,
சிலாபம்.

*கேள்வி:* ஆண்களின் சுதந்திரம் பறிபோவது எப்போது?

*பதில்:* கரண்டிகள் கைமாறும் போது!



பித்தன் மீது பித்தாய் உள்ள பித்தர்களே! பித்தனிடம் எத்தனை பித்தான கேள்விகளையும் நீங்கள் தொடுக்கலாம். அவைகளின் தரம் அறிந்து பித்தன் பதிலளிப்பான்.
அனுப்ப வேண்டிய முகவரி:

'பித்தன் பதில்கள்'
சுடர் ஒளி (வாரஇதழ்)
இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.

---

# வெளிச்சத்துக்கு வந்த இரட்டை வேடம்!

நிமிடக்கதை

இளைஞர்களின் சபல புத்தியை பயன்படுத்தி அவர்களுக்கு ஆசை காட்டி, மயக்கி, பணம் பறித்து உல்லாச வாழ்க்கை வாழ நினைத்து, தனது படிப்பை கெடுத்து வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கிக் கொண்ட கல்லூரி மாணவியின் கதை இது.

எனது தோழி கிராமத்தை சேர்ந்தவள். நகரில் உள்ள தனது அக்காள் வீட்டில் தங்கி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். தோழியின் குடும்பமும், அக்காள் குடும்பமும் வசதியானது அல்ல. ஆனால் என் தோழி பணக்கார வீட்டுப் பெண் போல உடை உடுத்துவாள். எப்படி இதற்கெல்லாம் பணம் இவளுக்குக் கிடைக்கின்றது என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கும்.

இரண்டு பணக்கார கல்லூரி மாணவர்களை தேர்வு செய்து, அவர்களுடன் தனித்தனியாக பேசி, பழகி, சினிமா, பார்க் என்று சுற்றி, ரொம்ப சாமர்த்தியமாக சினிமா நடிகை போல 'இரட்டை வேடம்' போட்டு நடத்து வந்தாள். இந்த வாரம் ஒருவனுடன் அடுத்த வாரம் இன்னொருவனுடன் ஊர் சுற்றுவதுமாக பொழுதைக் கழித்தாள்.

சினிமா தியேட்டரில் தொட்டு தடவி முத்தம் கொடுத்து அவர்களை சூடேற்றி பணத்தைக் கறந்துவிடுவாள். மற்றபடி எல்லை மீறுவதில்லை. அதனால் பணம் அதிகமாகக் கிடைத்தது.

இந்த நாடகம் எத்தனை நாளைக்கு? பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்பது போல அவளின் இரட்டை வேடம் ஒருநாள் தெரிந்து விட்டது. இரண்டு காதலர்களும் ஒன்று சேர்ந்து மிரட்டி, ''சீ... இவ்வளவு கேவலமானவளா? நீ பெண்ணே அல்ல.... பணப்பேய்!'' என்று காய்ச்சி எடுத்து விட்டார்கள். இந்த கேவலமான காதல் கல்லூரி முழுவதும் தெரிய, தோழிகள், தெரிந்தவர், உறவினர் எல்லோரும் இவளை விபசாரி போல எண்ணத் தொடங்கிவிட்டனர்.

வீட்டுக்கு பிரச்சினை தெரியவர, அக்காள் கணவர் உடனே கிராமத்துக்கு தகவல் தெரிவித்து, அவளை உடனே ஊருக்கு அனுப்பிவிட்டார்.



படிப்பு பாதியிலேயே நின்றுவிட்டது.அத்தனையும் வீண். கிராமத்தில் பேரும் கெட்டு, படிப்பும் கெட்டு, வாழ்க்கையே ஒரு கேள்விக்குறிபோல வாழ்கிறாள்.

இவளைப் போலவே இன்னும் சில மாணவிகளும் உண்டு.

பணத்திற்காக தம்மையே இழக்கும் மாணவிகளும் உள்ளனர். அவர்களுக்கு இது ஓர் எச்சரிக்கையாக இருக்கட்டும்.

லிங்கொல்ன் கல்லூரி
மலேசியா
www.lincoln.edu.my E-mail: info@lincoln.edu.my

நேர்ஸிங் – தாதியியல்
ஹொட்டலும் ஹொட்டலிங்கும்
பொறியியல் (இலத்திரனியலும், இலத்திரனியல் சாதனங்களும்)
கம்பியூட்டர் புறோக்கிராமிங்
வணிக நிர்வாகம்
மல்ரி மீடியா

மலேசியா

அவுஸ்திரேலியா
இங்கிலாந்து
அமெரிக்கா
நியூசிலாந்து
ஐரோப்பிய நாடுகள்
கனடா

உங்கள் தகைமைக்கேற்ற புலமைப்பரிசில் வழங்கப்படும்

* தங்குமிட வசதியுடன் உள்ளடக்கப்பட்ட மிகக் குறைந்த கல்விக் கட்டணம்.
* சகல வசதிகளையும் கொண்ட மேல்நாட்டு நாகரீக குடியிருப்புக்கள்.
* பகுதிநேர வேலைவாய்ப்புக்கள். IELTS,TOFEL தேவையில்லை.
* VISA பெறுவதற்கு நேர்முக பரீட்சை தேவையில்லை.

அனுமதிக்கான குறைந்தபட்ச தகுதி
க.பொ.த.(சாதாரணதரம்)

ஆலோசனைக் காரியாலயம் :
LINCOLN COLLEGE STUDENT COUNCIL,
NO. 399, 2nd FLOOR GALLE ROAD, COLOMBO 04.
(வோல்வோ கம்பனிக்கு முன்னால்)
TEL/FAX : 0112 552564, 0773 441523,
உயர் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றது :
KP(JPS) 5195 / IPTS/ 1222JLD 11 (4)

இலவச விரிவுரை வகுப்புக்கள்
யாழ்ப்பாண ஏஜென்ற்:
எஸ்.சிவகிரிபன்,
சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.
தொடர்பு:- 077 5212703


# 60– கால கட்டத்தை நினைவுகூரும் 'ஈழத்து முற்போக்குச் சிறுகதைகள்'

'இலங்கை முற்போக்குக் கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாக 'ஈழத்து முற்போக்குச் சிறுகதைகள்' எனும் தொகுப்பு வெளிவந்திருக்கிறது. இவ்வரிசையில் முதல் தொகுதியான இதன் வெளியீட்டு விழாவும் ஆய் வரங்கும் பெண்களுக்கான கல்வி ஆய்வு நிறுவன மண்டபத்தில் 16 /12/2007 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30 மணியளவில் இடம்பெற்றன. எழுத்தாளரும் , வரலாற்றாசிரியரும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஆரம்பகால மூத்த எழுத்தாளர்களில் ஒருவருமான அ.முகம்மது சமீம் தலைமை வகித்தார். விரிவுரையாளரும், ஆய்வாளருமான செ.யோக ராசா, விமர்சகர் லெனின் மதிவாணன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

ஈழத்து முற்போக்குச் சிறுகதைகள் எனும் இந்த நூலில் கே.கணேஷ், அ.ந.கந்தசாமி, என்.கே. ரகுநாதன், சி.வி.வேலுப்பிள்ளை, எச்.எம்.பி. மொஹிதீன், நீர்வை பொன்னையன், செ. கணேசலிங்கன், கே.டானியல், டொமினிக் ஜீவா, அ.முகம்மது சமீம், எஸ்.அகஸ்தியர், பெனடிக் பாலன், மருதூர்க்கனி, கே.விஜயன், காவலூர் ராசதுரை, நந்தி, கவிஞர் ஏ.இக்பால், தெணியான், திக்குவல்லை கமால், என்.சோமகாந்தன், சாந்தன், அ.ஸ.அப்துல்சமது, மு.கனகராசன் ஆகியோரின் சத்திய போதி மரம்- இரத்த உறவு- போர்வை- ஒரு புதிய ஆயுதம்- தண்ணீர்- சங்கமம் - சாயம் - வாய்க்கரிசி- ஒளி- பிரசாதம்- இங்கவர் வாழவோ- மண் பூனைகளும் எலி பிடிக்கும்- 47 வருஷங்கள் தேவ கிருபையை முன்னிட்டு வாழும்- ஊர் திரும்புமா?- ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கிறான்- பெரு மூச்சு- எப்படியும் பெரியவன்தான் - மாறுசாதி- நிலவோ நெருப்போ- நேற்றைய அடிமைகள் - என் நண்பன் பெயர் நாணயக்கார- அந்தக் கிழவன் -பகவானின் பாதங்கள் ஆகிய 25 கதைகள் உள்ளடக்கமாகியுள்ளன.

இந்த நூலை எழுத்தாளர் நீர்வை பொன்னையன் தொகுத்து வழங்கியுள்ளார். 24 பக்கங்களைக் கொண்ட அவருடைய தொகுப்புரையும் இந் நூலை வெளியிடுவதற்கு பூபாலசிங்கம் புத்தக நிலையத்தின் அதிபர் ஸ்ரீதரசிங் தாமாகவே முன்வந்து உதவியுள்ளார். கதைகள் ஒவ்வொன்றும் ஆசிரியர்களின் அக்காலகட்ட நிழற் படங்களுடனும், வாழ்க்கை குறிப் புகளுடனும் பிரசுமாகியுள்ளன. சம்பந் தப்பட்ட ஆசிரியர்களிடம் அக்கால கட்ட கதைகளே இல்லை. அப்படியிருக்க நிழல் படங்கள் எங்கே இருக்கப் போகின்றன. எனினும், அவற்றைத் தேடி எடுத்து பிரசுரித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதொரு செயலே.

இந்நூலை சிறந்ததோர் ஆவணம் என தமது தலைமையுரையில் குறிப்பிட்ட சமீம் அவர்கள் 60 - காலகட்டம், முற்போக்கு இலக்கியம் மிகவும் வீச்சுடன் வளரத் தொடங்கிய காலமாகும் என குறிப்பிட்டதுடன் சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசியல் நிலைவரங்களும் சூழலும் அந்நகையதொரு வீச்சான வளர்ச்சிக்கு காரணிகளாக அமைந்தன என்று வரலாற்று நிகழ்வுகளுடன் விவரித்தார். முற்போக்கு இலக்கியம் துரிதமான வளர்ச்சி கண்டது. ஏராளமான எழுத்தாளர்கள் சிருஷ்டி இலக்கியத்தின் நோக்கம் என்னவென்பதை பிரக்ஞை பூர்வமாக சமூகவுணர்வுடன் எழுதினார்கள். டானியல், டொமினிக் ஜீவா, அ.ந.கந்தசாமி, நீர்வை பொன்னையன் என இந்நூலில் பிரசுரமாகியுள்ள கதைகளின் ஆசிரியர்கள், எழுத்தை சமூக போராட்டத்துக்கான ஒரு கருவியாகவே பயன் படுத்தினார்கள். எனினும் இன்றும் கூட முற்போக்கு என்பதன் அர்த்தத்தை பல கல்விமான்கள் என சொல்லிக் கொள்பவர்கள் முற்போக்கு என்ற பதத்தை தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கின்றனர். பிழையான அர்த்தத்துடன் பேசுகின்றனர். இது வருத்தம் தருவதாகவே உள்ளது''என்றும் குறிப்பிட்டார்.




விமர்சகர் லெனின் மதிவாணன் தமது உரையில் கூறியதாவது:

''60 - காலகட்டம், நமது எழுத்தாளர்களில் கணிசமான தொகையினர் மாக்ஸிச லெனின் சிந்தனைத் தெளிவுடன் எழுதத் தொடங்கிய காலமாகும். இக்காலகட்டத்துக்கு முன்னரே சமூக சிந்தனையுடன் எழுத்துத் துறையில் பலர் ஈடுபட்டிருந்த போதும் 60 - கால கட்டத்தில், மாக்ஸிச லெனினிஸ கொள்கைப் பிடிப்புடனும் தெளிவுடனும் எழுத்தாளர்கள் எழுத ஆரம்பித்தார்கள். எழுத்து என்பது சமூகத்துக்குரியது. சமூகத்தைப் பற்றிச் சொல்ல வேண்டிய கடமை அதற்கிருக்கிறது. போராட்ட மயமான மக்களுக்கு கொள்கை ரீதியான வழி துணையாவது என்பதே எனது வாதம். அன்று முதல் இன்று வரை இலக்கியத்தை இக்கருத்தியலிலேயே கணிப்பீடு செய்து வருகிறேன். அவ்வாறான பல கதைக்ளை இந்நூலில் காணமுடிகிறது. கதை வடிவிலே பூரணமான வெற்றிகளை இக்கதைகள் அடையவில்லை என்ற போதும் அவற்றின் உள்ளடக்கங்கள் சமூகத்தன்மை வாய்ந்தனவாக இருக்கின்றன என்பது சிறப்புக்குரியது.




இலக்கியம் தொடர்பான எனது கொள்கையும், கோட்பாடும், சிந்தனையும் இவ்வாறு இருக்கின்றது. சிலர் அவற்றை கொச்சைப்படுத்த முனைகின்றனர். அண்மையில் ஒரு தேசியப் பத்திரிகையில் ஒருவர் எழுதியிருந்த நூல்

**கே.வி.**

விமர்சனத்தில் இந்த முயற்சியை மேற்கொண்டிருந் தார். அவர் தனது பெயரில் எதை எழுதியிருப்பாரென்றால், அது எனக்கு ஒரு பிரச்சினையாக இருந்திருக்காது. அவர் அந்த நூல் விமர்சனத்தை எழுதுவதற்கு எனது பெயரை பயன்படுத்தியிருக்கிறார். இதுதான் எனது பிரச்சினை, எனக்கு வருத்தம்'' என்றார் லெ.மதி வாணன்.

விரிவுரையாளரும், ஆய்வாளருமான செ.யோகராசா தமது உரையில் கூறியதாவது:

''ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுதிய எழுத்தாளர்களின் படைப்புக்கள் நூலுருப்பெற வேண்டியது அவசியமாகும். அந்த வகையில் பல்லாக்க முயற்சிகள் நூலுருவாக்கப் பட்டுள்ளன. காலரீதியாக, பிரதேச ரீதியாக, ஸ்தாபனங்கள் ரீதியாகவும் மறுமலர்ச்சி கதைகள், மலையகக் கதைகள் என பலவும் நூலுருப் பெற்றுள்ளன. அந்த வரிசையில் முற்போக்கு எழுத்தாளர் சிறுகதைகள் வெளிவந்திருக்கிறது. இது போற்றுதற்குரியது. இத்தகைய நூல்கள் காலரீதியான வரலாற்று ஆவணங்களாகும். இவை நமது இலக்கியம் குறித்த வரலாற்றினை சரியாக கணிப்பீடு செய்வதற்கான உசாத்துணை நூல்களாக விளங்க வல்லன.

60 - காலகட்டம், முற்போக்குச் சிந்தனைகள் வலுப்பெற்ற காலமாகவே கருதப் படுகிறது. நமது சிறந்த படைப் பாளிகள் அந்தக் காலகட் டத்தில் எழுதத் தொடங்கினார்கள். கே.டானியல் முதல் கே.விஜ யன் வரை கிட்டத்தட்ட 25 எழுத்தாளர்கள் முற்போக்குச் சிந்தனையுடன் எழுதிய கதைகள் இந்த நூலில் உள்ளன. இந்நூலில் யாழ்ப்பாணத்திலிருந்து எழுதிய என்.வி.நடராஜன் ஆகியோரின் ஆக்கங்களும் இடம் பெற்றிருந்தால் இது முழுமையானதொரு நூலாக நிறைவு தந்திருக்கும். இந்நூலிள்ள படைப்பாளிகளில் பலர் இன்று நம்மிடையே இல்லை. நீர்வை பொன்னையன், முகம்மது சமீம், கே.விஜயன், டொமினிக் ஜீவா போன்றோர் இன்றும் நம்மிடையே வாழ்கிறார்கள், எழுதுகிறார்கள். சிலர் அமரர்களாகிவிட , சிலர் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்றார்கள். இப்புத்தகத்திலுள்ள இவர்களின் கதைகள் அவர்களின் சிறந்த கதைகள் என்று கூறிவிட முடியாது. இக்கதைகளுக்குப் பிறகு மிகவும் சிறந்த கதைகளை இவர்கள் எழுதியிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் சிறந்த ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் என்பதில் எதுவித முரண்பாடும் இல்லை. இதன் இரண்டாவது தொகுதியும் வரவேண்டும். அவ்வக் காலகட்டத்துக்கேற்ப மேலும் சில படைப்புக்களின் ஆக்கங்கள் அந்நூலில் ஆவணப்படுத்தப்படல் வேண்டும். இதுவொரு வரலாற்றுத் தேவையாகும்'' என்ற வகையில் அவருடைய சாராம்சம் இருந்தது.

இந்த நூலின் தொகுப்பாளரான எழுத்தாளர் நீர்வை பொன்னையன் 24 பக்கத்தில்ஒரு தொகுப்புரை வழங்கியுள்ளார். குறிப்பிட்ட காலகட்ட கதைகளை தேடியெடுக்கப்பட்ட சிரமங்களையும் அவற்றை கொடுத்து தவியவர்களையும் குறிப்பிட்டுள்ள அவர், முற்போக்கு இலக்கியம் என்றால் என்ன? அதன் சர்வதேச தாக்கம், சமூகத்தன்மை, அவ்விலக்கியத்துடன் தம்மை ஐக்கியப்படுத்தியவர்கள், அவர்களின் ஆக்கங்கங்கள் என்பன குறித்து விவரித்துள்ளார்.

''முற்போக்கு இலக்கியவாதிகள் எல்லோரும் மாக்ஸிசக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவர்கள் அல்லர். மாக்ஸிசக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளாதவர்களும் சில முற்போக்கு இலக்கிய படைப்புக்களை உருவாக்கியுள்ளனர். ஆனால் மாக்ஸிச விரோத எழுத்தாளர்கள் என்றுமே முற்போக்கு இலக்கியவாதிகளாக இருந்ததில்லை. இருக்கவும் முடியாது. முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் வேகம், வீச்சு, தாக்கம் ஆகியவற்றினால் ஈர்க்கப்பட்டு வந்த சிலர் சந்தர்ப்பவாதம் காரணமாக முற்போக்கு இலக்கிய இயக்கத்திலிருந்து விடுபட்டுப்போன பின்பும் 'நாங்களும் மு.போ.இலக்கிய இயக்கத்திலிருந்தவர்கள்தான்' என்று கூறிக் கொள்பவர்களும் உளர். முற்போக்கு எழுத்தாளர்கள் என்று தம்மை கூறிக்கொள்ளும் சிலர் இதன் மூலம் தமது சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொண்டபின் பிற்போக்கான வியாபார நோக்குடன் எழுதி வருவதோடல்லாமல் ஒரு காலத்தில் தாங்கள் எந்த நோக்கத்துக்காகப் போராடினார்களோ அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுடன் சமரசம் செய்து கொண்டு அவர்களுடன் கூடிக் குலாவுதல் மாத்திரமல்லாது அந்த வர்க்கத்தினருக்கு சாமரை வீசி சேவகம் செய்கின்றனர். ஆனால் மாக்ஸிசக் கோட்பாட்டை தெளிவாகப் புரிந்துகொண்டு, அதை ஏற்று அந்தத் தளத்தில் இன்னும் உறுதியாக இலக்கியம் படைப்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா 60 - கால கட்டத்தின் சில சம்பவங்களையும், எழுத்தாளர்களின் போராட்டங்களையும் நினைவு கூர்ந்து பேசினார்.

47 வருடங்களுக்கு முன்னர் ஒரு கையெழுத்துப் பத்திரிகையில் எழுதியிருந்த '47 வருடங்கள்' என்ற கதை 60 - கால கட்டத்தில் வசந்தம் சஞ்சிகையில் பிரசுரமாகியிருக் கின்றது. அதனை தேடி எடுத்து மீள் பிரசுரமாக இந்நூலில் பிரசுரிப்பதற்கு முற்போக்கு கலை இலக்கிய பேரவைக்கு கே.விஜயன் நன்றி செலுத்தினார்.

ஈழத்து முற்போக்குச் சிறுகதைகள் 251 பக்கங்களைக் கொண்டது. பெறுமதி மிக்க இந்நூலினை கொழும்பு 12, 202 - செட்டியார் தெரு வில் அமைந்துள்ள பூபால சிங்கம் புத்தகசாலையிலும் மற்றும் ஏனைய அதன் கிளை நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.



## இது தாம்லே! யதார்த்தம்

''தமிழர்களுக்கும் ரியலிஷத்துக்கும் ஒட்டுறவே கிடையாது. இப்புடி சதா அலட்டிக்கொள்கிற ஒரு விமாசகர், இன்னிக்கு அவர் மகனையே 'கழுதை கிழுதை'ன்னு ஏசிக் கொண்டே முன்னாலே வந்து நின்னார்''

''அடப்பாவமே! ரொம்ப கறாரான மனுஷனோ! இப்புடி ஊருக்கு ஒருத்தர் இருந்தாலே நம்ம இலக்கியம் கொடி கட்டிப் பறக்கும்''

''நல்ல நெனைப்பையா உமக்கு. நம்ம பேனா புடிக்கிற பிரமாளுக்கு அப்பிடி ஒரு நெனைப்பே கெடையாது''

''அப்பிடிங்கிரியே!''

''அது கெடக்குது. நம்ம ஆளு சமாச்சாரமே வேறே. எந்த எடத்துலே எதைப் பேசனும் என்ற வெவஸ்தையே கெடையாது. அதனாலே வாங்கிக் கட்டிக்குவாரு. இன்னிக்கு பெத்த பிள்ளையே வெவகாரமாக கேட்டுட்டான்''

''அடப்பாவமே!''

''இலக்கியக்காரங்க மத்தியிலே பேசுர நாலு காரசாரமான விசயங்களை அதுட அ. ஆ. ன்னா தெரியாத ஆத்துக்காரி கூட பேசலாமோ?''

''பேசிட்டாரா? அம்மா சள்ளுபுள்ளுன்னு பாஞ்சிருப்பாங்களே! ''

''எந்த நாளும் இதே எழவுதான். அந்த அம்மா வீட்டு வேலை ஆச்சு, அது முடிஞ்சா ரீவி டிராமான்னு காலம் ஓட்டுறவங்க. அவுக கிட்ட போய், இதை ஏன் முழிச்சு முழிச்சு பாக்குற. கொஞ்சமாவது இதுல யதார்த்தம் இருக்கான்னு கத்தோ கத்துன்னு லெக்ஷர் அடிப்பாரு. பாவம் ! அந்த அம்மா. பயத்துல பேந்தப் பேந்த முழிக்கும். இதென்னடா வம்புன்னு ரீவியை மூடிட்டு படுக்கையை விரிச்சு சாஞ்சிடும்''

''அடப்பாவமே!''

''இன்னிக்கு நம்ம விமர்சகர் இல்லாத நேரமா, அந்த அம்மாவும் அவுக வாண்டுப் பயலும் ஒரு நாடகம் பார்த்தின்னு இருந்தாங்க. ஒரு பணக்கார குடும்ப நாடகம். அம்மாவும் அப்பாவும் வயசானவங்க. பொஞ்சாதி புருஷன் அன்பா பேசிக்கிட்டிருக்காங்க. கணவன் சொல்கிறான், 'என்னைப் பார்த்தால் கலியாணம் முடிச்சவன்னு சொல்வாங்க. உன்னைப் பார்த்தால் சொல்ல மாட்டாங்க. நீ பளிச்சின்னு இருக்க. முடிதான் கொஞ்சம் நரைச்சு இருக்கு....' இந்த நேரம் நம்ம விமர்சகர் உள்ளே நொழைஞ்சாரு. கையை இடுப்புலே வச்சுக்கிட்டு நாடகத் தைப் பார்த்தாரு. காட்சி மாறுது. உடனே மனுசன் விழுந்து விழுந்து சிரிச்சாரு. சகதர்மினி நடுநடுங்கிப் போனாள். ஏன் சிரிச்சாருன்னு பயத்தோடு பார்த்தாள். மகன் அப்பாவை எரிச்சலோடு பார்த்தான். ''ஏன்பா சிரிக்குரே? நாடகத்திலே கொமடி சீனா நடக்குது?'' ன்னு கத்தினான்.

என்ன பையன் எகுறுவானோ என கலங்கிப் போன விமர்சகர்,

''ஆமாலே! கொமடிதான். அந்த நாடகத்துல வார அம்மாவை கவனிச்சியா? மொத சீன்லே நரைச்ச தலையோட வந்தாங்க. இந்த சீன்ல கருங்கூந்தலோட வர்ராங்க''

''ஆமா அதுக்கு என்னா இப்போ. நேத்திக்கு கவனிச்சேன். உன் முடி பழுப்பு நெறமாக இருந்துது. இன்னிக்கு கருகருன்னு இருக்கு. அது எப்பிடி?''

''ஹி ஹி ஹி அதுவா கொஞ்சம் டை போட்டேன்''

''ஓஹோ! மூணு நேரம் எங்களுக்கு சாப்பாடு போடவே உனக்க வக்கில்லே. நீ டை போடலாம். பங்களா, காரு அப்புடி இப்புடின்னு இருக்க அந்த அம்மா டை போடப்படாதோ?''

பையன் ஆத்திரமாகவே கேட்டான். விமர்சகர் முழி முழின்னு முழிச்சார்.

''அடேயங்கப்பா! இப்புடியும் ஒரு ரியலிஷம் இருக்கோ!''

PUBLIC LIBRARY
JAFFNA
SPECIAL COLLECTION

## சொற்சிலம்பம் போட்டி இல. 294

சொற்சிலம்பம் 294போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் டிசம்பர் 29ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜனவரி 13 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.292 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 294

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | |
| | ■ | 6 | | | | | ■ |
| 7 | 8 | | | ■ | 9 | | 10 |
| 11 | | | ■ | 12 | | ■ | |
| ■ | | ■ | 13 | | ■ | 14 | |
| 15 | | 16 | | ■ | 17 | | |
| 18 | | | ■ | 19 | | | |
| | ■ | 20 | | | | | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல. 292

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 து | ரு | 2 ம | 3 தி | ■ | 4 க | 5 மு | 6 கு |
| ம் | ■ | 7 தி | ரி | க | டு | க | ம் |
| 8 ப | 9 கு | ப் | பு | ■ | 10 வ | டு | ■ |
| 11 தி | ம் | பு | ■ | 12 மீ | ன் | ■ | 13 க |
| ■ | பி | ■ | 14 பே | தி | ■ | 15 மே | ரு |
| 16 பா | ட | 17 க | ன் | ■ | 18 ஜ | க | ம் |
| 19 க | ல் | வி | ■ | 20 சு | ய | ம் | பு |
| ன் | ■ | 21 தை | ரி | ய | ம் | ■ | லி |

## சொற்சிலம்பம் போட்டி இல.294

**இடமிருந்து வலம்**

1. புருஷனின் துணை.
4. கள்ளம் அறியாத ஆள்.
6. உளத் திருப்தி.
7. ஓர் இராசி.
9. பயன்படாமல் கிடக்கும் நிலம்.
11. உறுதி.
12. கீழ் அல்ல.
13. சத்தம்.
14. பதியின் துணைவி/ வஞ்சனைத் திட்டம்.
15. பிரசன்னம்.
17. கறுப்பு நிறமுடைய.
18. குற்றெழுத்து.
19. பாதுகாப்புச் செய்தல்.
20. கேள்வி(கேட்டல்/ எழுப்புதல்)

**மேலிருந்து கீழ்**

1. ஒன்றின் மதிப்பு.
2. கவரி.
3. நாள்.
4. கன்னத்தில் சாத்துதல்.
5. கூந்தல்.
8. மத்திய வங்கி மக்களிடம் பணத்தைப் பெற்று உறுதி ஆவணமாக இதை வழங்கும்.
10. ஆணியை அறைவது இதனால்.
12. படிப்பதும் எழுதுவதும் இதில்.
13. பிரணவம்/ சம்மதச் சொல்லும் கூட.
14. சாய்தல்.
15. இராமாயணத்தில் கூனி; மகாபாரதத்தில்....?
16. படிப்பறிவுத் துறை.
17. சத்தமிட...
19. தூக்கிச் செல்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 292

1. செல்வி லவீனா ஜீட்ஸ்குமார், 36, பழைய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
2. திருமதி தி. செல்வதுரை, (C/O) எச்.நளினி, இல: 296, டைக்வீதி, திருகோணமலை.
3. ஆர்.குழந்தைவேலு, 42, முகமதியா நகர், மட்கோ, திருகோணமலை.

### பாராட்டுப் பெறுவோர்

1. எஸ்.நடராசாமணி, திருகோணமலை.
2. திருமதி எஸ்.என். மணி, நுவரெலியா.
3. நெல்சன் ஜெயத்துரை, பண்டாரவளை.
4. ஏ.பி.உதுமாலெப்பை, புத்தளம்- 61300.
5. எம்.எம்.நாளிம், வெலிகம.
6. எம்.ஐ.எம்.முன்ஸிப், வெலிகாமம்.
7. சி.இராஜேந்திரா, கொழும்பு -06.
8. திருமதி அஞ்சலா மனுவேல், தெஹிவளை வடக்கு.
9. எஸ்.ஜெலினி பெர்னாண்டோ, பேசாலை.
10. திருமதி ப. இராசையா, முல்லைத்தீவு.
11. கே.பத்மகுமார், மன்னார்.
12. என். தர்மகுலசிங்கம், கொழும்பு- 06.
13. அ. பத்மலோசனா, கொழும்பு-13.
14. எம்.ஏ.அத்தாஸ், மாத்தறை.
15. ஏ.இ.யேசுஜோய், மட்டக்களப்பு.

# குடாநாட்டுச் சந்தை....

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழிக்கப்படுகின்றதா? என்று எவரும் கண்காணிப்பதில்லை. இதனால் பொருள்களைக் கொள்வனவு செய்பவருக்கும் விவசாயிக்கும் இடையில் தகராறுகள் உருவாகின்றன. எனினும் ஏலம் கூறியவர் தரகுப் பணத்துடன் தப்பி விடுகின்றார்.

இந்த நிலைமை பற்றி சந்தைக்குப் பொருள்கள் கொண்டு செல்லும் விவசாயிகளிடம் கேட்டபோது, குறிப்பிட்ட பொருள்களை வியாபாரிகளின் எண்ணத்திற்குக் கழித்துக் கொடுக்காவிட்டால் அவர்கள் கொள்வனவு செய்யமாட்டார்கள். தரகர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து விவசாயியின் சந்தை வாய்ப்பை இழக்கவைத்து விடுகிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணச் சந்தைகளில் இவ்வாறான நிலை இருக்கவில்லை. காரணம் சிலரின் கண்காணிப்பும் செயற்பாடுகளும் சந்தைகளில் காணப்பட்டமையினால் வியாபாரிகளும் சரி, விவசாயிகளும் சரி பிரச்சினை இல்லாமல் தமது நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். ஆனால் இப்போது நிலைமை அவ்வாறு இல்லை. அத்தகைய சூழ்நிலையும் இப்போது சந்தைகளில் இல்லை.

சந்தைக் குத்தகைக்காரர் ஒருவரிடம் இது சம்பந்தமாகக் கலந்துரையாடியபோது, "கூடிய கழிவு வழங்கும் நிலையும், கூறிய விலையை விட பணத்தை வழங்கும் நிலையும் தொடர்கின்றது. விவசாயிகள் எமது கவனத்துக்குக் கொண்டு வந்தால் உரிய விலையைப் பெற்றுக் கொடுக்க முடியும்" எனத் தெரிவித்தார்.

வியாபாரிகள் ஒரு சிலருடன் இது சம்பந்தமாகக் கதைத்தபோது, நாம் கொள்வனவு செய்யும் பொருள்களில் ஒரு பகுதி விலைப்படாது விட்டால் அதன் நட்டத்தையும் நாம் ஏற்கவேண்டி உள்ளது. இதன் காரணமாகக் கழிவு பெறுவதும், விலையைக் குறைத்துக் கொடுப்பதும் நியாயமானது எனத் தெரிவித்தனர்.

விற்பனை விலை என்பது கொள் விலையில் இருந்து நூறு முதல் நூற்றி ஐம்பது வீதம் வரை அதிகரித்துக் காணப்படுகின்றது. இதுபற்றி அவர்களிடம் கேட்டபோது அதற்கு ஒவ்வொரு சாட்டுப் போக்குகளைக் கூறிவருகின்றார்கள்.

இந்தச் சேதம், கழிவு என்பவை வியாபாரிகளின் விலை அதிகரிப்பின் காரணமாகவே ஏற்படுகின்றன. நியாயமான விலைகளில் பொருள்கள் விற்பனை செய்யப்படுமாகவிருந்தால் கொள்வனவாளனின் கொள்வனவும், நுகர்வும் குறிப்பிட்டளவு அதிகரிக்க வாய்ப்புண்டு.

இது கழிவு, சேதம் என்பனவற்றைக் குறைக்கவும் வழி ஏற்படுத்தும். அதிகமான விலையிடல் கொள்வனவைக் கட்டுப்படுத்துவதுடன் மாற்றுப் பொருள்களை நாடவும் வழி வகுக்கும். எனவே விவசாய சம்மேளனங்கள் உண்மையுடனும், நேர்மையுடனும் செயற்பட்டால் வியாபாரிகளைப் புறந்தள்ளமுடியும், தாங்கள் சந்தை விலையைத் தீர்மானிக்கும் சக்தி உள்ளவர்கள் என்பதையும் நிரூபிக்க முடியும்.

பொருள்களைச் சந்தையில் குறிப்பிட்ட விலைக்கு விற்க வேண்டும் என்ற நிலையும் இதன் மூலம் உருவாகும்.

சந்தை வியாபாரிகள் புறந்தள்ளப்படும் போது நுகர்வோர் விவசாயியிடம் நேரடியாகப் பொருளைக் கொள்வனவு செய்யும் நிலைமை ஏற்படும். இந்த நிலையில் விவசாய சம்மேளனங்கள் இதற்கு முகங்கொடுக்கும் வல்லமையைச் சவாலாக எடுத்து மேற்கொள்ளுமாக இருந்தால் விவசாயிக்கு நன்மையும் நுகர்வோனுக்கு இலாபமும் கிடைக்க முடியும் என்பதில் சந்தேகம் இல்லை.

# வீரவன்ஸவின்....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் ஒன்றையும் கூறினார். அதாவது ஜே.வி.பி. இரட்டை வேடம் போடாது. பின்னால் நின்று முதுகில் குத்தாது. எதையும் வெளிப்படையாக முகத்துக்கு முகம் கூறி விடுவோம். வரவு செலவுத் திட்டத்தை ஆரம்பம் முதலே எதிர்த்து வருகின்றோம். கடைசி வரையில் எதிர்ப்போம் என்றும் கூறிவிட்டார்.

இதைக் கேட்டதும் "ஆகா! இவர் அல்லவா அரசியல் தலைவர், இப்படி நேர்மையானவர்கள் தான் இன்றைய அரசியலுக்குத் தேவை" என்று பார்வையாளர்கள் வாய்விட்டுப் புகழ ஆரம்பித்துவிட்டனர்.

நிலைமை இப்படி இருக்க அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க எதிரணி பக்கம் வந்து அமர்ந்தவுடன் ஆளும் தரப்பில் இருந்து ஆறு பேரும், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்கள் மூவரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அல்லாத இரண்டு முஸ்லிம் உறுப்பினர்களும் எதிரணியின் பக்கம் வரத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

அவர்களை வரவேற்க எதிரணியினர் தயாராக நின்றனர். ஆளும் தரப்பினர் முகத்தில் ஈ ஆடவில்லை. வாக்கெடுப்பு நடத்த இன்னும் 30 நிமிடங்களே இருக்கும் போதுதான் பங்குச்சந்தையில் விலை ஏறுவது போல் எம்.பிமாரின் விலை கோடி கோடியாக ஏறியதாம். எஸ்.எம்.எஸ். மூலம் பேரம் பேசப்பட்டதாம்.

அப்போது இவர்களைப் பயமுறுத்திய விடயங்கள் பல.

* ஆளும் கட்சி உறுப்பினராக இருந்த விஜேதாச ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 15 ஆயிரம் கோடி மோசடிகள் தொடர்பான 'கோப்' அறிக்கை.

* இரண்டாவதாக ரவூப் ஹக்கீம் தலைமையிலான கணக்காய்வுக் குழுவின் இடைக்கால அறிக்கை.

வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் இந்த அறிக்கைகள் இரண்டும் போஸ்மோட்டம் செய்யப்படும். பலர் கம்பி எண்ண நேரிடும்.

அரசு கவிழ்ந்து மீண்டும் ஒரு தேர்தல் வந்தால் ஜே.வி.பி. உறுப்பினர்கள் 38 பேர் மீண்டும் நாடாளுமன்றம் வரமுடியாது. 25 பேருக்கும் மேலான ஜே.வி.பி. உறுப்பினர்கள் பென்சன் பெறும் தகுதியை இழந்துவிடுவர். இது ஜே.வி.பி.யினருக்கு ஏற்பட்ட தலையிடி.

அப்படியானால் உயிர்போகும் நிலையில் உள்ள அரசுக்கு ஒட்சிசன் கொடுத்து காப்பாற்றவேண்டும். ஆதரவாக் வாக்களித்தால் ஜே.வி.பி.யினரின் முகத்தில் காறித் துப்பிவிடுவார்கள் நாட்டு மக்கள்.

விமல் வீரவன்ஸவின் குள்ளநரி மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. அதாவது ஆளும் கட்சியில் இருந்து எதிர்க்கட்சியின் பக்கம் வரவிருந்தவர்களுக்கு ஜே.வி.பி. வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது என இரகசியமாக தகவல் அனுப்பிவிட்டார்.

ஜே.வி.பி. வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாவிட்டால் வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்க முடியாது. கடைசிநேரத்தில் ஜே.வி.பி. இப்படிக் காலை வாரிவிட்டதால் எதிரணி பக்கம் வரவிருந்தவர்கள் அப்படியே இருந்து கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் வேதனையுடன் கூறுகின்றனர்.

அதேவேளை, விமல் வீரவன்ஸவின் இந்தத் தன்னிச்சையான முடிவால் ஜே.வி.பி.க்குள்ளும் அதிருப்தியாளர் குழு ஒன்று உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தை சேலை கட்டிய விபசாரி என்று விமர்சித்த விமல் வீரவன்ஸ அதே சேலைக்குள் புகுந்து அரசுக்கு முட்டுக்கொடுத்தது ஏன்? அந்த விபசாரியிடம் இரகசியமாக சுகம் காணவா? மஹிந்த ராஜபக்ஷ சகோதரர் கம்பனியின் பங்காளியாகிவிட்டாரா?

"ஐந்து முதல் பத்து கோடிவரை வாங்கிக் கொண்டு பல்டி அடிக்கின்றனர் என்று கூறிய விமல் வீரவன்ஸ 38 உறுப்பினர்களுக்கும் மொத்தமாக எத்தனை கோடி வாங்கினார்? நாம் நேர்மையானவர்கள், முதுகில் குத்தமாட்டோம் என்று கூறிய விமல் வீரவன்ஸ நம்பியவர்களின் காலை வாரி விட்டு அரசுக்கு ஒட்சிசன் கொடுத்தது ஏன்?" இப்படி மக்கள் கேட்க ஆரம்பித்து விட்டனர்.

இரட்டை வேடம் அம்பலமாகிவிட்டது. மக்கள் இவர்களை ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள் என சாபம் விடுகின்றனர் ஏமாற்றப்பட்ட மக்கள்.

# நகம் கடிக்கும் பழக்கம் நோயின் அறிகுறியா?



**கேள்வி:** பெண், வயது 40- எனக்கு என்னை அறியாமல் சிறுநீர் கசிகின்றது. குந்தி இருந்து வேலை செய்தால், இருமினால், பாரமான பொருட்களை தூக்கினால் சிறுநீர் வெளியாவது அதிகம். இதனால் பொது இடங்களுக்கு போகவோ, கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவோ வெட்கமாகவும் கூச்சமாகவும் இருக்கின்றது. இது தவிர- எனது உள்ளாடைகளில் சிறுநீர் படுவதால் அதிலிருந்து துர்மணம் வீசுவது எனக்குத் தெரிகின்றது. இதனால் - நான் சமுகத்தில் இருந்து ஒதுங்கி வாழ விரும்புகின்றேன். பரிகாரம் கூறவும்.

**பதில்:** முப்பத்தைந்து வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு ஒருவகையில் சிறுநீரகப் பிரச்சினைகள் ஏற்படுவது இயற்கை. உங்களுக்கு ஏற்பட்டுள்ள கோளாறை Urinary incontinence அல்லது சிறுநீர் கட்டுப்பாட்டின்மை என்று குறிப்பிடலாம். இதற்கு சில முக்கிய காரணங்கள் உண்டு. பருத்த தேகக்கட்டு உடையவர்களுக்கும் (Obese), பல குழந்தைகள் பெற்றவர்களுக்கும் அவர்களது Pelvic Floor எனப்படும் இடுப்பு கட்டை அல்லது இடுப்புக் குழியை தாங்கி நிற்கின்ற தசைகள் வலுவிழந்து போவதால், அந்த தசைகளின் அசைவில் நிமிர்ந்து நிலையாக இருக்கின்ற கருப்பை, சிறுநீர்ப்பை, மலக்குடல் என்பவை யோனி வாயில் ஊடாக கீழே இறங்குகின்றன. இவற்றில் தினமும் முக்கி சிறுநீர் கழிக்கும் சிறுநீர்ப்பைதான் அநேகருக்கு முதலில் இறங்குகின்றது. இந்த சிறுநீர்ப்பை இப்படி இறங்கும்போது சிறுநீர்ப்பையிலிருந்து சிறுநீர் வெளியேறு வதைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள தசைப் பகுதி நெகிழ்வுறுகின்றது. இதனால் சிறுநீர் சிறு அழுத்தம் ஏற்படும் போதெல்லாம் வெளியேற சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இதனைத்தான் சிறுநீர் கட்டுப்பாடின்மை எனப்படுகின்றது.

நீங்கள் இந்த நிலைக்கு கூச்சமோ வெட்கமோ படாமல் ஒரு பெண் நோயியல் (Gynaecologist) நிபுணரின் ஆலோசனை பெறுவது அவசியம். அவர் உங்களை முற்றாக பரிசோதித்து உங்களுக்கு ஏற்பட்டுள்ளது சிறுநீர்ப்பை கீழிறங்கலால் (Cystocoele) அல்லது மலக்குடல் கீழிறங்கலால் (Rectocoele) அல்லது கருப்பையின் கீழிறங்கலால் (Uterovaginal Prolapse) சிறுநீர்ப்பை, மலக்குடல் சகலதும் இழுபட்டு கீழிறங்கியதால் இந்த சிறுநீர் கட்டுப்பாடின்மை ஏற்பட்டதா என்பதை கண்டறிவார். உங்களது வயது உங்கள் நோயின் தன்மை எத்தகையது என்பதை எல்லாம் பொறுத்துத்தான் எந்தவிதமான சிகிச்சை மேற்கொள்வது என்பது முடிவெடுக்கப்படவேண்டியது. தனியே சிறுநீர்ப்பை பிரச்சினையால் தான் இது ஏற்பட்டதென்றால் - Sling Operation என்கின்ற வகையில் - சிறுநீர்ப்பையை உயர்த்தி இடுப்புக்குழிப் பகுதி சுவரோடு இணைப்பார்கள். கருப்பை வெளியிறங்கலால் ஏற்பட்டிருந்தால் உங்கள் வயதை யும் கவனத்தில் எடுத்து கருப்பையை அகற்ற ஆலோசனை தருவார்கள்.

**கேள்வி:** பெண், வயது 20. திருமணமாகி தற்பொழுது இரண்டு மாத கர்ப்பமாக உள்ளேன். பிரசவம், பிரசவ வலி என்பவற்றை பற்றி யோசித்தால் பயமாக இருக்கிறது. இன்னும் கொஞ்சக்காலம், கடைசி இரண்டு வருடம் கழித்து கருத்தரித்திருக்கலாமோ என்று கூட இப்போது எண்ணுகிறேன். எனது பெற்றோரும் கணவரின் பெற்றோரும் அருகில் இல்லை. இதனால் அயலவர்கள், நண்பிகள் கூறும் அறிவுரை களைத்தான் கேட்கிறேன். இதனால் எனது பயம் அதிகரித் துள்ளது. எனவே தான் மருத்துவராகிய உங்களிடம் என்போன்ற இளவயது தாய்மார்கள் பெற வேண்டிய அறிவுரையை தாழ்மையுடன் கேட்கிறேன்.

**பதில்:** உங்கள் வயது கொஞ்சம் இளவயதுதான். தாய்மையடைய தகுதியான உடல், உள, உறுப்பு வளர்ச்சிகள் முற்றாக வருவதற்கு 21 வயது ஆகும் என்பது மருத்துவர்களின் அபிப்பிராயம் என்றாலும் நீங்கள் இப்பொழுது தாய்மையடைந்து விட்டீர்கள் என்று அஞ்சாதீர்கள். பெற்றோர்கள் அருகிலிருந்தால் அவர்கள் தரும் தைரியத்தில் நீங்கள் தெம்பாக இருப்பீர்கள். பிரசவம், பிரசவ வலி என்பது- எந்தப் பெண்ணுக்குமே நடைபெறக்கூடிய மிகச் சாதாரணமான, மகிழ்ச்சியான காரியம். ஆனால், இது பற்றிய மிகுந்த பயம், சிக்கல்களை உருவாக்கும் என்பதை மனதிற் கொண்டு எந்த கர்ப்பிணிப் பெண்ணும் பின்பற்ற வேண்டிய கடமைகள், முறைகளை சுருக்கமாக தருகிறேன். பின்பற்றவும்.

கர்ப்பம் அடைந்தபின் மகிழ்வாகவும், அமைதியாகவும் இருங்கள். அப்பொழுது தான் பிறக்கும் குழந்தையும் சந்தோஷமா கவும் அமைதியாகவும் இருக்கும்.

இரண்டு மாதத்திலிருந்து ஒரு வைத் தியரின் கவனிப்பில் நீங்கள் இருக்க வேண்டியது அவசியம். முதல் ஆறு மாதங்கள் வரை மாதத்துக்கு ஒரு தடவை யும், 7ஆவது , 8 ஆவது மாதங்களில் மாதத்துக்கு இரு தடவையும் , 9ஆவது மாதம் வாரத்துக்கு ஒரு தடவையும் வைத்தியரிடம் அவசியம் பரிசோதனை செய்து கொள்ளுங்கள்.

உங்கள் வைத்தியரை நம்புங்கள். அவர் கூறுவதை பின்பற்றுங்கள். சுய மருத்துவம் செய்து கொள்ளாதீர்கள்.

ஆரோக்கியமான குழந்தை பிறக்க சரியான போஷாக்கான உணவை உண் ணுங்கள். பால், தயிர், முட்டை, கீரை, பருப்பு வகைகள், இறைச்சி, மீன் என்ப வற்றை உணவில் சேர்த்து கொள்ளுங்கள்.

பொதுவாகவே உடல் குலுங்கும் படியான பிரயாணங்களை தவிருங்கள். முதல் மூன்று மாதங்களிலும், கடைசி இரண்டு மாதங்களிலும் தொலைதூரப் பயணங்கள், வாகனங்கள் ஓட்டுதல், கடினமான வேலைகள், உடலுறவு கொள்ளுதல் என்பவற்றை தவிருங்கள்.

உடைகளை இறுக்கமில்லாமல் அணியுங்கள். குதியுயர்ந்த பாதணிகளை தவிருங்கள்.

இரவில் 8 - 10 மணி நேரமும், பிற்பகலில் 1 மணி நேரமும் போதிய ஓய்வு எடுக்க வேண்டும். படுக்கும் போது மல்லாந்து படுக்காமல் பக்க வாட்டில் படுக்கவும்.

ஏற்புவலி ஊசி இரு தடவை களாவது போட்டுக் கொள்ள வேண்டும்.

மேற் கூறிய பொது வான விடயங் களை கடைப் பிடித்து மருத்துவரின் ஆலோசனையையும் பெற்றுவந்தால் உங்கள் பிரசவம் சுகமானதாக இருக்கும்.





**கேள்வி:** பெண், வயது 20. எனக்கு கிட்டப்பார்வை - Short Sight. தற் பொழுது Contact lens உபயோகிக் கிறேன். சமீபத்தில் Leser சிகிச்சை மூலம்- Contaet lens உபயோகிக்காமல் பார்வைக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும் என்று எனது சிநேகிதி கூறினார். இந்த சிகிச்சை முறை இப்பொழுது இலங்கையிலே கிடைப்பதாகவும் கூறினார். இந்த Leser சிகிச்கை முறை பற்றிய விளக்கம் தருவீர்களா?

**பதில்:** Leser (லேசர்) என்கின்ற மிக அதிர்வு கொண்ட கதிர்கள் மூலம் செய்யப்படும் இந்த கண் சிகிச்சையின் சரியான பெயர் (Lesik) லேசிக் சிகிச்சை. இந்த குறுகிய பெயரை விரிவு படுத்தினால் இந்த சிகிச்சையின் தொழில் முறை விளங்கும். Leser Assisted in Situ Keratomylysis அதாவது லேசர் கதிர்கொண்டு கண்ணில் உள்ள கருவிழியின் மேலுள்ள மெல்லிய திசுவை பிரித்து சிகிச்சை அளிப்பது.

கண்ணின் கருவிழியின் வளைவு சில வேளைகளில் ஏற்படுத்தும் கோளாறுகளினால், கிட்டப்பார்வை, தூரப்பார்வை, Astigmatism என்கின்ற உருச்சிதைவுப் பார்வை என்ற கோளாறுகள் ஏற்படுகின்றன. இவற்றை சரிப்படுத்த கருவிழியின் மேலேயுள்ள திசுவை மெலிதாக சீவி எடுத்து கண்ணின் வளைவு சீர்படுத்தப்படுகிறது. இதற்கு லேசர் கதிர் கத்தி Microtome உபயோகிக்கப்படுகின்றது. சுமார் பதினைந்து நிமிடம் நடக்கும் இந்த சிகிச்சைக்கு குறைந்தது ஒரு லட்சம் ரூபா செலவாகின்றது.

**கேள்வி:** எனக்கு ஒரு வித்தியாசமான பிரச்சினை. நான் ஒரு புது வீடு கட்டுகிறேன். இந்த வீட்டுக்கு இரண்டு மல கூடங்கள் உண்டு. வீட்டினுள் இருக்கும் இரண்டு மல கூடங்களிலும் Western Type Com- mode என்கின்ற உட்கார்ந்து மலம் கழிக்கக் கூடிய உபகரணங்களை பொருத்த எண்ணியிருந்தேன். சமீபத்தில் ஊரில் இருந்து வந்த எனது தந்தையார் ஒரு மலசலகூடத்துக்கு Squatting Plate என்று குந்தியிருந்து கழிக்கக்கூடிய உபகரணங்களை பொருத்தும்படி வற்புறுத்துகின்றார். சித்த வைத்தியரான எனது தகப்பனார் குந்தியிருந்து மலம் கழிப்பதால் பல நோய்களை வராமல் தடுக்கலாம் என்ற காரணத்தை அடித்துச் சொல்லி வற்புறுத்துகின்றார். எனது தந்தையார் சொல்லும் காரணத்துக்கு ஏதாவது மருத்துவ ஆதாரங்கள் இருப்பது உண்மையா?

**பதில்:** மலம் கழிப்பதற்கு Com- mode முறையை பலரும் விரும்புகிறார் கள். உட்கார்ந்த நிலையில் பேப்பரோ, நூலோ படித்துக் கொண்டு மலம் கழிக் கும் சௌகரியம் இந்த மேல்நாட்டு முறை மையில் உண்டு. இது தவிர மூட்டு வாதம் (Arthritis) போன்ற முழங்காலில் வலியுள்ளவர்களுக்கு இந்த முறைமை (System) மிகமிக சௌகரியமானது. உட் கார்ந்து இருக்கும் போது மலம் கழிக்கின் றோம் என்ற எண்ணமும் இராது.

அதே வேளையில் இப்படியான முறைமைகளில் உட்காரும்போது தொடைப்பகுதியின் அடிப்பகுதியை ஈரப்படுத்த சந்தர்ப்பங்கள் உண்டு. இதனால் பங்கசு, பற்றீரியா தொற்றுக்கள் ஏற்பட வாய்ப் புண்டு என்று அருவருப்பவர் களும் உண்டு.

உங்கள் தந்தையாரின் அடிமனதில் ஏற்பட்டுள்ள சுகாதாரம் பற்றிய கருத்துக்கள், அருவருப்பு மனப்பான்மை என்பவை காரணமாக அவர் இந்த முறைமையை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். இதற்காக உங்கள் முன்னைய திட்டத்தை மாற்றினால் தந்தையார் ஊருக்கு போன பின்னர் மற்றவர்கள் இதனை உபயோகிப்பார்களா என்பது சந்தேகம். அப்படி Western Type க்கு திரும்பவும் மாற்ற பெரும் செலவும் ஏற்படும். தந்தையார் அடிக்கடி வருபவர் என்றால் வேறு மாற்றுவழி உங்களுக்கு இல்லை என்றே தோன்றுகிறது. சில வேளைகளில் உங்கள் கழிப்பறையை சுத்தமாக வைத்திருக்கும் பாணியை தந்தை நேரில் கண்டறிந்தால் அவரும் இந்த முறைமையை உபயோகிக்க கூச்சப்படமாட்டார்.

குந்தியிருந்து மலம் கழிப்பதால் பல நோய்கள் வருவதில்லை என்பதற்கு எந்தவித மருத்துவ ஆதாரமும் இல்லை. ஆனால், எமது முன்னோர்- குந்தியிருந்து மலம் கழிக்கும்போது- குடலிறக்கம் ஏற்படக்கூடிய Hernial Sites ஏற்படும் தொடைக்கும் வயிற்றுக்கும் இடையே உள்ள Inguina Region மடித்த தொடைகளின் இடுக்கில் அகப்படுவதால் - மலம் கழிக்க நாம் முக்கும்போது - ஏற்படும் அழுத்தத்தி னால் குடலிறக்கம் ஏற்படுவது தவிர்க் கப்படும் என்று தர்க்க ரீதியாக கூறும் சித்தவைத்தியர்களை நான் அறிந்துள் ளேன். ஆனால், இதற்கு சரியான ஆதா ரங்கள் இல்லை. மேலும் உட்கார்ந்தி ருந்து மலம் கழிப்பவர்கள் மலங்கழித்த பின்னரும் பத்திரிகை நூல்களை நிறைய நேரம் படித்துக்கொண்டி ருப்பதால் மூல நோய் ஏற்படும் என்பதிலும் ஆதாரங்கள் இல்லை.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு-14.

# கவிதைப் புனல்

தயாரிப்பு: யூ.எல்.எம்.அஸ்மினா

## மலரட்டும் புதுவருடம்

புதுவருடம் வருதல்லோ
பலவிதத்தில் கொண்டாட்டம்
தென்னிலங்கை முழுவதுமே
தெவிட்டாத சந்தோசம்

பலவருடப் போராட்டம்
முடிவில்லா திண்டாட்டம்
வடகிழக்கில் வாழ்வோர்க்கு
இல்லையடா சந்தோசம்

தினந்தோறும் கொலை,கொள்ளை
கற்பழிப்பு நடக்குதங்கே
வீதியெலாம் விளக்கேற்றி
களியாட்டம் நடக்குதிங்கே

பல்கலைகழகத்தில்
பகிடிவதை அது முடிய
'வெல்கம் 'பார்ட்டி' வைத்து
மாணவர்க்கு வரவேற்பு

அங்கிது தலைகீழாகி
ஆள்கடத்தல் கைதுகளால்
மாணவரின் வெளியேற்றம்
அமோகமாய் நடக்குதப்பா

புதுவருட தள்ளுபடி
மக்கள் கூட்டம் மோதுதடி
எங்களூரில் கூலிப்படை
வெளியே வர அள்ளுதடி

ஒருநாட்டில் இருவிதமாய்
மக்களுக்குப் பணிசெய்யும்
மகத்தான ஆட்சிமிதில்
அவலங்கள் கோடிகோடி

துன்பங்கள் துயரங்கள்
சூழ்ந்திட்ட நம்வாழ்வை
மீட்டெடுக்க ஒன்றாகி
முடிவொன்று கண்டிடுவோம்

இழந்தவைகள் போகட்டும்
நடப்பதெல்லாம் நன்மைக்கே
நாளைவரும் புதுவருடம்
நமக்கென்றே மலரட்டும்

■ யாழ்பாடினி
பேராதனை பல்கலைக்கழகம்.

## நினைவைத் தேடி

எதற்காக
என்பிறந்த நாளை
எழுதிக்கேட்டாய்?-நான்
இறக்கும் நாளை
எழுதுவதற்கா?
ஒன்றும் மட்டும் உனக்கு
உணர்த்தவிரும்புகிறேன்
எனக்கு இறப்பே இல்லை
உன் இதயத்தில்
இருக்கும்வரை
நீ எந்த ஊர் சென்றாலும்
என் சொந்த ஊர்
உன் இதயம்தான்
நான் உணவைத் தேடி
அலையவில்லை
உன் நினைவுகளைத்
தேடியே...

■ அருண்
யாழ்.பல்கலைக்கழகம்.

## உணர்வுகள் - ஏ.இக்ரிஸ்ரா - 38

# கலைச் சேவை செய்துவரும் நாவலர்! கவித்தாயின் புகழ் பரப்பும் பாவலர்!!

■ கவிஞர் கலைவாதி கலீல்

வட மாகாணம், மன்னார் மாவட்டம், வன்னி தேர்தல் தொகுதியில் 'மன்னார்' கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 'மதாறு முஹைதீன் முஹம்மது கலீல்' அவர்கள் தற்போது பாணந்துறையில் வசித்து வருகின்றார். 'கலைவாதி கலீல்' என்னும் பெயரில் பிரபலமான இவர் ஒரு பத்திரிகையாளரும், விமர்சகரும், நடிகரும், எழுத்தாளரும், கவிஞரும், கவின் கலைப்பாட விரிவுரையாளரும், பேச்சாளரும் ஆவார்.

மன்னார் 'குடியிருப்பில்' புலவர் பரம்பரையைச் சேர்ந்த மதாறு முஹைதீன், மீரா உம்மா தம்பதியினரின் புதல்வராக 1943ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ஆம் திகதி பிறந்த கலீலின் குடும்பமே ஒரு கலைக்குடும்பமாகும். புகழ்பெற்ற ஒரு தமிழறிஞர்; வித்துவான் எம்.ஏ.ஹுமான் இவரின் மூத்த சகோதரர் ஆவார்.

மன்னார் அல்-அஸ்ஹர் மகாவித்தியாலயம், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, பலாலி விசேட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றின் பழைய மாணவரான கலீல் இலங்கை கல்வி நிர்வாக சேவை (Srilanka Educational Administrative) அதிகாரியுமாவார். தொழில் ரீதியாக - 1963இல் உதவி ஆசிரியராகத் தனது பணியை மன்னார் மறிச்சுக்கட்டியில் ஆரம்பித்த கலைவாதி கலீல், படிப்படியாக முன்னேறி பயிற்றப்பட்ட ஆசிரியராகவும், அதிபராகவும் நாட்டின் பல பாகங்களிலும் பணியாற்றியுள்ளார். இறுதியாக தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரியில் 'உபபீடாதிபதி' யாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றார். இவரின் ஆசிரியப் பணி 40 வருடங்களுக்கும் மேலானதாகும்.

1956ஆம் ஆண்டில் கண்டிக்குளி சோமசேகரனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'லட்டு' சிறுவர் மாசிகையில் 'மறைந்த இருள்' எனும் இவரின் கன்னிச் சிறுகதை பிரசுரமானது. அதிலிருந்து இன்றுவரை சுமார் 50 சிறுகதைகளையும், 500 கவிதைகளையும், 400க்கு மேற்பட்ட கட்டுரை, விமர்சனம் உட்பட பல்துறை ஆக்கங்களையும் எழுதியுள்ளார். இவரின் ஆக்கங்கள் தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இடம்பெற்றுள்ளன.

கலைவாதி ஒரு பிரபல ஓவியராவார். ஓவியக்கலையை முறைப்படி பயின்றவர். ஓவியம், சிற்பம், அறபு எழுத்தணி, மரபு மற்றும் வர்த்தக ரீதியான ஓவியங்களை வரைவதில் கைதேர்ந்தவர். ''போர்ரைட்'' ஓவியங்களும் வரைவார். பேனர்கள் [பதாகைகள்], சுவரொட்டிகள், போஸ்டர்கள் வரைவதில் திறமைமிக்கவர். அழகிய தலைப்பெழுத்துக்கள் வரையக்கூடியவர். ஏராளமான நூல்கள், சிறப்புமலர்கள் போன்றவற்றுக்கு முகப்போவியங்களும் வரைந்திருக்கின்றார். அரச பாடநூல்களும் இவரது ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. பல சித்திர, சிற்ப, கைப்பணிக் கண்காட்சிகளை இலங்கையின் பல்திசைகளிலும் நடத்தியுள்ளார்.

ஓவியத்துறையைப் போலவே பத்திரிகைத் துறையிலும் இவர் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றார். அந்த நாட்களில் கண்டியிலிருந்து வெளிவந்த செய்தி, யாழ். ஈழநாடு, தினபதி, தந்தி, தினகரன் போன்ற பத்திரிகைகளில் நிருபராகக் கடமையாற்றியிருக்கின்றார். குயிலோசை, முகில், கலைக்கடல், மக்கள் போன்ற பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியிருக்கின்றார். ஈழநாடு, பாமிஸ் மாசிகை, சிரித்திரன், தினகரன், நவமணி, புத்தொளி போன்ற பத்திரிகைகளில் பத்தி எழுத்தாளராகவும், முழுப் பக்கப் பொறுப்பாளராகவும் பணிபுரிந்திருக்கின்றார்.

கலைவாதி கலீல் அவர்கள் கடந்த முப்பத்தைந்து வருடங்களாக வானொலியோடு தொடர்பு வைத்திருக்கின்றார். வானொலியில் பல தொடர் நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றார். அவற்றுள் சில பிரபல்யம் பெற்றன. இலக்கிய மஞ்சரி, சதுரச் சங்கமம், இலக்கியக் களஞ்சியம் ஆகியன இவரால் நடத்தப்பட்ட ஜனரஞ்சக நிகழ்ச்சிகளாகும். மேலும் நூல் உலா, பிஞ்சு மனம் [கதை சொல்லுதல்] போன்ற நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டு குரல் கொடுத்துள்ளார். மாதர் மஜ்லிஸ் மகளிருக்கான நிகழ்ச்சியிலும் இவர் ஒரு தொடர் நாடகம் எழுதியிருப்பதோடு அதில் ஒரு பாத்திரத்தில் நடித்தும் உள்ளார்.

நூற்றுக்கணக்கான கவியரங்குகளிலும், கருத்தரங்குகளிலும் பங்குபற்றியுள்ளதோடு தலைமை வகித்துமுள்ளார். ஏராளமான நாடகங்களும், உரைச் சித்திரங்களும் எழுதியிருப்பதோடு அவற்றுக்குக் குரல் கொடுத்துமுள்ளார். நோன்பு, ஹஜ், மீலாத் போன்ற தினங்களில் இடம்பெறும் விசேட கவியரங்குகளில் பெரும்பாலும் தலைமைக் கவியாகப் பொறுப்பேற்றிருக்கின்றார். தொலைக்காட்சிகளில் பல கவியரங்குகளில் இவர் பங்கேற்றுள்ளார். அதேநேரம் இவரின் சில பேட்டிகளும் தொலைக்காட்சி சேவைகளில் இடம்பெற்றுள்ளன.

கலைவாதி கலீலின் இலக்கியப் பயணத்தில் இதுவரை ஐந்து நூல்கள் வெளிவந்துள்ளன.

1. ஒரு வெள்ளி ரூபாய் [சிறுகதைத் தொகுதி]
2. உலகை மாற்றிய உத்தமர் [இயல், இசைச் சித்திரம்]
3. கருவறையிலிருந்து கல்லறைக்கு [புதுக் கவிதைகள்]
4. றோணியோக்கள் வாழுமா? [ஆய்வு நூல்]
5. ஓ பலஸ்தீனமே! [கவிதைத் தொகுதி]

தினகரன் நாளிதழ்களில் அறுபது நாட்களாக பிரசுரமான ''எங்கிருந்தோ ஜீவன்'' என்ற தொடர் நவீனம் மிக விரைவில் வெளிவரவுள்ளது. இவர் 'புரட்சிக் கவிஞன்கே', 'மன்னிநகர்க் கலீல்', 'சர்தார்', 'புரட்சிதாசன்', 'மன்னார் மைந்தன்', 'மன்னாரான்' போன்ற புனைபெயர்களிலும் இவர் படைப்புக்கள் வெளிவந்துள்ளன. சுமார் 25 வருடங்களுக்கு முன்பு வெளிவந்த ''இன்ஸான் பத்திரிகையின் பண்ணையில் வளர்ந்தேன்'' என்று கூறிக்கொள்வதில் பெருமை அடையும் இவர் இதுவரை பெற்ற விருதுகள் பின்வருமாறு:

1. கலைவாதி -- மன்னார் மக்கள் வழங்கியது.
2. தீந்தமிழ்ச் செல்வர் - அட்டாளைச்சேனை நூல்நிலையம் 1985இல் வழங்கியது.
3. பல்கலைக்குரிசில் - அடம்பன் கலைவிழாவில் [மன்னார்] வழங்கப்பட்டது.
4. தாஜுல் உலூம் - முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் வழங்கப்பட்டது [1991]
5. கலாபூஷணம் - கலை கலாசார அமைச்சு [1995]

மன்னார் முற்போக்கு எழுத்தாளர் சங்கம், மன்னார் வாசகர் வட்டம் ஆகியவற்றில் தலைவராகவும், அகில இலங்கை சித்திர ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணி ஆகியவற்றின் செயலாளராகவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கை கலைக்கழக தேசிய நாடகக்குழு ஆகியவற்றின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றி கலைச்சேவைகள் செய்துவரும் இவரின் முகவரி:

Kalaiwathi Kaleel
148, Polkotuwa Road,
Pinwela,
Pananthura.

## ஊரவரும் உபசரிப்பார் உன்னோடு அவர் சிரிப்பார்

...போடு வாழ்ந்தவளும் உத்தி யோகம்
கைநழுவிப் போனதனால் கவலை தந்தாள்!
பெற்றெடுத்த மழலைகளும் முன்னர் போல
பிரியமுடன் கவனிக்க மறந்து போனார்!
நட்புக்கு இலக்கணமாய் வாழ்ந்த நண்பர்
நலம்கேட்கும் நிலைமறந்து தூரம் போனார்!
சுற்றமென உள்ளவரும் காணி, தோட்டம்
சுவீகரிக்கும் ஆசையினால் உயிரெடுத்தார் ..!

'தலைநிமிர்ந்து நடந்தவூர் தனிலே நானும்
தவழுகின்ற நிலைமைவர இடம்பெயர்ந்தேன்!'
நிலைகுலைந்து நிம்மதியும் தொலைந்து போக,
'நெஞ்சுநோய் அழுத்தங்கள்' நெருங்கி வாட்ட
'இலவசத்து மருந்தகத்தில் தங்கி யுள்ளேன்;'
- இவ்வுடலை விட்டுயிரும் பிரியும் நாளை-
விழுங்கிவிடு; ஆண்டவனே என்றே நித்தம்
வழிபட்டும் அதுஏனோ நடக்கவில்லை?

தற்கொலையால் உயிர்தனையே மாய்த்துக் கொள்ளும்
தருணத்தைப் பார்க்கிறேன்! தங்க த்தில-
மற்றவர்க்குப் பாரமென்று வாழும் வாழ்வால்
மதிப்பில்லை - சிறப்பில்லை என்றே தேர்ந்தேன்!
பெற்றெடுத்த பிள்ளைகளும் உதறித்தள்ள
பிரியமுடன் வசித்தவளும் காறித்துப்ப
மற்றவர்கள் கண்டென்னைக் கேலிபண்ணி
மதிப்பீடு செய்யும்நிலை எனக்கு வேண்டாம்!

சென்னியிலே கனமிருந்தும் கவிஞ னென்னும்
சிறப்பிருந்தும் அவையென்ன சோறாபோடும்?
என்கையில் காசுபணம் இருந்தால்தானே
என்னோடு இவ்வுலகம் உறவுகொள்ளும்!
பொன்நகைகள், பொருள்பண்டம், பூமி,வீடு
போடியார் எனும்பட்டம் இருந்தா லன்றோ
'அன்பாக ஊரவரும் உபசரிப்பார்
அயலிருந்து நித்தமுமே அவர்சிரிப்பார்'

■ கவிஞர் அ.கௌரிதாசன்

## பெண்மை

அடிநெஞ்சில் நின்றிருந்தாய் மானாய்!-அடியே
அத்தனையும் நீமறந்து போனாய்...!
வெடிநெஞ்சில் பட்டவன்போ லானேன்!-கொடும்
வெந்தழலில் நீறாகிப் போனேன்....!

சில்லென்ற தென்றல்வரும் காலை!-நீ
சிரிப்புதிர்த்து பள்ளிசெல்லும் வேளை!
வள்ளென்று நாய்குரைக்கும் நேரம்!-நான்
வாழ்ந்திருப்பேன் உன்நினைவின் ஓரம்!

வேலிக்கு மேலாலெட்டிப் பார்ப்பாய்!-என்
வேதனையை புன்னகையால் தீர்ப்பாய்!
கேலிபலர் எனைச்செய்த போதும்!-அடி
கேள்கிளியே! உன்நினைவே மோதும்!

காண்பவரை மயங்கவைக்கும் அழகி!-நீ
காதல்கடி தங்கள்மூலம் பழகி!
'நீயின்றிநான் வாழேன்' என்றாய்!-பின்
தீயின்மேல் எனைவீசிக் கொன்றாய்!

தாய்தந்தை பேசியதை கேட்டாய்!-நீ
தாங்கிநின்ற மண்குடத்தை போட்டாய்!
வாய்மறைக்கச் சொல்லியது சாட்டாய்!-உன்
வார்த்தைகளை புரிந்தேன்ரொம்ப 'லேட்டாய்!'

கடற்கரையில் கைகோர்த்து நடந்தோம்!-கால்
நூற்றாண்டை கால்நடையில் கடந்தோம்!-எம்
உடல்களுறவை காணாததும் உண்மை!-அதை
உணர்த்திடுதா கணவனுக்குன் பெண்மை...?

■ பொத்துவில் அஸ்மின் உதுமாலெவ்வை

## குறிஞ்சித் தென்னவன்

■ கவிஞர் ஜி.எஸ்.காசிமி

அருக்கன் போய் மேற்கு வெற்பை
அணுகினான்; திரும்பிக் கீழை
பருவதம் பார்ப்பு; எங்கும்
பொழிவுதான்; இயற்கைக் கோலம்
உருக்கிப் பொற் கதிரை வார்ப்பு
அணிமழை அடுக்க மீது!
திருதரும் மாலை; கொட்டக்
கலையூரில் நிகழ்ச்சி; மகிழ்ச்சி!

வெள்ளம்போல் மக்கள் கூட்டம்
விழாவினில் ; மேடை மீது
கொள்ளைகொள் விருந்து; கோல
'குறிஞ்சி'யின் ஆடல், பாடல்!
அள்ளும்நல் லுரைகள்; கூத்து
அணிகூட்டும் நாட்டியங்கள்
உள்ளத்தில் களிப்பு; குறிஞ்சி
தென்னவா நின்னைக் கண்டு!

குவிந்தன கைகள் நின்னைக்
கண்டதும் முதலில்; நல்ல
கவிஞன் நீ! கவிதைக் கட்டுக்
காவத்தை வெல்லும்; கேட்டால்
செவிக்கு நல் விருந்து; மருந்தும்
சிந்தைக்கு மருந்து; நீயும்
புவியினில் குறிஞ்சி மண்ணில்
பிறவிநற் கவிஞன் உண்மை!

அருகினில் அமர்ந்தேன்; பேசி
அகமிக மகிழ்ந்தோம்; பின்னர்
நெருங்கிய நட்பு; விழாக்கள்
நட்பினை வளர்ப்பு; பங்கு
இருவரும் விழாக்கள் வந்தால்
கருத்தினை விள்வோம்; நோய்கள்
வருத்தின நின்னை; இறப்பு!
வாழ்வினில் இறப்பு ஏனோ?!

## அவலக் குரல்

விளம்பரப் பலகையில் ஒரு பெண்
விபச்சார விடுதியில்
இன்னொரு பெண்
சினிமாத் தட்டியில் ஒரு பெண்
சீதனம் இல்லாமல் இன்னொரு பெண்
புத்தகக் கடையில் ஒரு பெண்
மசாஜ் கடையில் இன்னொரு பெண்
அட்டைப்படத்தில் ஒரு பெண்
அடுப்பங் கரையில் இன்னொரு பெண்
வாழ்க்கையே சுமையென ஒரு பெண்
வயிற்றில் சுமையுடன் இன்னொரு பெண்
தூக்குக் கயிறோடு ஒரு பெண்
தூங்க முடியாமல் இன்னொரு பெண்
கணவனை இழந்து ஒரு பெண்
கனவுகளோடு இன்னொரு பெண்
அகதியாய் ஒரு பெண்
அனாதையாய் இன்னொரு பெண்
காணாமல் போனதாய் ஒரு பெண்
காதல் சங்கடத்தில் இன்னொரு பெண்
இத்தனை இத்தனை அவலமாய்
இந்த உலகத்தில் எத்தனை எத்தனை
இளம் பெண்கள்- தவிக்கின்றனர்

■ நெடுந்தீவு வி.முகிலன்

# சிறுவர் பக்கம்

## கூடு கட்டப் பழகு!

செண்பக நதிக்கரையோரம் ஒரு மாமரம் இருந்தது. அம்மரத்தில் ஒரு சிட்டுக்குருவி ஜோடி கூடு கட்டி வசித்தது. கூட்டில் இருந்த குஞ்சுகள் தனது பெற்றோர்கள் சற்றுத் தள்ளி புதிய கூடு அமைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தன.

ஒருநாள் வானம் இருண்டு மழை வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அப்போது எங்கிருந்தோ ஒரு புறா ஜோடி அம்மரத்தில் தஞ்சம் புகுந்தது. மின்னல் மற்றும் இடியோசை கேட்டு புறாக்கள் நடுங்க ஆரம்பித்தன.



''வீட்டைவிட்டு இவ்வளவு தூரம் பறந்துவந்துவிட்டோமே. இப்போ வானிலையும் ரொம்ப மோசமாக இருக்கிறது. அவ்வளவு தூரம் திரும்பிப் போறதும் கஷ்டம். இப்போ என்ன செய்வது?'' புறா ஜோடி கவலைப்பட்டன.

கூட்டில் இளைப்பாறியபடி புறாக்களின் பதட்டத்தை கவனித்தது, ஆண் சிட்டுக்குருவி. புறாக்களின் நிலை அதற்குப் பரிதாபத்தை ஏற்படுத்தியது.

உடனே அது புறாக்களுக்கு ஆறுதல் சொன்னபடி, ''பயப்படாதே சகோதரி. நீ எங்கேயும் போக வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் நிறைய இலை தழைகளை சேமித்து வைத்திருக்கிறோம். வா.. நாம் எல்லோரும் சேர்ந்து கூடு கட்டுவோம்'' என்று ஆறுதலாய் சொன்னது.

''எங்களுக்கு கூடு கட்டத் தெரியாதே. நாங்கள் வீட்டின் வெண்டிலேட்டர் மற்றும் மரப்பொந்துகளில் வசிக்க மட்டுமே கற்றுக் கொண்டுள்ளோம்'' என விரக்தியுடன் சொன்னது பெண் புறா.

''பரவாயில்லை சகோதரி. நானும் என் கணவரும் சேர்ந்தே உனக்குக் கூடு கட்டித் தருகிறோம். அப்புறம் நீங்களே கூடு கட்ட கற்றுக்கொள்றுங்கள்'' என்றது

பிறகு குருவி ஜோடி சுறுசுறுப்பாகச் செயற்பட்டு ஒரு கூட்டை அமைத்தன. இதைக்கண்ட பெண் புறா மிகவும் மகிழ்ச்சி அடைந்தது. பிறகு புறா ஜோடிகள் பறந்து போய் கூட்டுக்குள் நுழைந்தன.

அன்றிரவு பெண்புறா கூட்டில் முட்டையிட்டது. நாட்கள் நகர்ந்தன. கூட்டிலிருந்து குஞ்சுகள் வெளிவந்தன. சிட்டுக்குருவிகள் பல தடவை புறாக்களிடம் கூடு கட்ட கற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தி வந்தன. ஆனால் புறாக்களோ ''குட்ர கூ.. '' என்று சொல்லி தட்டிக் கழித்தன.

புறாக் குஞ்சுகள் பெரிதாக வளரத் தொடங்கின. இதனால் கூட்டில் இட நெருக்கடி ஏற்பட்டது. புறாக்கள் என்ன செய்வது என்று தெரியாமல் முழித்தன.

புறாக்களின் சோகத்தைக் கண்ட பெண் சிட்டுக் குருவியின் மனம் மீண்டும் இளகியது. உதவி செய்யும்படி தனது கணவருக்கு சிபார்சும் செய்தது. மனைவியின் தொடர்ந்த வற்புறுத்தலால் மீண்டும் இரண்டாவது கூடு கட்டுவதற்குத் தயாரானது ஆண் குருவி. கூடு தயாரானதைக் கண்ட புறா ஜோடி மகிழ்ச்சி அடைந்தது.

பெண் குருவி பொறுமையாக பெண் புறாவிடம் ''இப்போதாவது கூடு கட்டக் கற்றுக்கொள்... இல்லை என்றால் உனக்கு மறுபடியும் கஷ்டம்தான்'' என்று அறிவுறுத்தியது.

ஆனால் சோம்பேறித்தனத்துக்கு அடிமையான பெண் புறா, அதன் அறிவுரையை லட்சியம் செய்யவே இல்லை. ''ஒவ்வொரு துணுக்கை எடுத்து, கூடு கட்ட யாரால் முடியும்? இவ்வளவு கஷ்டப்படுவதற்கு மரப் பொந்தில் வசிப்பது எவ்வளவோ மேல். பிள்ளைகள் இன்னும் கொஞ்ச நாளில் நல்லா பறக்க ஆரம்பிச்சுடுவாங்க. அப்புறம் நாங்க கிளம்பி வேற இடத்துக்கு போயிடுவோம்'' என்றது அலட்சியத்துடன்.


சிட்டுக்குருவி இதைக்கேட்டு நொந்து போனது. 'இனிமேல் எந்தவொரு முட்டாள் பறவைக்கும் ஆலோசனையோ, அறிவுரையோ சொல்லவோ கூடாது' என்று தீர்மானித்தது.

இந்த அலட்சியத்தின் விளைவாக, புறாக்களுக்கு கூடு கட்டும் திறமை கைவராமலே போய்விட்டது. அதனால்தான் எப்போதும் அவை வசிப்பிடத்துக்காக மரப்பொந்துகளையும், பாழடைந்த கட்டடங்களையும் தேடிக் கொண்டிருக்கின்றன. ❋

## தெரிஞ்சுக்கலாமா?



- இசைக்கருவிகளின் ராணி என வர்ணிக்கப்படுவது?
  வயலின்
- மிகப்பெரிய இராணுவத்தை கொண்ட நாடு?
  சீனா
- செஞ்சிலுவைச் சின்னத்தை தேசிய கொடியில் கொண்டுள்ள நாடு?
  சுவிற்சர்லாந்து.
- நாணயத்தில் முதன்முதலாக தனது உருவத்தை பொறித்துக் கொண்ட மாவீரன் யார்?
  அலெக்சாண்டர்.
- அஞ்சல் அட்டையை அறிமுகம் செய்து வைத்த நாடு எது?
  அவுஸ்திரேலியா.
- முதன் முதலாக அணுசக்தி நிலையத்தை ஏற்படுதிய நாடு?
  இங்கிலாந்து.
- இலங்கையை ஆட்சி செய்த முதலாவது அரசி யார்?
  அனுலாதேவி.



ஹலோ குட்டீஸ் புள்ளி வைத்துள்ள பகுதிகளை வண்ணம் பூசி மறைந்திருக்கும் உருவத்தைக் கண்டு பிடிக்க உங்களால் முடியுமா?



ஷைனைவ்.
தரம் 5.
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.




ஜெனிபர் ஸ்டீபன்.
தரம் 2.
புனித மரியாஸ் தேசிய கல்லூரி,
திருகோணமலை.

## சிறுவர் கைவண்ணம்

அரிந்தலிங்கம் வசந்தன்.
தரம் 12 (கலைப்பிரிவு).
முல்லைத்தீவு மகா வித்தியாலயம்,
முல்லைத்தீவு.



இ. க்லைன்.
தரம் 9.
கொடிகாமம் தி.மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.



## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 28



### பாராட்டுப் பெறுவோர்...

1. கோ.ஸ்ரீலா,
   தரம் 2
   வெற்றியின் நம்பிக்கை இல்லம்,
   94, மடத்துவீதி, மன்னார்.
2. டி.ஆர். ஜெனிங்ஸ் டிவின்ஸ்ரன்,
   தரம் 4,
   கிங்ஸ்ரன் சர்வதேசக் கல்லூரி,
   முகத்துவாரம், கொழும்பு- 15.
3. ஏ.றுஸைகயா,
   தரம் 5,
   அக்/ பொத்துவில் அல்- இர்பான் பெண்கள் கல்லூரி, பொத்துவில்.
4. ஆர்.வர்ஷினி,
   தரம் 1,
   பலாங்கொடை தமிழ் மகா வித்தியாலயம்
5. எம்.ஏ.பஸ்மா,
   தரம் 4 டி,
   கே/ மதீனா தேசிய பாடசாலை.

முதலிடம் பெற்றவர் - வி.அனோஜன், தரம்- 03,
நெடுங்கேணி மகா வித்தியாலயம், நெடுங்கேணி.

### அழகாக நிறம் தீட்டுங்கள் 31



தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

SPECIAL COLLECTION

# இந்தியா மிகக் கஷ்ட.....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

உளவு மற்றும் பாதுகாப்புத் துறைகளுடன் பழகியவர் பாலசிங்கம்.

இந்த நாராயணனும் முன்னர் உள்ளகப் புலனாய்வுத்துறைத் தலைவர் பதவிவரை புலனாய்வுத் துறையில் அதி உச்ச நிலைகளில் இருந்தவர். பின்னர் இந்திய உளவுத்துறையான 'றோ'வுக்கும் தலைமை வகித்தவர்.

எண்பதுகளின் முற்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியத் தரப்பின் ஆயுதப் பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பது உட்படப் பல்வேறு விடயங்களைக் கையாளுகின்றபோது இந்த நாராயணனுக்கும் பாலசிங்கத்துக்கும் இடையே சினேகபூர்வ தொடர்பாடல்கள் நெருக்கமாக இடம்பெற்றிருக்கின்றன.

தனக்கும், தலைவர் பிரபாகரனுக்கும் எம்.கே.நாராயணன் தனிப்பட அளித்த விருந்துகளில் தாங்கள் இரண்டு, மூன்று தடவைகள் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூட பாலா அண்ணன் குறிப்பிட்டு, அப்போது இடம்பெற்ற சுவாரசியமான சம்பவங்கள் பற்றிய நினைவையும் அவ்வப்போது என்னுடன் பகிர்ந்துகொண்டிருக்கின்றார்.

இத்தகைய அதிகாரிகளோடு பாலா அண்ணன் எப்போதும் சித்தாந்தங்கள், கொள்கைப் போக்குகள் குறித்து ஆழமாக எடுத்து விடுவார். அவற்றைக் கேட்டு சிலர் மலைப்பதுண்டு; மயங்குவதுண்டு. அத்துடன், அவரது இராஜதந்திர செயன் முறைகளாலும் நட்புறவுப் போக்காலும் எதிர்த்தரப்பில் தம்முடன் சினேகபூர்வமாகப் பழக முன்வருபவரைக் கட்டுப்போடும் தன்மை பாலசிங்கத்திடமிருந்தது. நோர்வேயின் அமைச்சர் எரிக் சொல்ஹெய்மிலிருந்து ஜனாதிபதி பிரேமதாஸா வரை பாலசிங்கத்தின் நட்புறவில் மயங்கிய பிரமுகர்கள் பலர் இருக்கின்றனர். அந்த வரிசையில் இப்போது இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனும் ஒருவர் என்று கூறுவது மிகையாகாது.

ஆனால் தலைவர் பிரபாகரன் குறித்து நாராயணனின் சிந்தனைப் போக்கு வேறு விதமாக இருந்தது என்பதும் பாலா அண்ணனுக்குத் தெரியும்.

நேரில் பார்த்துப் பேசிப் பழகும்போது பெரிதும் மென்மையானவராக - அமைதியானவராக - காணப்படும் தலைவர் பிரபாகரனிடம் இரும்பை ஒத்த உறுதியும், வளைந்துகொடாத திமிர்த் தடிப்பும், செயல்களில் மமதைச் செருக்கும் இருப்பதைத் தாங்க முடியாதவராக நாராயணன் இருந்து வருகின்றார். தமது நாட்டின் வல்லாதிக்கத்துக்குக் கட்டுப்பட மறுக்கும் பிரபாகரன் குறித்து நாராயணனுக்கு எப்போதுமே எரிச்சலும் அதிருப்தியுமே இருந்து வருகின்றன.

தனிப்பட்ட முறையில் தம்முடன் நல்ல அபிப்பிராயமும், இயக்கத்தின் தலைவருடன் எரிச்சலும் என்ற இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கும் நாராயணன் மூலம் புதுடில்லி - புலிகள் உறவில் ஏதேனும் மாற்றத்தைக் கொண்டுவர முடியுமா என்பதுதான் பாலா அண்ணனின் சிந்தனையாக இருந்தது.

அதற்காக அவர் 'ஸீரியஸாக' முயற்சி எடுத்தார். கடந்த ஆண்டில் - 2006ஆம் ஆண்டு நடுப்பகுதியில் - அந்த முயற்சிக்கான காய் நகர்த்தல்களை அவர் தம்பாட்டில் மேற்கொண்டார்.

அதில் அவரால் ஏதும் சாதகமாக ஈட்ட முடிந்ததா? அந்த முயற்சி எப்படி முன்னெடுக்கப்பட்டது? இடை நடுவில் யார் தரகராக நின்றார் என்பதையெல்லாம் அடுத்து வரும் வாரங்களில் மேலோட்டமாகப் பார்ப்போம்.

தலைவர் பிரபாகரனுக்கும் ராஜீவ் காந்திக்கும் இடையில் அன்டன் பாலசிங்கம், தமிழக அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரன் ஆகியோர் சமேதராய் இடம்பெற்ற சந்திப்பில் - நான் இந்தவாரம் இக் கட்டுரை தொடரில் குறிப்பிடும் எம்.கே.நாராயணனும் இடம்பெற்றிருந்தார் என்பதை - கடந்தவாரம் கோடி காட்டியிருந்தேன் அல்லவா? அந்தச் சம்பவம் தொடர்பான சுவையான அம்சம் ஒன்றையும் அடுத்த வாரங்களில் பார்ப்போம்.

நான் இப்போது மேலோட்டமாக அவிழ்க்கும் சில தகவல்களில் ஆழமான பல அம்சங்கள் பொதிந்திருந்தாலும் நான் அவற்றை வெறுமனே வார்த்தைச் சொல்லாடல்களில் இங்கு கோடிகாட்டிச் செல்வதோடு விட்டுவிடுகிறேன். அவற்றுக்குள் ஆழமாகப் பொதிந்திருக்கும் தகவல்களையும் நுட்பமான அம்சங்களையும் வெளிக்கொணர்வதற்கான காலம் இன்னும் கனியவேயில்லை என்பதுதான் எனது மதிப்பீடும் முடிவும். ஆகவே, அவற்றை இப்போது வாசகர்களுடன் நான் பகிர்ந்துகொள்ளாமைக்காக வாசகர்கள் என்னை மன்னிப்பீர்களாக!

(வளரும்)

# சுல்தான் நீ எங்கே....

(...ஆம் பக்கத் தொடர்ச்சி)

...ளை வேண்டுமானாலும் பிடித்துக்கொள்கிறேன். இதை இறங்கச் சொல்லுங்கள்!''

''தட்ஸ் த போய்! சுல்தான் இறங்கு!''

இறங்கிவிட்டது.

'நீ பிடித்துக்கொள்ள வேண்டாம். நான் பிடித்துக் கொள்கிறேன். நீ தலையில் பேண்டேஜ் போல் இந்த சாதனத்தைக் கட்டிவிடவேண்டும். அவ்வளவுதான்.''

''செய்கிறேன் டாக்டர்''

டாக்டர் அவர்கள் சுல்தானை பிடித்துக்கொள்ள அந்த இரண்டு சாதனங்களையும் பதித்து பாண்டேஜ் போல என்னைத் தலையில் இறுக்கக் கட்டச்சொன்னார். சுல்தான் தன் பற்களை விரித்து என்னைப் பார்த்த பார்வையில் 'உன்னை அப்புறம் கவனித்துக் கொள்கிறேன்' என்றது.

''இது சாதாரணமாகவே புத்திசாலிக்குரங்கு. இதற்கு மூளையில் 'பல்ஸ்' கொடுத்தால் இதைச் சமாளிப்பது சற்றுச் சிரமமாக இருக்கலாம். கூண்டுக்குள் அடைத்துவிடலாம்'' என்று சுல்தானைக் கூண்டுக்குள் அடைத்துப் பூட்டிவிட்டார்.

''நீயும் குரங்கு விந்தையில் சேர்ந்துகொண்டுவிட்டாயா?'' என்று குறுக்கிட்டுத் திரும்ப - மாலதி,

''நீ ஊருக்குப் போகவில்லையா? நல்ல வேளை!'' என்றேன்.

''ரக்ஸிக்கு அனுப்பியிருக்கிறேன்'' என்றாள்.

''மாலதி, கான்ஸல் பண்ணு உன் பிரயாணத்தை. சுல்தானைக் கூண்டில் அடைத்தாகிவிட்டது. இதோபார், இனி இதனால் உனக்கு ஒரு உபத்திரவமும் கிடையாது'' என்றார் டாக்டர்.

''கூண்டில் அடைக்கவேண்டியது வேறு இரண்டு ஆசாமிகளை. எத்தனை நேரம் ரக்ஸி கொண்டுவர!''

''மாலதி டார்லிங்! இனிமேல் சுல்தானைக் கூண்டுக்குள் வைத்துத்தான் கண்காணிப்பேன்.''

வாசலில் கார் ஹோர்ன் சப்தம் கேட்டது-

''மாலதி, போகாதே!''

''இந்தக் குரங்கு இந்த வீட்டில் இருக்கும் வரை நான் இங்கே இருக்கப் போவதில்லை. காலையில் என்ன செய்தது தெரியுமா?''

''சொன்னார்! அன்போர்ச்சுனேட்'' என்றேன்.

''மாலதி , டாக்டர் க்யூலர் என்ற ஜெர்மானியர்...'' என்றார் டாக்டர்.

''மார்த்தாயா, ஆரம்பித்தாகிவிட்டது... டாட்டா!''

மாலதியின் பின்னே நானும் டாக்டரும் தொடர அவள் வைராக்கியமாக இறங்கிக் கீழே வந்தாள். வாசலில் டாக்ஸி இல்லை. வேறு ஏதோ கார் சப்தம் கேட்டிருக்கின்றது.

''மாலதி, இப்பொழுது கூட லேட் இல்லை. இனி உனக்கு எந்தத் தொந்தரவும் கிடையாது. சுல்தானுக்கு மனிதத் தன்மை கொடுத்துவிட்டேன். நாகரிகம் கொடுத்துவிட்டேன். அவன் இனி பாத்ரூமுக்குள் எல்லாம் எட்டிப் பார்க்க மாட்டான்...''

(மிகுதி அடுத்த வாரம்)

நன்றி சுஜாதா.

# ராசி பலன்

24-12-2007 முதல் 30-12-2007 வரை

பொ.சந்திரலிங்கம்

## மேஷம்



அஸ்வினி, பரணி, கார்த்திகை1.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர். உதவி எதிர்பார்ப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையும். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில்துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. எதிர்ப்பார்ப்புகள்நிறைவேறும்.

## துலாம்



சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3

காரியசிந்தனையுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். தாய்நலம், தந்தை நலமில்லை. நல்ல இருப்பிடம், வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகளுக்கான வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம்குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## இடபம்



கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியத்தடை நிலவும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனங்கள் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளில் கடும் அவதானம் வேண்டும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் மெதுவான முன்னேற்றம் இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## விருச்சிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள்கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம், பகைவரால் தொல்லையுண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். திருமண வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை வரலாம்.

## மிதுனம்



மிருகசீரிடம்3,4 திருவாதிரை, புனர்பூசம்1,2,3

காரியத்தடை நீடிக்கும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம், இருப்பிடத்தில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகளுக்கான வாய்ப்பு பிரகாசமாக இருக்கும். அதிஸ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். நண்பர்கள் உதவி செய்வர்.


## தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1

காரியத்தடை இருக்கும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. விடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் உண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகளுக்கான வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் இருக்காது, தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.


## கடகம்



புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம் தந்தை நலமில்லை. நல்லவீடு, வாகனம்அமையலாம். மாணவர்கள்கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு உண்டு. முதலீடுகளின் மீது அவதானம் வேண்டும். அதிஷ்ட்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.


## மகரம்



உத்தராடம்2,3,4 திருவோணம், அவிட்டம்1,2

காரியத்தடை இருக்கும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர்அயலவர்விலகியிருப்பர். தாய் நலம், தந்தைநலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள்கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.


## சிம்மம்



மகம், பூரம், உத்தராடம் 1

காரியத்தடை நீடிக்கும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நல்ல வீடு, வாகனம் அமையலாம். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.


## கும்பம்



அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகியிருப்பர். பெற்றோர் நலமில்லை. விடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகளுக்கான வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும்.


## கன்னி



உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர்கள் அயலவர்கள் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள்கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு,பகைவிலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## மீனம்



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு, பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர்விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தைநலமில்லை. நல்ல விடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகளுக்கான வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும்.

# நத்தார் விழாவுக்கு 'ஸ்பெஷல் சரக்கு'




நத்தார் விழாவுக்கு உலகமே உற்சாகமாக தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில், ஒரு கோப்பை மது ரூ.78 லட்சம் என்ற விலையில் பரிமாற தயாராகி வருகிறது லண்டனில் உள்ள இரவு விடுதி ஒன்று.

லண்டனில் உள்ள மொவிடா நைட் கிளப் தான் இந்த திட்டத்தை அறிவித்துள்ளது.

இந்த இரவு விடுதியில் ஏராளமான பிரபலங்கள், விளையாட்டு நட்சத்திரங்கள், கோடீஸ்வரர்கள்தான் வாடிக்கையாளர்கள். இந்த அறிவிப்பை வெளியிட்ட உடனேயே, பலர் தங்களின் இருக்கைகளை முற்பதிவு செய்திருப்பதுடன், இந்த மதுவுக்கும் ஓடர் செய்துள்ளனர்.

பிரிட்டனில், என்ன ஓர் அற்புதமான கார் என்று விளம்பரம் செய்யப்படும் போர்ஷ் பாக்ஸ்டெர் ஓபன் காரின் விலை 78 லட்சம்.

அங்கு ஆண்டுக்கு ரூ. 78 லட்சம் சம்பாதித்தால், அதிகம் சம்பாதிப்போர் பட்டியலில் ஓர் இடம் கிடைக்கும்.

அப்படி இருக்கும்போது, இந்த மதுவுக்கு அப்படி என்ன விசேஷம்?

இந்த மதுவில் லூயிஸ் 12 - பிரண்டி, அரை போத்தல் கிறிஸ்டல் ரோஸ் ஷம்பெய்ன் சிறியளவில் பிரவுன் சுகர் கலந்து மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட வாசனைத் தூள் உள்ளடங்கும். சாப்பிடக்கூடிய 24 காரட் தங்க இழைகளை கொஞ்சம் தூவி, இரண்டு பாதுகாவலர்களுடன் பரிமாறுவர். அரங்கில் கண்ணைக் கவரும் கலைநிகழ்ச்சிகளும், இசையும் உண்டு.

பாதுகாவலர்கள் ஏன்?

நீங்கள் மதுவை, அதனுடன் சேர்த்து தரப்படும் உணவுடன் கொஞ்சம் கொஞ்சமாக ருசி பருகி முடிந்தவுடன், மதுபரிமாறப்பட்ட குவளை அடிப்பகுதியில், 11 காரட் வைர மோதிரம் இருக் அதை நீங்கள் எடுத்துச் செல்லும்வரை பாதுகாவ உடனிருப்பார்கள்.

இதற்காக முதலில் ஓடர் செய்தவர் லண்டனி பிரபல ரியல் எஸ்டேட் தொழிலதிபரும், நிர்வாக 28 வயது மேக்ஸ் ரெய்ன்ஸ் என்பவர். தனது காத வைர மோதிரத்தை பரிசளிக்க உள்ளதாக அவர் அ





